04 DEC 2014

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 008 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 18, வியாழக்கிழமை 04.12.2014

**காலநிலை**
மேக மூட்டமான காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் வீசும்.

# தங்கம் வாங்க சென்ற தமிழர் தவிப்பு

## ஆண்கள் பெண்களாகப் வேறாக்கப்பட்டு அதிகாலை வரை இராணுவ முகாம்களில் அடைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4
போரின் போது வடக்கு தமிழ் மக்களால் கைவிடப்பட்ட தங்க நகைகளின் ஒரு தொகுதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இன்று கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைப் பெறுவதற்குக் கிளிநொச்சியில் இருந்து அழைக்கப்பட்டவர்கள், ஆண்கள் பெண்கள் என வேறாக்கப்பட்டு இராணுவ முகாம்களுக்கு அடைக்கப்பட்டனர் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். அவர்கள் தமக்கு நகைகள் வேண்டாம் வீட்டுக்குச் செல்ல விடுங்கள் என்று கேட்டபோதும் அதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்தனர் என்றும் உறவினர்கள் கூறினர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் நகைகளைப்பெறுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் நேற்று மதியம் அந்தந்தப் பிரதேச இராணுவ முகாம்களுக்கு அழைக்கப்பட்டு இராணுவத்தினரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மாலை 6 மணியளவில் ஆண்கள், பெண்கள் வேறாக்கப்பட்டு இராணுவ முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். தம்மைக் கொழும்பு அழைத்துச் செல்வதாகக் கூறினரே தவிர, இராணுவ முகாம்களுக்குள் தங்க வைப்பது குறித்து கூறப்படவேயில்லை என்று இராணுவ முகாம்களுக்குள் இவ்வாறு அடைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
இவ்வாறு இராணுவ முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்ட பெண் ஒருவரின் கணவர் 'உதயனிடம்' தொடர்பு கொண்டு கூறுகையில்,
"ஒரு கிழமைக்கு முதல் இராணுவம் கோல் பண்ணி எங்கட நகையள் இருக்கிறதா சொல்லிச்சினம். 3ஆம் திகதி அந்தந்தப் பகுதி இராணுவ முகாம்களுக்கு வரச் சொன்னவ கொழும்புக்குப் போகோணும் எண்டு. அதன்படி இண்டைக்கு 12 மணிக்கு என்ட மனைவி போனவா. அங்க பதிஞ்சுபோட்டு பின்னேரம் 6 மணிக்கு நவம் அறிவுக் கூடம் இருந்த இடத்தில இருக்கிற இராணுவ முகாமில தங்க வைச்சிருக்கினம். கைத்தொலைபேசி மூலம் மனைவி இத எனக்குச் சொன்னா.
பக்.25

## ஆசியாவின் பணக்காரர்கள் மஹிந்த, நாமல்

ஆசியாவிலேயே பணக்காரர்கள் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் மஹிந்த ராஜபக்ஷவும், 14 ஆவது இடத்தில் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் உள்ளனர். இது தான் ஆசியாவின் அதிசயம். ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
பக்.23

## பிரிவினையை ஏற்படுத்துகிறது ஓமந்தைச் சாவடி

போர் முடிந்து 5 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தற்போதும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வடக்குக்கும் தெற்குக்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றன. அதற்கு எதிராக நாம் தொடர்ந்து போராடுவோம். இவ்வாறு கூறியுள்ளது அன்புக்கும் நட்புக்குமான அமைப்பு. எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளதாக அந்த அமைப்புக் கூறியுள்ளது.
பக்.02

## சீனக் கப்பல்கள் குறித்து அரசு சந்தேகம்

இலங்கைக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட சீனக் கப்பல்கள் மீன்பிடியை விடுத்து வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதா என இலங்கை அரசு சந்தேகம் வெளியிட்டுள்ளது. 8 சீனக் கப்பல்களில் 3 மட்டுமே இரு தடவைகள் பணம் செலுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பக்.02

## பேயாக வந்தேனும் மஹிந்தவை பழி தீர்ப்பேன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்தவைத் தோற்கடிக்க முடியாவிட்டால், அடுத்த ஜென்மத்தில் பேயாக வந்தேனும் மஹிந்தவைப் பழி தீர்ப்பேன். மஹிந்தவைத் தோற்கடிக்கும் வரை எனது போராட்டத்தைக் கைவிட மாட்டோம். – என்று ஆவேசமாகக்கூறினார்ராமஞ்ஞபீடத்தின் அனுநாயக்க தேரர் கிராம்பே ஆனந்த தேரர்.
பக்.24

## தேர்தலை முன்னிட்டு மூன்று நாள் விடுமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 4
ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதனையடுத்து நாடுமுழுவதிலுமுள்ள அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு மூன்று நாள்கள் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
ஜனவரி மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன் பாப்பரசரின் இலங்கைப் பயணத்தை முன்னிட்டு, எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை கொழும்பிலுள்ள 43 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
பக்.25

## மஹிந்தவின் 'கட்–அவுட்'டை எதிர்த்தவர் தாக்கப்பட்டார்

கொழும்பு, டிசெ.4
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கட்–அவுட் ஒன்றை வைக்க அவரது ஆதரவாளர்கள் எடுத்த முயற்சிக்கு எதிர்ப்பை தெரிவித்த ஒருவரது வீடு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.
திவுலப்பிட்டிய, குடகம்மன பிரதேசத்தைச் சேர்ந்த துசித வீர சிங்க என்பவரின் வீட்டின் மீது இன்று
பக்.25



புலிகளால் கொல்லப்பட்டவர்கள் என்று கூறப்படுவோரின் எச்சங்களைத் தேடும் பணிகள் நெடுங்கேணி– சமணங்குளம் எல்லைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்டது.
பக்.26

# அரசு கவலையில்

## மைத்திரி பாலவுக்கு ஆதரவு அளிக்கும் ஹெல உறுமயவின்முடிவால்

யாழ்ப்பாணம், டிசெ. 4
ஜாதிக ஹெல உறுமய அரசிலிருந்து வெளியேறி, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளமை தொடர்பில் கவலையடைவதாகத் தெரிவித்துள்ள இலங்கை அரசு, ஹெல உறுமயவின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு மருதானையில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா இவ்வாறு தெரிவித்தார்.

**மைத்திரிபால பொய் சொல்லுகின்றார்**

மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக்குவதாக கூறுரைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அரசமைப்பின் 37 ஆவது சரத்தில் இது குறித்து தெளிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.
நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி, நோயால் அதாவது மனநோய், இருதய நோய் போன்ற பாரதூரமான நோயால் பாதிக்கப்பட்டிருப்பின், அவசர தேவைக்காக அதாவது சிகிச்சை போன்றவற்றுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியேற்படின் மட்டுமே தனது இடத்திற்கு பிரதமரை நியமிக்க வேண்டும். இந்த அதிகாரம் மட்டுமே ஜனாதிபதிக்கு இருக்கின்றது.
நாடாளுமன்றில் அதிக பெரும்பான்மையால் தெரிவு செய்யப்பட்டவரே பிரதமராக நியமிக்கப்படுவார். அப்படியானால், தற்போதைய பிரதமர் டி.எம்.ஜயரத்தனவே பிரதமராக இருப்பார். ஆனால், மைத்திரிபால தான் பதவியேற்றவுடன் ரணிலை பிரதம
பக்.25

## இந்திய மீனவர்கள் 38 பேர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், டிச.4
யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 38 பேர் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் படகுகளுடன் இந்திய மீனவர்கள்
பக்.25

## ஒன்பது பேர் களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 4
ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 8 அரசியல் கட்சிகளும், ஒரு சுயேச்சைக் குழுவும் இதுவரையில் கட்டுப் பணம் செலுத்தியுள்
பக்.25

# 300 மூடை சீனியுடன் மாயமானது லொறி

யாழ்ப்பாணம், டிச. 4
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு300மூடைகள்சீனியை ஏற்றிக்கொண்டு வந்த லொறி ஒன்று, கடந்த 30ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளது. அதனை ஏற்றி வந்தவர்களுடனும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றுமுறைப்பாடுபதிவுசெய்யப்பட்டுள்ளதாகக்கோப்பாய்பொலிஸார் தெரிவித்தனர்.

சீனி மூடைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருமாறு பணம் கொடுத்தனுப்பிய உரிமையாளர்களே செவ்வாய்க்கிழமை இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்.நகர்மற்றும்திருநெல்வேலி பகுதிகளைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். வியாபாரிகள் இருவரும் லொறியொன்றில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சீனி மூடைகளை அனுப்பியுள்ளனர். அதனை ஏற்றிவந்த லொறியின் சாரதியும், உதவியாளரும் புத்தளம் வரை கைத்தொலைபேசித் தொடர்பில் இருந்தனர். அதன் பின்னர் அவர்களுடனான தொடர்பு கிடைக்கவில்லை என்று முறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருவதாகவும் கூறினர். (ற–4)

# தமிழ், சிங்கள பிரிவினையை ஏற்படுத்துகிறது ஓமந்தை சாவடி

## அகற்றப் போராடுவோம் என அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு தெரிவிப்பு

வவுனியா, டிசெ.4
போர் முடிந்த பின்னும், ஓமந்தை சோதனைச்சாவடியில் கடைப்பிடிக்கப்படும்நடவடிக்கைகள்வடக்குக்கும் தெற்குக்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றன. அதற்கு எதிராகத்தொடர்ந்து போராடுவோம் என்று கூறியுள்ளது அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு.

வவுனியா தம்பா விடுதியில் அந்த அமைப்பால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட 'சுதந்திரப் பயணம்' என்றதலைப்பிலானஊடகசந்திப்பிலேயே இவ்வாறு கூறப் பட்டது.

"கடந்த 30 ஆண்டுகளாக நீடித்த போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனாலும் வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் சுதந்திரமாகச்செயற்படமுடியவில்லை. அரசியல், பொருளாதார ரீதியாக அவர்கள் பாதக்கப்பட்டுள்ளனர். வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகள்எதிர்கொள்ளும்பிரச்சினைகளைவெளிக்கொணர்ந்து,அவற்றுக்கான தீர்வைப் பெறும் வகையில் அன்புக்கும் நட்புக்கு மான வலையமைப்பு கடந்த ஓராண்டா கச் செயற்படுகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

முன்னாள்புலிஉறுப்பினர்கள்என கைது செய்யப்பட்ட பலஇளைஞர்கள், யுவதிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டுசமூகத்துடன் இணைக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. அவர்கள் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் என மூன்று இனங்கள் வாழுகின்ற போதும் எமது கலாசார பண்பாடுகளையும் அடையாளங்களையும்எம்மால் பேண முடியாது உள்ளது.

போர் முடிந்து 5 வருடங்கள் முடிந்துவிட்டது. ஆனால் ஓமந்தை சோதனை சாவடி அகற்றப்படவில்லை. அதற்கு பல காரணங்களை சொல்கிறார் கள். ஆனால்அவர்கள்சொல்லும் காரணங்கள் தெற்கில் இடம் பெறவில்லையா? அங்கேயும்களவு, துப்பாக்கிச்சூடு, போதைவஸ்து பாவனை என பலவும் நடக்கின்றன. அங்கு இப்படி சோதனைச் சாவடிகள் இல்லை. இங்கு மட்டும்ஏன்? இது வடக்கையும் தெற்கையும் பிரித்து பிரிவினையை ஏற்படுத்துகிறது. தமிழ், சிங்களம் என்ற பிரிவினையை இந்த ஓமந்தை சோதனைச் சாவடி ஏற்படுத்துகிறது. இது நீக்கப்பட வேண்டும். இவற்றுக்காக நாம் தொடர்ந்து இளைஞர்களை திரட்டி போராடுவோம்." – என்று அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற–402)

# தெருவோர வியாபாரம் குறித்து முடிவில்லை

## மன்னார் நகர சபையுடனான கூட்டத்தின் நடுவே வெளியேறினர் வர்த்தக சங்கத்தினர்

மன்னார், டிசெ.4
பண்டிகைக் கால தெருவோர வியாபாரத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பான அவசரகலந்துரையாடலில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகாரணமாக மன்னார் வர்த்தக சங்கப் பிரதிநிதி வெளிநடப்புச் செய்துள்ளார். அதனால் கலந்துரையாடல் இடைநடுவே கைவிடப்பட்டது.

பண்டிகைக்கால தெருவோர வியாபாரத்தை நிறுத்தக் கோரி மன்னார் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்கள் நேற்று முன்தினம் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர். அதையடுத்து மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் நகர சபையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை 10 தினங்களுக்கு தெருவோர வியாபாரத்துக்கு அனுமதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்களின் நலன் கருதி அந்தக் கால எல்லையை நீடிக்க வேண்டும்என்று கோரிக்கை விடுத்தனர். அதற்கு வர்த்தக சங்கப் பிரநிதிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதுகுறித்து நீண்ட நேரம் வாக்குவாதம் நடத்தது. அதன்தொடர்ச்சியாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இருந்து இடைநடுவே வெளியேறினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புகளின்கருத்துகள்பெறப்பட்ட நிலையில் கூட்டம் நிறுத்தப்பட்டது. (ற–56)

### மகளுக்கு பாலியல் தொல்லை; தந்தை விளக்க மறியல்

தன்னுடைய மகளை பாலியல் தொல்லைக்கு உட்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள தந்தையை எதிர்வரும்17.12.2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் இன்று (03.12.2014) உத்தரவிட்டுள்ளது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த குறித்த நபர் தனது 4 வயது மகளை பாலியல் தொல்லைக்கு உட்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோதே மேற்படி விளக்க மறியல் உத்தரவை நீதவான் எம்.ஐ. வகாப்தீன் விதித்தார்.

# கல்வி நிர்வாக சேவைக்கான அரசியல் நியமனத்தை நிறுத்து

## அமைச்சு முன் ஆசிரியர் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், டிச 4
இலங்கைக்கல்விநிர்வாகசேவை வெற்றிடத்துக்குப் படித்தவர்களை வீட்டில் நிறுத்திவிட்டு ஏனையவர்களை அரசியல் ஆதரவில் நியமனம் செய்யாதே என்று அரசையும், கல்வி அமைச்சையும் வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் மத்திய கல்வி அமைச்சு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வாறு நியமிப்பதை இடைநிறுத்துவதாக உறுதியளிக்கப்பட்ட பின்னர் அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு என கடந்த வருடம் பரீட்சை இடம்பெற்றது. அதில் 22 ஆயிரம்பேர் தோற்றியிருந்தனர். அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 427 பேருக்கு நியமனம் வழங்கிவிட்டுத் தகுதியுடைய ஏனையவர்களுக்கு நியமனம் வழங்கவில்லை. தகுதி இல்லாத 728 பேரை நியமிக்க இலங்கை அரசு கல்வி அமைச்சு ஊடாகச் சுற்றறிக்கை வழங்கியுள்ளது. அதனைக் கல்வி அமைச்சரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அந்த 728 பேரும் அரசியல் ரீதியாகவே நியமனம் செய்யப்படுவதற்கானஅனைத்துநடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் பதில் கடமையாற்றுபவர்களே. நிர்வாக சேவை பிரமாணங்களின் படி அவர்களுக்கு அவ்வாறு நியமனங்கள் வழங்க முடியாது.

தற்போது வடக்கு–கிழக்கு உட்பட இலங்கையில் கல்வி நிர்வாக சேவையில் 682 வெற்றிடங்கள் உள்ளன.அந்தவெற்றிடங்களுக்கு வீட்டில் நிறுத்தப்பட்டுள்ள தராதரமுடையவர்களை நியமிக்குமாறு கோரியுள்ளோம். நாம் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டிருந்தபோது பொலிஸார் வந்து பார்த்து விட்டு கல்விஅமைச்சின்செயலாளரிடம் அழைத்துச் சென்றிருந்தனர். அவருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போது தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் நியமனம் வழங்கமாட்டோம் என்றுகல்வி அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க தெரிவித்துள்ளார். – என்றார். (த–4)

# சிங்கக் கொடியுடன் சீனக் கப்பல்கள் கடலில் வேறு நடவடிக்கைகளிலா?

## இலங்கைக்கு வந்தது சந்தேகம்

இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட சீனக் கப்பல்கள், மீன்பிடிநடவடிக்கையை விடுத்து வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதா? என்று இலங்கை அரசு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

'8 சீனக் கப்பல்களில் மூன்று கப்பல்கள் மாத்திரமே, இரண்டு தடவைகள் பணம் செலுத்தியுள்ளன. ஏனைய கப்பல்கள் எதுவித பணத்தையும் செலுத்தவில்லை. ஐந்து கப்பல்கள் எந்த மீன்களும் இன்றிக்கரையைவந்தடைந்துள்ளன. குறித்த கப்பல்கள் மீன்பிடியில் மாத்திரமன்றி வேறு ஏதாவது வர்த்தகங்களில் ஈடுபடுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது' என்று,கடற்தொழில்நீரியல்வளத்துறைபதில்அமைச்சர் சரத்குமார குணரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபடும் சீனக் கப்பல்கள் தமது வருமானத்தில் 10 வீதத்தை இலங்கை அரசுக்குச் செலுத்த வேண்டும். பிடிக்கப்படும் மீன்கள் கரைக்குக் கொண்டு வந்துவிற்பனைசெய்யப்படவேண்டும். இதன்மூலம்பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தொகுதி சீனக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இலங்கைத் துறைமுகங்களில் இருந்து இலங்கையின் தேசியக் கொடியுடன் சென்று சர்வதேசக் கடற்பரப்பில், சீன மீன்பிடிக் கப்பல்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தன. 8 சீனக்கப்பல்களில் மூன்று கப்பல்கள் மாத்திரமே, இரண்டு தடவைகள் பணம் செலுத்தியுள்ளன. ஏனைய கப்பல்கள் எதுவித பணத்தையும் செலுத்தவில்லை. அத்துடன்ஏனைய ஐந்து கப்பல்களும் எந்த மீன்களும் இன்றியே கரையை வந்தடைந்துள்ளன.

இதில் ஏதோ இரகசியமொன்று மறைந்துள்ளது. அந்தக் கப்பல்களில் பிடிக்கப்பட்ட மீன்கள் நடுக்கடலிலேயே வேறு நாடுகளுக்கு விற்கப்பட்டு விட்டனவா அல்லது அவை மீன்பிடி மாத்திரமின்றி வேறு வர்த்தகங்களில் ஈடுபடுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள் ளது– என்றார். (த–5)

வலி. தெற்கு பிரதேச சபை
04 DEC 2014



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்தவொரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். சக ஊழியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**இடபம்:** சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நன்மைதரும்.

**மிதுனம்:** மரியாதையும், கௌரவமும் அதிகரிக்கும். எல்லாதரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள்.

**கடகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எழுத்து துறையில் இருப்பவர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

**சிங்கம்:** நீங்கள் செய்யும் காரியங்களுக்கு எல்லா தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் நீங்கும். சக ஊழியர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

**கன்னி:** தொழிலில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பகைகள் விலகும். அடுத்தவர்களால் இருந்த பிரச்சினைகள் சரியாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** அரசு தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரம் சிறப்படையும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சகபணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்கள் உங்களை அனுசரித்து செல்வார்கள். பேச்சின் இனிமை சாதுரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும். எதிர்காலத்துக்கு உதவக்கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும்.

**மகரம்:** உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் ஏற்படும். மனகுழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். ஆனால் மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாகச் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். செயல் திறன் அதிகரிக்கும்.

**மீனம்:** குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குழந்தைகள் திறமையைக் கண்டு அவர்களைப் பாராட்டுவீர்கள். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும்போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும்.

மனைவியும் ஒரு திருக்குறள் தான்!



நிறைய அதிகாரம் இருப்பதால்...!!!

# ரிலாக்ஸா வாசியுங்க...



ஒரு மாமியார் தன் மூன்று மருமகன்களின் குணத்தை சோதிக்க விரும்பினார். இதற்காக முதல்நாள் தன் மூத்த மருமகனுடன் நடைப் பயிற்சிக்கு சென்றார். அருகில் உள்ள ஆற்றில் குதித்தார். மருமகன் உடனடியாக குதித்து அவரைக் காப்பாற்றினார்.

மறுநாள் மூத்த மருமகனின் வீட்டு வாசலில் ஒரு 'டொயோட்டா கொரலா' புதுக் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் உங்கள் மாமியாரிடமிருந்து என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த நாள் மாமியார் தன்னுடைய இரண்டாவது மருமகனுடன் நடைப்பயிற்சி சென்றார். மீண்டும் ஆற்றில் குதித்தார். இரண்டாவது மருமகனும் ஆற்றில் குதித்து மாமியரை காப்பாற்றினார்.

அதற்கு அடுத்த நாள் காலை இரண்டாவது மருமகன் வீட்டு வாசலில் ஒரு புதிய 'டொயோட்டா கொரலா' கார் நின்றிருந்தது. அதில் உங்கள் மாமியாரிடமிருந்து என்று எழுதப்பட்டிருந்தது.

மூன்றாவது நாள் தனது மூன்றாவது மருமகனுடன் நடைப்பயிற்சி சென்றார். மீண்டும் ஆற்றில் குதித்தார். மூன்றாவது மருமகன் சிரித்து விட்டு நடந்து சென்று விட்டார். அவர் மாமியாரைக் காப்பாற்றவில்லை.

மறுநாள் காலை மூன்றாவது மருமகன் வீட்டு வாசலில் 'பிஎம்டபிள்யூ எம்5 கார்' நிறுத்தப்பட்டிருந்தது. அதன் கீழே உங்கள் மாமனாரிடமிருந்து என்று எழுதப்பட்டிருந்தது.

# தேவயானி எங்கே?



நடிகை தேவயானி தொட்டா சினுங்கி படம் மூலம் தமிழில் அறிமுகமானார். இதன் பின்னர் காதல் கோட்டை படம் இவரை பிரபலப்படுத்தியது. தொடர்ந்து தமிழ் திரைப்படங்களில் நடித்தார்.

2001 ஆம் ஆண்டு இயக்குநர் ராஜகுமாரனை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு இனியா, பிரியங்கா என்று இரு மகள்கள் உள்ளனர்.

திருமணத்துக்குப் பின்னர் சினிமாவில் நடிப்பதை குறைத்துக் கொண்டார். கோலங்கள் என்ற சின்னத்திரைத் தொடரில் நடித்தார். அதன் பின்னர் அவரைக் காணவில்லை.

தற்போது அவருக்கு 40 வயதாகிறது. வீட்டில் கணவர், குழந்தைகளை கவனித்து வந்த அவர் திடீரென ஆசிரியை வேலையில் இணைந்துள்ளார்.

'வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதில் எனக்கு எப்போதுமே ஆர்வம் உண்டு. ஆசிரியை வேலை பார்க்க வேண்டும் என்று விரும்பினேன். இதற்காக ஆசிரியர் பயிற்சி பாடசாலையில் சேர்ந்து படித்தேன். ஆசிரியர் பயிற்சிப் படிப்பை முடித்ததும் ஆசிரியை வேலையில் சேர முடிவு செய்தேன்.

எனது மகள்கள் படிக்கும் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்க விரும்பினேன். இப்போது அந்தப் பாடசாலையில் ஆசிரியையாக வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறேன். நான் பாடம் நடத்தும் வகுப்பில் 45 குழந்தைகள் உள்ளனர். ஆசிரியர் பணி எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது' என்கின்றார்–தேவயானி.



# சிரி சிரி

**மனைவி:** நான் செஞ்ச ஸ்வீட்டை என்னாலேயே சாப்பிட முடியலை... நீங்க எப்பிடி சாப்பிட்டீங்க?

**கணவன்:** என்னது... ஸ்வீட்டா...? குடிபோதையில... ஊறுகாய் என்று நினைச்சு மேஞ்சுட்டேன் செல்லம்மா...!!!






உங்க கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையா...?

# செய்திகள்

## தீப்பற்றியது மோ.சைக்கிள்; இருவர் காயம்

வவுனியா, டிசெ.4

வவுனியா நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பெற்றோல் நிரப்பிய மோட்டர் சைக்கிள் வெடித்துத் தீப்பற்றி எரிந்ததில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுப் புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிய மோட்டர் சைக்கிள் திடீரென வெடித்து தீப்பற்றியது. இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டர் சைக்கிள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் அதன் சாரதியும் பெற்றோல் நிரப்பிய ஊழியரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## பரிசளிப்பு விழா

அல்லைப்பிட்டி றோ.க.த.வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஒளி விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் வி.என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினும், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ராதா கிருஸ்ணன், கிராம சேவையாளர் எஸ்.ரட்ணேஸ்வரன், தீவக வலய ஆசிரிய ஆலோசகர் ரி.யூட்சிங் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (த–250)

# 1008 சுட்டி விளக்குகள் நாளை ஏற்றப்படும்

## வவுனியா சைவப்பிரகாசவில்

வவுனியா, டிசெ. 4

இந்துப் பண்டிகைகளில் ஒன்றான விளக்கீட்டை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் ஆயிரத்து எட்டு சுட்டி விளக்குகள் ஏற்றி வைக்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பண்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுடர் விளக்குகள் ஏற்றி வைக்கப்படவுள்ளன என்று வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர் செல்வி உமா. இராசையா தெரிவித்தார்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து மேற்படி சுடர்களை ஏற்றி வைப்பர் என்றும் அவர் மேலும் கூறினார். (த–421)



சர்வதேச மாற்று திறனாளிகள் தினம் நேற்று யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வுகள், பட்டிமன்றம் இடம்பெற்றதோடு நல் உள்ளம் கொண்ட பலரால் இரத்ததானமும் வழங்கப்பட்டது. (த–20)



# டிராக்டர் பெட்டியால் மூன்று விபத்துக்கள்

வலி.வடக்கு, டிசெ 4

உரும்பிராய் – மருதனார்மடம் வீதியில் உள்ள உரும்பிராய் விளாத்தியடி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியில் மோதுண்ட மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியில் கடந்த மூன்று நாள்களாகக் குறித்த உழவு இயந்திரப் பெட்டி எந்த வகையான பாதுகாப்பும் இல்லாமல் சிமேந்துக் கற்கள் நிரப்பிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் இரவு வேளையில் வீதியால் வந்த மோட்டார் சைக்கிள்கள் குறித்த உழவு இயந்திரப் பெட்டியுடன் மோதுண்டமையால் மூன்று விபத்துக்கள் இடம்பெற்று மூவர் படுகாயமடைந்தனர்.

பொதுமக்கள் கோப்பாய் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலை அடுத்து அதனைப் பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (த–86)

# வடக்கு அமைச்சுகளில் 10 ஆம் திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

வடக்கு மாகாண அமைச்சுக்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி மாற்றியமைக்கப்படவுள்ளன. அமைச்சர்களில் மாற்றம் ஏற்படாதபோதும், அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சுப் பொறுப்புக்களின் கீழ்வரும் திணைக்களங்கள் சில, ஏனைய நான்கு அமைச்சுக்களின் கீழும் பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் வடக்கு மாகாண அமைச்சரவை முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சரின் கீழ் 15 அமைச்சுப் பொறுப்புக்களும் திணைக்களங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன.

விவசாய அமைச்சின் கீழ் 5 அமைச்சுப் பொறுப்புக்களும் திணைக்களங்களும், சுகாதார அமைச்சின் கீழ் 2 அமைச்சுப் பொறுப்புக்களும் திணைக்களங்களும், மீன்பிடி அமைச்சின் கீழ் 5 அமைச்சுப் பொறுப்புக்களும் திணைக்களங்களும், கல்வி அமைச்சின் கீழ் 4 அமைச்சுப் பொறுப்புக்களும் திணைக்களங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன.

தற்போது முதலமைச்சரின் அமைச்சுப் பொறுப்புக்குள் வரும் சில திணைக்களங்களும், அமைச்சுப் பொறுப்புக்களுமே ஏனைய நான்கு அமைச்சர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலையில் புதிய அமைச்சுப் பொறுப்புக்களை அமைச்சர்கள் ஏற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

# சிறுமியைக் கடத்திய இளைஞர் மறியலில்

முல்லைத்தீவு, டிசெ.4

புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் 14 வயதுச் சிறுமியை கடத்திப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற 25 வயது இளைஞனை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் குறித்த 14 வயதுச் சிறுமியின் சகோதரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை பார்ப்பதற்கு அழைத்துச் செல்வதாகக் கூறிய இளைஞர் அவரைக் காட்டுப் பகுதிக்குள் அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

இதன்போது அவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இளைஞனைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும், சிறுமியை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தி வைத்திய அறிக்கையைச் சமர்ப்பிப்பதோடு சந்தேகநபரை வவுனியா வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (த–101)

# வன்னிக் குளங்களின் நீர் மட்டங்கள் உயர்வு

## மழையை அடுத்து நீர் வரத்து அதிகரிப்பு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டக் குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்து வருவதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்யும் பருவ மழையினால் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் ஓரளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதோடு கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய குளங் களின் நீர் வரத்துப் பகுதிகளில் மழை நீர் மிக வேகமாக வந்தடைகின்றது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான



இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்து வாய்க்காலான கனகராயன் ஆற்றுக்கு வவுனியா மாவட்டத்தின் கனகராயன்குளம் நிரம்பி வழிவதனால் போதிய நீர் வந்துகொண்டிருக்கின்றது.

நேற்றைய நிலவரப்படி 34 அடி கொள்ளளவான இரணைமடுக் குளத்தில் 26.6 அடி நீரும், 23.6 அடியினையுடைய கல்மடுக் குளத்தில் 22.3 அடி நீரும், 22 அடி கொள்ளளவினையுடைய அக்கராயன் குளத்தில் 17.8 அடி நீரும், கனகாம்பிகைக் குளத்தில் 9.9 அடி நீரும் உள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் நீர் 23அடியை அடைந்துள்ளதோடு இதன் கொள்ளளவு 25 அடி என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–101)

04 DEC 2014







# சிறுவர்கள், பெண்களுக்கு தனி பொலிஸ் நிலையம்

## பண்ணையில் நேற்று அடிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 4
சிறுவர்கள், பெண்கள் பிரச்சினைகளைத் தனித்துவத்துடன் கையாள்வதற்கெனத் தனியாகப் புதிய பொலிஸ் பிரிவுக் கட்டடம் அமைப்பதற்கான அடிக் கல் நடும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. யாழ். பண்ணையில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

அடிக் கல்லை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி.விமலசேன ஆகியோர் நட்டு வைத்தனர்.

சிறுவர், மகளிர் அமைச்சினால் சிறுவர், பெண்கள் பிரிவுக்குத் தனிப் பொலிஸ் நிலையம் அமைப்பதற்காக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியில் இருந்து இந்தப் பொலிஸ் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலசூரிய, யாழ். மாவட்டச் செயலக சிறுவர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-106)

# இறைச்சி விற்பனை போட்டியால் சச்சரவு

## பொலிஸுக்கு அறிவித்தும் பயனில்லை

வலி.வடக்கு, டிசெ. 4
கோழி இறைச்சி விற்பனையில் ஏற்பட்ட போட்டி காரணமாக விற்பனை நிலையத்தின் முன்னால் காட்சிப்படுத்தப்பட்ட விலைப் பட்டியல்கள் தினசரி துண்டு துண்டாகக் கிழித்து துவம்சம் செய்யப்படுகிறது.

இது குறித்து பொலிஸாரின் கவனத்துக்குத் தெரியப்படுத்திய போதும் துவம்சம் செய்யும் கீழ்த்தரமான வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட வியாபாரி விலைப் பட்டியலை தினசரி எழுதிக் காட்சிப்படுத்தி வருகிறார்.

இந்த விசித்திரப் போட்டி வியாபாரம் மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள ஒரு கிராமத்தில் இடம்பெற்று வருகின்றது.

வருமானத்தைக் கருத்தில் கொண்டு தற்பொழுது அனேகமான வீடுகளில் கோழி இறைச்சி விற்பனை இடம்பெற்று வருகின்றது. 500 மீற்றர் தூரத்துக்குள் இருவர் கோழி இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு வியாபாரியால் வீதியில் காட்சிப்படுத்தப்படும் விலைப்பட்டியல் அன்றிரவே துண்டுதுண்டாகக் கிழித்து துவம்சம் செய்யப்படுகிறது.

இதற்குத் தீர்வு காண முன்வந்துள்ள பாதிக்கப்பட்ட வியாபாரி 5 ஆயிரம் ரூபா செலவில் விலைப் பட்டியல் தயாரித்து காட்சிப்படுத்திய போதும் அந்தப் பட்டியலும் இரவோடு இரவாக மயாமாக மறைந்து விட்டது. இந்த கீழ்த்தரமான செயல் குறித்து மானிப்பாய் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தபோதும் துவம்சம் செய்யும் தொழில் தொடர்ந்தவண்ணமிருக்கின்றது. இதனால் விரக்தியடைந்த வியாபாரி தினசரி புதிதாக விலைப் பட்டியல் தயாரித்து வீதியில் தொங்க விடுவதில் ஈடுபட்டுள்ளார். (த-115)

# உவர்நீர்த் தடுப்பணை வேணனில் உடைப்பு

## நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 04
காரைநகரில் அமைந்துள்ள வேணன் உவர்நீர்த்தடுப்பு அணை இனந்தெரியாத விஷமிகளால் சேதமாக்கப்பட்டமை தொடர்பில், ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் நீர்ப்பாசன பொறியியலாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

'அரச சொத்துக்கு சேதம் விளைவித்த குற்றத்தின் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இனிமேல் எந்தவொரு பிரதேசத்திலும் இவ்வாறான நடவடிக்கை இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளவும்' என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டில் பொறியியலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசத்தில் வேணன் உவர் நீர்த் தடுப்பணை அமைந்துள்ளது. 5.3 கிலோ மீற்றர் நீளமான இந்த அணை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது. இந்த அணையை விஷமிகள் சிலர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மண்வெட்டிகளால் வெட்டி உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

காரைநகர் மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவே குறித்த வேணன் உவர் நீர்த் தடுப்பணை அமைக்கப்பட்டது. கடல் நீர் ஊருக்குள் உட்புகாமலும், நன்னீரைத் தேக்கி வைப்பதையும் நோக்காகக் கொண்டு இது அமைக்கப்பட்டது. கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாகக் காரைநகரில் பெருமளவு மழை நீர் தேக்கப்பட்டது. தேவைக்கு ஏற்ப நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேலதிக நீர் கடலுக்குத் திறந்து விடப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி, காரைநகர் பிரதேச செயலாளரின் முறைப்பாட்டுக்கு அமைய வேணன் அணையின் 15 கதவுகளும் திறந்து விடப்பட்டன. காலநிலை அன்றைய தினம் சீராகியவுடன் மாலை 6 மணிக்கே அந்தக் கதவுகள் மீள மூடப்பட்டன. முதலாம் திகதி, காரைநகர் பிரதேசத்தில் அதிகளவு நீர் காணப்பட்டமையினால் 5 கதவுகள் திறந்து விடப்பட்டன. ஏனைய கதவுகள் திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை.

இருப்பினும் அன்றைய தினம் இரவு தொடர்ந்து கடுமையான மழை பெய்தமையினால் மேலும் நீரை வெளியேற்ற வேண்டிய தேவை உணரப்பட்டு அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் இனந்தெரியாத விஷமிகள் சிலர் மண்வெட்டியினால் வேணன் அணையை வெட்டிப் பிரித்து உடைத்துள்ளனர். ஆரம்பத்தில் ஒன்றரை அடி நீளம் வரையிலேயே அது வெட்டப் பட்டுள்ளது. தண்ணீர் வரத்துக் காரணமாக அணை மேலும் சேதமடைந்து 100 அடி வரை தற்போது சேதமடைந்துள்ளது. மேலும் காரைநகரில் தேங்கியிருந்த நன்னீரும் கடலுக்குள் சென்றுள்ளது.

எனவே அரச சொத்துக்கு சேதம் விளைவித்த நபர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாண பிரதேச நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை - குறித்த அணையை தற்காலிகமாக சரி செய்வதற்குரிய நடவடிக்கைகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அணையின் சேதமடைந்த பகுதியில் அரைவட்ட வடிவில் மண் மூட்டைகள் அடுக்கி பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் நேற்றைய தினமே முன்னெடுக்கப் பட்டுள்ளன. (த-5)



# மந்திகை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கானிங் கருவி

## ரூ250 மில்லியன் செலவில் லயன்ஸ் கழகம் வழங்கும்

யாழ்ப்பாணம், டிசெ.4
சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு 250 மில்லியன் ரூபா பெறுமதியான எம்.ஆர்.ஐ. ஸ்கானிங் கருவியை வழங்கவுள்ளதாகச் சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்ட உதவி ஆளுநர் லயன் வீ.பீ. தியாகராசா தெரிவித்தார்.

மாபொல லயன்ஸ் கழகம் இந்தக் கருவியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார். (த-9)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் ஆறு பேருக்கு நிரந்தர நியமனம்

வலி.தென் மேற்கு, டிசெ 4
வலிகாமம் மேற்குப் பிரதேச சபையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஆறு பேருக்கான நிரந்தர நியமனத்தைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் வழங்கியுள்ளார்.

பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நியமனத்தை வழங்கிய தவிசாளர் உரையாற்றும்போது, இன்று உங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி அளிப்பதுடன் இந்நாள் இனிமையான தாக அமைவது மட்டுமின்றி உங்கள் கடமைகளை விசுவாசத்துடனும் நேர்மையுடனும் மேற்கொள்ள வேண்டுமென்று கூறினார். (த-115)

# சுகாதார சிற்றூழியர்களின் இரவுக் கடமை குறைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4
சுகாதார திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களின் இரவுக் கடமை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை சிற்றூழியர்களுக்கான இரவுக் கடமை மூன்று நாள்கள் தொடர்ந்து மேற்கொண்டு நான்காம் நாள் சம்பளத்துடனான உறங்கல் விடுமுறையாக வழங்கப் பட்டு வந்தது. தற்போது இரண்டு நாள்கள் இரவுக் கடமையாற்றி மூன்றாம் நாள் சம்பளத்துடனான உறங்கல் விடுமுறை வழங்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணத்தில் தற்போது 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிற்றூழியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதால் இரவுக் கடமையில் ஈடுபடும் சிற்றூழியர்களுக்குப் பெருமளவு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்க வேண்டி ஏற்படும்.

சிற்றூழியர்களுக்கு 40 மணித்தியாலங்கள் மட்டும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுமென மட்டுப்படுத்தப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையினால் வடமாகாண சுகாதார திணைக்கள நிறுவனங்கள் பெரும் ஊழியர் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது (த-9)

# செய்திகள்

# 17 திருட்டுக்களில் லட்சம் அபேஸ்

## கோயில்களும் தவறவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.குடாநாட்டில் கடந்த சில வாரங்களில் 17 இடங்களில் இடம்பெற்ற திருட்டு, கொள்ளைகளில் 17 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான நகைகள், பொருள்கள் என்பன அபகரிக்கப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்.பிறவுண் வீதியில் வைத்து பதுளையைச் சேர்ந்த ஒருவரது 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தில் பிறவுண் வீதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். திருநெல்வேலி அரசடி வீதியில், வீதியில் சென்ற பெண்ணின் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியைக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஊரெழு, உடுவில் மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

7 ஆம் வட்டாரம் புங்குடுதீவில் கடந்த 18 ஆம் திகதி வீடு உடைத்து 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரந்தனை மத்தியில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 47 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுன்னாகத்தில் கடந்த 17 ஆம் திகதி இரவு புடைவைக்கடை உடைத்து 18 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான புடைவைகள் திருடப்பட்டுள்ளன. சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் உடுவில், சுன்னாகம் பிரிவைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்குவேலியில் கடந்த 14 ஆம் திகதி இரவு வீடு உடைத்து 24 ஆயிரத்து 710 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சங்கானையில் 25 ஆம் திகதி இரவு கடை உடைத்து 13 ஆயிரத்து 450 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் சங்கானை மற்றும் சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலில் 26 ஆம் திகதி 13 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் மோட்டர் களவாடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஊரெழு கிழக்கில் 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சுரசாலை தெற்கில் கோயில் உண்டியல் உடைத்து 3 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. தெல்லிப்பழையில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. பருத்தித்துறையில் வீடு உடைத்து 47 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கரவெட்டி கிழக்கில் இரவு நேரம் கோயில் உண்டியல் உடைத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன. பண்டத்தரிப்பு வடலியடைப்பில் கோயிலில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைக் குத்து விளக்கு திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பண்டத்தரிப்பில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. பத்தமேனியில் 15 ஆம் திகதி 3 லட்சத்து 22 ஆயிரத்து 490 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறினார். (த-4)

# இருமுறை குலை போட்ட வாழை

கரணவாய்,டிச. 4

இமையாணன் பகுதியிலுள்ள விவசாயி ஒருவருடைய வாழைத் தோட்டத்தில் ஒரு வாழை மரம் இருமுறை குலைகள் போட்ட அதிசயம் நடைபெற்றுள்ளது.

இமையாணன் கேணியடியைச் சேர்ந்த சி.ரூபாகரனின் வாழைத் தோட்டத்திலேயே இந்த அதிசயம் இடம்பெற்றுள்ளது. குறித்த விவசாயி தனது வாழைத் தோட்டத்தில் முதல் குலை போட்ட வாழை மரத்தை வெட்டி அகற்றிய சிறிய கால இடைவெளியின் பின்னர் வெட்டப்பட்ட வாழைத்தண்டினூடாக பிறிதொரு குலை வெளிவந்துள்ளது.



அதேமாதிரியான அதிசய வாழைமரமொன்று கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் காணப்படுகின்றது. அங்கு இருமுறை குலை போட்ட வாழை மரத்தை பாடசாலை நிர்வாகத்தினர் நன்றாகப் பராமரித்து வருகின்றனர். (வ-108)

# முகக் குறைபாடுகளை நீக்குவதற்கு மன்னாரில் சீராக்கல் சத்திர சிகிச்சை



மன்னார், டிசெ.4

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் விசேட சத்திர சிகிச்சைகள் இடம்பெற்றன.

உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு மற்றும் முகத்தில் ஏற்படும் குறைபாடுகள் ஆகியவற்றுக்கான சத்திர சிகிச்சைகளே மன்னார் பொது மருத்துவமனையில் இடம்பெற்றது.

குறித்த மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் ரூபன் லெம்பேட் மற்றும் மன்னார் பிராந்திய பல் வைத்திய அதிகாரி ஸ்ரீதேவி வேதவனம் ஆகியோர் சுகாதார அமைச்சுக்கு முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாகக் குறித்த சத்திர சிகிச்சைகள் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் குறித்த குறைபாடுகளுடன் காணப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்ட 80 பேருக்கு முதற் கட்டமாக குறித்த சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குருநாகல் போதனா மருத்துவமனை மற்றும் கராப்பிட்டிய போதனா மருத்துவமனைகளைச் சேர்ந்த சுமார் 30 பேர் அடங்கிய வைத்தியக் குழுவினர் குறித்த சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர். (வ-56)

# வடமராட்சி சந்தைகளில் ப.மிளகாய்க்கு கிராக்கி

கரணவாய்,டிசெ.4

வடமராட்சிப் பகுதிகளிலுள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலை உச்ச நிலையை அடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக கிலோவொன்று 180 ரூபா முதல் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட பச்சை மிளகாய் தற்போது 400 ரூபா வரை விற்பனையாகிறது.

நெல்லியடிச் சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாயை 200 ரூபா முதல் 250 ரூபா வரை மொத்தமாக கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அதனை 350 ரூபா முதல் 400 ரூபா வரை சில்லறைக்கு விற்பனை செய்வதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை – ஏனைய மரக்கறி வகைகளான கத்தரிக்காய், பயிற்றங்காய், உருளைக்கிழங்கு, தக்காளிப்பழம் என்பனவும் உயர்ந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (வ-108)



கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத மட்டுவில் தெற்கு மருதங்குளம் வீதி வெள்ளத்தில் மூழ்கியதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள குறித்த வீதி நீண்டகாலமாக மணல் வீதியாகக் காணப்படுவதால் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வீடுகளில் மழை நீர் தேங்காமல் பாதுகாக்குமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, டிசெ.4

வீட்டுக் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் வழிந்தோடும் பீலிகள் மற்றும் பிளாட் போன்றவற்றில் மழைநீர் தேங்கி நிற்கவிடாமல் துப்புரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், அரச திணைக்கள அலுவலகக் கட்டடங்கள் போன்றவற்றில் டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர். சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட புதிய கருவி மூலம் பீலிகள் மற்றும் பிளாட்டுக்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கூரை நீர் வழிந்தோடும் பீலிகளுக்குள் காணப்படும் குப்பைகளிலும் பிளாட்களில் தேங்கியுள்ள நீரிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் ஏதுநிலை காணப்படுவதால் அவற்றை துப்புரவு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

புதிதாக கிடைத்த கருவி மூலம் பீலிகள் மற்றும் பிளாட்களில் நீர் தேங்கி நிற்பதைக் கண்டறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

விளம்பரம்




# பொன்னான வாய்ப்பு

உங்கள் தேடல் முயற்சியை முன்னெடுக்கவும், ஆக்கத்திறனை மேம்படுத்தவும், தனது 30 ஆவது அகவையீல் கால்பதிக்கும் உதயன் முன் வந்திருக்கின்றான். உங்கள் திறமையை வெளிக் காட்டுவதுடன் சான்றிதழ்களையும், பரிசில்களையும் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பு.

| ஓவியப் போட்டி | கட்டுரைப் போட்டி | கவிதைப் போட்டி | சிறுகதைப் போட்டி |
|---|---|---|---|
| தரம் 03 - 05 | தரம் 06 - 08 | தரம் 09 - 11 | தரம் 09 - 11 |
| தரம் 06 - 08 | தரம் 09 - 11 | தரம் 12 - 13 | தரம் 12 - 13 |
| தரம் 09 - 11 | தரம் 12 - 13 | பிரிவுகள் | பிரிவுகள் |
| தரம் 12 - 13 | பிரிவுகள் | | |
| பிரிவுகள் | | | |

முழுமையான விவரங்களுக்கு தவறாது உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்.

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மஹிந்தவைத் தோற்கடிப்பது மட்டுமே தமிழரின் வெற்றியல்ல

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மஹிந்த ராஜபக்ஷவையா மைத்திரிபால சிறிசேனவையா ஆதரிக்க வேண்டும் என்ற மில்லியன் டொலர் கேள்வி, பதிலை எதிர்பார்த்து நிற்கும் தருணத்தில், மைத்திரிபாலவை விமர்சிப்பது அல்லது அவரது தமிழர் தொடர்பான நிலைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்துவது என்பது மஹிந்தவை ஆதரிக்க எடுக்கப்படும் முயற்சி என்று ஒரு சாரார் சித்திரிக்க முற்படுகிறார்கள். இது தவறானது. தறுதலையானது.


மஹிந்த ராஜபக்ஷவை தமிழர்கள் ஏற்கனவே இரண்டு தடவைகள் நிராகரித்துவிட்டார்கள். முற்றுமுழுதாகவே நிராகரித்து விட்டார்கள். எனவே மூன்றாவது தடவையில் மஹிந்தவை அவர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தம் இல்லை. அதற்கான களச் சூழலும் இல்லை. காலச் சூழலும் இல்லை. மஹிந்தவைத் தோற்கடிப்பது என்கிற எண்ணக்கருவைத் தமிழர்கள் மீள்பரிசீலனை செய்யத்தக்கதாக கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கென்று எதனையும் செய்யவில்லை. அதற்கு மாறாகத் தமிழர்களின் கோபத்தையும் எதிர்ப்பையும் மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளும் வகையிலேயே செயற்பட்டிருக்கிறார்.

தமிழர்களுக்கு எதிரான போக்கில், தான் இறுக்கமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் உத்தியையும் அவர் கடந்த காலங்களில் நேர்த்தியாகக்கையாண்டு வந்திருக்கிறார். எனவே மஹிந்தவுக்கு இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

அதேசமயத்தில், மஹிந்தவைத் தோற்கடிப்பதற்காக மட்டுமே மைத்திரிபால சிறிசேனவைத் தமிழர்கள் ஆதரிக்க முடியுமா? என்பது மட்டுமே இங்குள்ள கேள்வி. தமிழர்களை முக்கியத்துவப்படுத்தாத, தமிழர்களின் பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வை முன்வைக்காத, அது பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கு முற்றுமுழுதாகப் பயப்படும் ஒருவருக்குத் தமிழர்கள் தமது ஆதரவை வழங்க முடியுமா என்பதே இங்குள்ள கேள்வி. தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்தால் சிங்கள மக்களின் வாக்குகளை இழக்கவேண்டி வரும் என்று அஞ்சும் ஒருவரை நம்பி, ஆதரவு தெரிவித்து ஜனாதிபதியாக்க முடியுமா என்பதே தீர சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியது.

அதைவிடுத்து, மைத்திரிபாலவின் வெற்றி என்பது மஹிந்தவின் தோல்வி அது தமிழர்களின் வெற்றி என்று மனக்கணக்குப் போடமுடியாது. அது தவறானதும்கூட. மைத்திரிபாலவைத் தமிழர்கள் ஆதரிப்பதற்கு முன்பதாக அவர் தமிழர்களுடன் எந்தளவுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள் ளப்போகிறார் என்பதையும் அதனை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வரப்போகிறார் என்பதையும், தமிழர் தரப்புத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதுவே இன்றைய காலத்தில் மிக முக்கியமானது. அப்படி உறுதிமொழியளிக்கப்படும் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய பொறிமுறையையும் தமிழர் தரப்பு உருவாக்கிக்கொள்ளவேண்டும்.

அதைவிடுத்து, மஹிந்தவைத் தோற்கடிப்பது மட்டுமே தமிழர்களின் வெற்றி எனச் செயற்படுவதில் அர்த்தமில்லை. அதேபோன்றே வெறுமனே மைத்திரிபாலவை வெற்றிபெறச் செய்வதிலும் அர்த்தமில்லை. தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிவகைகளை இந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக எப்படி ஏற்படுத்திக் கொள்வது என்பதை ஆராய்ந்து, சிந்தித்து நடைமுறைப்படுத்துவதே காலப் பொருத்தமுடையது.



# இந்திய-இலங்கை ஒப்பந்தமும் கச்சதீவும்

சேரலாதன்

இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட கச்சதீவை இந்தியா திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கை தமிழ் நாட்டில் வலுத்து வருகின்றது. மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி அம்மையார் இலங்கைப் பிரதமராகவிருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க மீதான அன்பை வெளிப்படுத்தும் வகையில் 1974ஆம் ஆண்டு கச்சதீவை இலங்கையிடம் கையளித்தார். ஆனால் இதுவே தமிழ் நாட்டு மீனவர்களின் அவலங்களுக்கெல்லாம் காரணமாக அமைந்து விட்டது.

இதுவரை நூற்றுக்கணக்கான தமிழக மீனவர்கள் நடுக் கடலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஏராளமானவர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். பல லட்சம் ரூபா பெறுமதியான ஏராளமான மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இன்றைய நாள்வரை அவர்களின் அவலங்கள் தொடர்கின்றன. ஆனால் இந்தியாவின் மத்தியில் ஆட்சியில் அமரும் அரசுகள் இதனை ஒரு பெரிய விடயமாக எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு அந்த நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதால் இந்த விடயத்தில் தம்மால் எதுவுமே செய்ய முடியாதென அவை கூறுவதையே காண முடிகின்றது.

1974ஆம் ஆண்டு இலங்கையுடன் செய்து கொண்ட கச்சதீவு ஒப்பந்தம் தொடர்பாக எதுவுமே தம்மால் செய்ய முடியாதெனக் கூறும் இந்திய அரசு–1987ஆம் ஆண்டு இலங்கையுடன் செய்து கொண்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் நல்லது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இலங்கையின் அரசமைப்பில் 13ஆவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் உருவானதுதான் மாகாண சபைகள் ஆட்சி முறை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த மாகாண சபை உருவாகுவதற்கு இதுவே காரணமாக அமைந்திருந்தது. ஆனால் இன்று இந்திய– இலங்கை ஒப்பந்தம் செல்லாக் காசாக்கப்பட்டுவிட்டது. இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாகப் பிரிக்கப்பட்டன. ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட முக்கிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அதிகாரங்களில்லாத பொம்மை அரசுகளே மாகாணங்களில் அமைந்துள்ளன. பெரும்பான்மை மக்களைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் தயவு இருந்தாலே அவர்களுக் குப் போதுமானது. மாகாண சபைக்கு அதிகாரம் வேண்டுமென அவர்கள் ஒருபோதுமே கோரிக்கை விடுப்பதில்லை. ஆனால் இன்றைய சூழ் நிலையில் தமிழ் மக்கள் தமது பிரதிநிதி களால் நிர்வகிக்கப்படும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பெற்றே ஆகவேண்டும் என்ற நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டிய அவசிய தேவையைத் தமிழர்கள் இப்போது உணர்ந்துள்ளனர். ஆனால் இலங்கை அரசு இவற்றை வழங்குமென எவருமே நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றமை தனி நாடொன்றை வழங்குவதற்குச் சமனானது எனப் பெரும் பான்மை மக்களின் மனங்களில் விதைக்கப்பட்ட நச்சுவிதை இன்று பெரிய விருட்சமாக வளர்ந்து காணப்படுவதால் அரசு நினைத்தாலும் அதை நிறைவேற்றவே முடியாது.

ஆனால் இந்திய –இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்க வேண்டிய பெரிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. கச்சதீவு ஒப்பந்தம் எவ்வாறு மீறப்பட முடியாததோ அவ்வாறே இந்த ஒப்பந்தமும் மீற முடியாத ஒன்று என்பதை இந்தியா உணர்ந்து கொள்வதுடன் இலங்கைக்கும் உணர்த்த வேண்டும். இதற்கு இலங்கை இணங்காதுவிட்டால் கச்சதீவு ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்து அந்தத் தீவைத் திரும்பப் பெறும் உரிமை இந்தியாவுக்கு வந்து விடும். விடுதலைப் புலிகளை ஒழிப்பதாகக் கூறி இலங்கை நடத்திய போரில் பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் காணாமற் போயினர். எண்ணிலடங்காதவர்கள் பல்வேறு அவலங்களையும் எதிர்கொண்டனர். மிகப் பெரியதொரு மனிதப் பேரவலம் தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்றது. இதற்குத் துணை போன இந்தியா தமிழர்களின் அவலங்களைத் துடைப்பதற்கு முன் வராதமை பெரியதொரு இமாலயத் தவறாகும்.

கச்சதீவு விவகாரத்தில் தமிழர்களே பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் காரணமாகவும் இலங்கைத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இதை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை இந்தியாதான் முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை எமது நட்பு நாடு. அதனுடன் நட்புறவைப் பேணுவதையே இந்தியா விரும்புகின்றது எனக் கூறிக் கூறியே காலத்தைக் கடத்தும் செயலில் இந்தியா இனிமேலும் ஈடுபடுவது அந்த நாட்டின் சுயகௌரவத்துக்கு உகந்ததல்ல.

செயல்வீரர் எனக் கூறப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதிலும் தனது கவனத்தைச் செலுத்துவாரென எதிர்பார்ப்போம்.

மூலம் – இன்டர்பிரஸ் சேவிஸ் தளத்துக்கு அமந்த பெரேரா எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்

# மக்களை கொல்லும் தேர்தல் அலங்காரம்

தான்வாழும்கொழும்பு நகரானது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு அலங்கரிக்கப்படுவதாகப் பிரியந்த வக்விற்ற கூறுகிறார். கொழும்பு நகரில் திரும்பும் இடமெல்லாம் வீதி விளக்குகள் மற்றும் இதர அலங்காரங்கள் மேற்கொள்ளப்படுவதாக இவர் கூறுகிறார். இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தற்போது அரசியற் சூழல் சூடுபிடித்துள்ள நிலையில், நத்தார் ஏற்பாடுகள் குறைவடைந்துள்ளன.

நவம்பர் 21 அன்று இலங்கை ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முடிவை அறிவித்து நான்கு நாள்களின் பின்னர், கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இலங்கை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் குறைந்தது 1800 வரையான உருவப் படங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளதாகத் தேசிய தேர்தல் கண்காணிப்பாளர்களின் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல் பரப்புரை அமைப்பு தெரிவித்துள்ளது.

முப்பதாண்டுகளாக இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு போரானது தமிழீழ விடுதலைப் புலிகள் 2009இல் முற்றாக அழிக்கப்பட்டதன் பின்னர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் காரணத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்களின் பேராதவு கிடைத்தது. ஆனால் போருக்குப் பின்னான கடந்த ஆண்டுகளில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வாழும் மக்கள் அரசியல் நெருக்கடிகளை விட பொருளாதார நெருக்கடிகளை அதிகம் சந்தித்து வருவதால் ராஜபக்ஷவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் சொந்த அரசியற் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலராக அண்மைய நாள்கள் வரை பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன அந்தக் கட்சியை விட்டு நீங்கி எதிர்க்கட்சியின் பிரதான ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார். இந்தநிலையில் இதுநாள் வரை இலங்கை ஜனாதிபதியின் சொந்தக் கட்சியின் பொதுச் செயலராக இருந்தவரே தற்போது இவரது பிரதான எதிர்க்கட்சி வேட்பாளராவார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் இதுவரை இலங்கையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலிருந்து எட்டுப் பேர் எதிர்க்கட்சிக்குத் தாவியுள்ளனர். அத்துடன் இலங்கை அரசின் கூட்டணிக் கட்சியாக இருந்ததும், பலம்மிக்க தேசியவாதக் கட்சியுமான ஜாதிக ஹெல உறுமயவும் இடம்பெறவுள்ள தேர்தலில் ராஜபக்ஷவை எதிர்க்கவுள்ளதாக அறிவித்தள்ளது.

இலங்கையின் தலைநகரான கொழும்பு நகர் முழுவதிலும் மேற்கொள்ளப்படும் தேர்தல் ஆயத்தங்கள் மற்றும் புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசியல்வாதிகளின் உருவப்படங்கள் போன்றன வக்விற்ற போன்ற சாதாரண மக்களை எரிச்சலுக்கும் அதிருப்திக்கும் உள்ளாக்கியுள் ளது. எனது பிள்ளைகளின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் எனது குடும்பத்தைப் பராமரிப்பதற்காகவும் நான் பல்வேறு கடினங்களை எதிர்நோக்குகின்ற நிலையில் இந்த அரசியல்வாதிகள் இந்த வேளையில் தமது முகங்களை மக்களுக்குக் காண்பிப்பதற்காக பல மில்லியன்களை வீணாக்குகின்றனர் என காலியைச் சொந்த இடமாகக் கொண்டவரும் கடந்த பத்தாண்டாக இலங்கையின் தலைநகரில் பணிபுரிபவருமான 50 வயதான, இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான வக்விற்ற தெரிவித்தார்.

வக்விற்ற சிறியதொரு வெதுப்பகத்தை நடாத்தி வருகிறார். இது கொழும்பின் புறநகர்ப் பகுதியில் காணப்படுகிறது. இவர் வீடு வீடாகச் சென்று பாண் விற்பனை செய்து தனது வருவாயை ஈட்டுகிறார். இவர் ஒரு மாதத்திற்கு அண்ணளவாக 30,000 ரூபாவை இலாபமாகப் பெற்றார். ஆனால் கடந்த ஆண்டில் இதில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்தஆண்டின்ஆரம்பத்தில்சிறியதொரு மரக்கறி விற்பனை நிலையம் ஒன்றை நடத்துவதற்கான முயற்சியில் இவர் ஈடுபட்டார். ஆனால் இதில் இவருக்கு 100,000 ரூபா நட்டம் ஏற்பட்டது. இது இந்த நாட்டைப் பொறுத்தளவில் மிகப் பெரிய தொகையாகும். மக்களிடம் பணம் இல்லை. மக்கள் பணத்தைச் சம்பாதிப்பதற்கு மிகவும் கடினப்படுகிறார்கள் எனவக்விற்றதெரிவித்தார்.

இலங்கையானது 7.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்தாலும் கூட, ராஜபக்ஷ அரசானது நாட்டில் மேற்கொள்ளப்படும் புதிய துறைமுக அபிவிருத்தி, விமான நிலைய அபிவிருத்தி போன்ற பல்வேறு பாரிய கட்டுமாணத் திட்டங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளதால் அரசே அதிக இலாபத்தை ஈட்டுகின்றது. இதே வேளையில்இலங்கையில்வாழும் குறைந்த வருமானத்தைப் பெறுவோர் தாம் தமக்கான வருவாயைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறுகின்றனர்.

இலங்கையின் தேசிய வறுமை நிலையானது 6.7 சதவீதமாகக் காணப்படுகிறது. ஆனால் இலங்கையின் பெரும்பாலான கிராமங்களில் இந்த சதவீதமானது அதிகமாகக் காணப்படுகிறது.

வக்விற்றாவின் சொந்த மாவட்டமான காலியில் இந்த வீதமானது 9.9 ஆகவும், இலங்கையின் தென்மத்திய மாவட்டமான மொனறாகலை யில் வறுமைக் கோட்டில் வாழ் வோர் 20.8 சதவீதமாகவும், இதே போன்று தென்மேல் சப்ரக முவ மாகாணத்தின் தலைநக ரான இரத்தினபுரி மாவட்டத்தின் வறுமை நிலையானது 10.4 சதவீதமாகவும் காணப்படுவதாக இலங்கை அரச தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையில் வாழும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களது வருவாய் மிகக் குறைவாகும். அடிப்படைப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன. அரிசியின் விலை மிகவும் அதிகரித்துள்ளதால் இலங்கை வாழ் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்கள் நாளாந்தத்தைக் கழிப்பதில் பெரும் சிரமப்படுகின்றனர்.

இதேபோன்று 11 மாத கால நீண்ட வறட்சியானது மூன்றில் ஒரு தேயிலைத் தோட்டங்களைப் பாதித்துள்ளது. கடந்த ஆண்டில் நான்கு மில்லியன் மெற்றிக் தொன் அரிசி இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், இந்த ஆண்டில் இதில் 20 சதவீத வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் நிலவும் காலநிலை சீர்கேட்டால் அரிசியின் விலையானது 33 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், இதேபோன்று மீன் மற்றும் மரக்கறிகளின் விலையிலும் தளம்பல் ஏற்பட்டுள்ளதாகவும் உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் வாழும் மக்கள் தமது நாளாந்தத்தைக் கழிப்பதில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் அதேவேளையில், மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

தேர்தற் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படமாட்டாது. ஏழை மக்களுக்கு உதவக்கூடிய மிகவும் உறுதியான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என காலி மாவட்டத்தைச் சேர்ந்த நெல் விவசாயியான அஜித் திசநாயக்க கூறுகிறார்.

இலங்கையின் வடக்கில் தொடரப்பட்ட போரின் காரணமாக நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. மே 2009ல் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதிலிருந்து, இலங்கை அரசானது வடக்கின் மீள்கட்டுமானத் திட்டங்களுக்காக மூன்று மில்லியன் டொலர்கள் வரை முதலிட்டுள்ளது. ஆனால் வடக்கில் இன்னமும் வறுமை நிலவுகிறது.

இலங்கையின் குருதி தோய்ந்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட முல்லைத்தீவு மாவட்டமே மிகவும் வறுமைநிலை கூடிய பிரதேசமாகும். இங்கு 28.3 சதவீத வறுமை நிலவுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் வறுமை நிலையானது 12.7 சத வீதமாகும்.

**தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கின்ற இந்தத் தருணத்தில் நாட்டு மக்களின் வறுமை நிலை எப்படி இருக்கிறது? அதை மக்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றனர்? என்பதை ஆராய்கிறார் கட்டுரையாளர்.**

நாங்கள் தற்போது வறுமை என் கின்ற பிறிதொரு பிரச்சினைக்கு எதிராகப் போராடுகிறோம் என முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் என்கின்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்த 38வயதான மாற்றுவலுவுடைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராசு சந்திரகுமார் தெரிவித்தார்.

பல்வேறுபுதியமின்சார வழங்கல் திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தனது கிராம மக்கள் தங்களது வீடுகளில் மின்சாரத்தைப் பெறுவதற்கு இன்னமும் காத்திருப்பதாக சந்திரகுமார் தெரிவித்தார். மின்சார இணைப்பை எமது வீடுகளுக்குப் பெற்றுக் கொள்வதற்கான போதியளவு பணம் எம்மிடம் இல்லை. சிலவேளைகளில் பேரூந்தில் பயணிப்பதற்குக் கூட எம்மிடம் பணம் இருப்பதில்லை என போரின் போது காய முற்றதால் தற்போது சக்கர நாற்காலியில் உலாவும் சந்திரகுமார் குறிப்பிட்டார்.

நாட்டின் அதியுயர் அரசியல் பதவியிலிருந்து கொண்டு தேர்தல் களத்தில் இறங்கும் வேட்பாளர்களிடம் வக்விற்றவும் சந்திரகுமாரும் மிகச் சாதாரணமான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றனர். அதாவது நாங்கள் முன்பிருந்ததை விட சிறப்பான வாழ்வை வாழ்வதற்கான வழியை உறுதிப்படுத்துமாறு இவர்கள் இருவரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கொழும்பில் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டு இரண்டு நாள்களின் பின்னர் பங்குச் சந்தையில் சரிவு ஏற்பட்டுள்ளது. நவம்பர் 24 அன்று கொழும்பு பங்குச் சந்தையானது 2.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது ஆகஸ்ட் 2013லிருந்து இதுவரை காலமுமான பங்குச் சந்தை வரலாற்றில் மிக மோசமான வீழ்ச்சியாகும்.

நாட்டின் அரசியற் சூழலில் உறுதியான நிலை எட்டப்படும் வரை உள்நாட்டு முதலீட்டாளர்களாக இருந்தாலும் சரி வெளிநாட்டு முதலீட்டாளர்களும் சரி கொழும்பில் முதலீடு செய்வதில் தயக்கம் காண்பிப்பார்கள் என கொள்கை ஆய்வுக்கான தேசிய நிறுவகத்தைச் சேர்ந்த பொருளியலாளர் அனுஸ்கா விஜேயசிங்க தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக சிறிலங்காவின் அரசியல்மற்றும்கோட்பாடுகள் மிகவும் உறுதித் தன்மையுடன் நிறுவப்பட்டுள்ளதால் இவற்றுள் ஏதாவது குழப்பங்கள் ஏற்படும் போது அதனை முதலீட்டாளர்கள் எதிர்மறையாகவே நோக்குவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகவே அண்மையில் சிறிலங் காவின் அரசியலில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் மிகவும் உன்னிப்பாக ஆராயப்படும் என பொருளியலாளர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

வாக்குகளை வெற்றிகொள்வதை குறிக்கோளாகக் கொள்ளாது நாட்டில் நீண்ட கால கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டே தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் எனவும் விஜேயசிங்க மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் 20 சதவீத செல்வந்தர்கள் நாட்டின் மொத்த வருமானத்தின் அரைவாசியைப் பெறும் அதேவேளையில், 20 சதவீத ஏழைமக்கள் நாட்டின் மொத்த வருமானத்தின் ஐந்து சதவீதத்தை மட்டுமே பெற்றுக் கொள்கின்றனர் என்பதை அரசின் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தேர்தல் மூலமோ அல்லது தேர்தல் மூலமன்றியோ குறுகிய காலத்தில் தமது வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என வக்விற்ற மற்றும் சந்திரகுமார் போன்ற சிறிலங்கா வாழ் மக்கள் கருதுகின்றனர். தேர்தலில் வெற்றி பெற்று எவர் சிறிலங்காவின் அதிபராகப் பதவியேற்றாலும் என்னைப் போன்ற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வக்விற்ற தெரிவித்தார்.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### இறந்த பின்னும் சோதனையா?

தங்கள்பத்திரிகையில்(24.11.2014) இறப்புக்கான காரணத்தை குறிப்பிடுதல் அவசியமெனும் சட்ட வைத்திய அதிகாரியின் கருத்துதொடர்பாகஎனது கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். வீடுகளின் இறப்பு நிகழ்கின்ற போது பொது மக்கள் வைத்தியசாலைக்கு பரிசோதனைக்கு வருவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். யாழ்.குடாநாட்டில் காணப்படும் வைத்திய சாலைகளில் கூட இறப்பு இடம் பெற்றால் விசாரணைகள் நடைபெற்று விரைவாக உடல் உடனடியாக வழங்கப்படுகிறதா? கிளினிக் கொப்பி இருந்தால் வழங்கப்படும் இல்லையென்றால் சட்ட வைத்திய நிபுணருக்காக எத்தனை காத்திருப்புகள் தொடர்கின்றன. சில மருத்துவமனைகளில் சட்ட வைத்திய நிபுணர்களுக்கு பதிலாக பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவர்கள் செய்யும் அட்டகாசங்கள் விவரிக்கவே முடியாது. அவசரமாய் கூட்டத்துக்கு போட்டார், மலைதான் வருவார் வந்தாலும் நான்கு மணிக்குத்தான் உடற்கூற்றுப் பரிசோதனை செய்வார், இது சில மருத்துவமனைகளின் எழுதாத சட்டங்கள். இந்த நிலைமையில் வீட்டில் இறந்தவர்களை எப்படி? மருத்துவமனைக்கு எடுத்து வருவார்கள் வசதி இல்லாத பாமரர்களின் நிலைமை என்ன? இதை யாரும் சிந்திப்பதாக தெரியவில்லை. ஓர் இறந்த உடலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு எத்தனை ஆயிரம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உயிருடன் இருப்பவர் பயணிக்க குறைந்த கட்டண அறவீடுகள் தீர்மானிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இறந்தவர்கள் பயணிக்க கட்டணங்கள்தீர்மானிக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான பணங்கள் அறவிடப்படுகின்றன. பிணத்தை வைத்தே பகற்கொள்ளை நடக்கிறது. இந்த நிலையில் பாமரரின் நிலை என்னவாகும்? இந்த நிலையில் வீட்டில் இறந்தவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று புள்ளி விவரங்களுக்கும் மரணத்தின் காரணத்தை கண்டுபிடிக்கவும். அடுத்த வேளை உணவுக்கு அல்லற்படும் பாமர மக்களுக்கு சாத்தியப்படுமா? எப்போது சாத்தியப்படும். உடலை எடுத்துச் செல்வதற்கும் வீட்டுக்கு எடுத்து வருவதற்கும் அம்புலன்ஸ் சேவை போலஇலவசஅமரர்சேவையை வழங்கினால் சாத்தியப்படும். இதன் மூலம் மரணங்களின் காரணங்களை கண்டுபிடித்து இறப்பின் புள்ளி விவரத்தின் நம்பகத் தன்மையை உறுதி செய்யலாம் மற்றும் உடற்கூற்று பரிசோதனையை உடனடியாக வழங்க எத்தனை மருத்துவமனைகள் தயாராக இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். இவை சாத்தியமென்றால் சட்ட வைத்திய அதிகாரி அவர்கள் கூறியவை சாத்தியப்படும். அதை விடுத்து கிராம சேவையாளர் பதிவு தவறான முறை என்று அறிக்கைவிட்டு விழிப்புணர்வு என்று கிராம சேவையாளரை குழப்பி ஏழை மக்களை அரிச்சந்திரா புராண சந்திரமதி போல பிணத்தை வைத்து பணத்துக்கு அலைய வைக்காதீர்கள். பிரச்சினைகளை இனம் கண்டு தமிழ் மக்களின் பாதையை செப்பனிடுங்கள்.

*தங்கர்ராசா, கொடிகாமம்.*

### நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத மானிப்பாய் வீதி

முப்பது வருட கால போர் ஓய்ந்து அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. போக்குவரத்து வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. எத்தனையோ சிறு வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மானிப்பாய் வீதி மட்டும் இன்றுவரை புனரமைக்கப்படாதது ஏன்? மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையான மானிப்பாய் வீதி இன்றுவரை கவனத்தில் கொள்ளப்படாதது வேதனைக்குரிய ஒன்றாகும். வீதி திருத்தத்துக்கென ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் இன்று வரை வீதித்திருத்தம் மேற்கொள்ளப்படாதது ஏன்? வீதியில் பயணிப்போர் சீரற்ற வீதியால் மன உளைச்சலுக்கும் உடல் உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர். நோயாளர்கள், அலுவலர்கள் அவஸ்தைப்படுகின்றனர். பயணிகள், அசௌகரியம் நீக்கப்பட்டு பாதைகள் சீர் செய்யப்படவேண்டும். மஹிந்த சிந்தனையின் கீழ் அனைத்துக்கும் தீர்வு கிடைக்கும். இந்த நாட்டில் இதற்கு மட்டும் நிரந்தரத்தீர்வு கிடைக்காதா?

சம்பந்தப்பட்டவர்கள் பாராமுகமாய் இருக்காது விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*பாதிக்கப்பட்ட பயணிகள் சார்பில்*
*வாசன்*

கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

### ஒர வானத்தின் கிழ் ஒரே விளை நிலமாக எமத நாட....

சுருட்டுக் கொட்டிலுக்குள் மிகத் தீவிரமாகப் பத்திரிகை வாசிப்பு நடந்து கொண்டிருக்கிறது. சின்னாம்பி யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளையும் அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறான். சுந்தரத்தாரும், கந்தையரும் சுருட்டுத் துண்டை வாயிலிருந்து எடுக்காமலேயே, சின்னாம்பியின் வாசிப்பு அழகையும், செய்தியின் முக்கியத்துவங்களையும் கேட்டபடி, புகையிலை முடிச்சலில் கவனமாக இருக்கின்றனர்.

ஒழுங்காக, ஒரே பாணியில் வாசிச்சிக் கொண்டிருந்த சின்னாம்பி தடைப்படுகிறான். எதையோ எழுத்துக்கூட்டியும், தலைகீழாக மாற்றியும், ஒரு சொல்லுடன் இன்னொரு சொல்லை இணைத்தும் வாசிக்க முற்படுகிறான். ஆனால் அவனின் வாசிப்பின் அழகு குறைகிறது. இடருப்படுகிறான். ஒரே நீளமான புகையிலையை சம அளவில் அடுக்கி முடிந்து கொண்டிருந்த கந்தையர் கடுப்பாகி விடுகிறார்.

என்னடா சின்னாம்பி..ஒழுங்கா பள்ளிக்கூடம் போ எண்டால் கேட்டியே.. இப்ப பேப்பர் செய்தியையே வாசிக்கமுடியாமல் முக்குறாய்.. சின்னாம்பிக்குத் தன் வாசிப்பை குறைசொன்னதால் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. நான் ஒழுங்காய் தான் வாசிக்கிறன். நீங்களே பாருங்கோ. இந்தப் பட்த. அதில எழுதிக் கிடக்கிறது ஏதாச்சும் விளங்குதே உங்களுக்கு கடுகடுத் தான் சின்னாம்பி.

இந்தப் பத்திக்கு இடப்பட்டிருக்கும் தலையங்கத்தை வாசிக்கத் தான் சின்னாம்பி சிக்கல்பட்டான். (மற்றும்படி பத்தி எழுதியவர் எழுத்துப் பிழை விட்டார் என வாசகர்கள் நினைத்துவிடக்கூடாது) இலங்கை வாழ் மக்களின் தலையெழுத்தை மாற்றப்போகின்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கின்ற எதிரணியின் பரப்புரை மகுட வாசகம்தான் அது. பரப்புரைக் கூட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான பெயர்பலகையில்தான் இந்தத் தமிழ்க்கொலையை செய்திருக்கிறார்கள். அதைத் திருத்தி இப்படி வாசிக்கலாம், எமது நாடு ஒரே வானத்தின் கீழ் ஒரே நிலம். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தெளிவாகத்தான் எழுதியிருக்கிறார்கள். ஆனால் தமிழில்தான் குழறுபடி செய்துவிட்டார்கள் – என்று எப்போதும் அறிவுபூர்வமாகக் கதைக்க மட்டுமே சுருட்டை வாயைவிட்டு எடுக்கும் சுந்தரத்தார் பட விளக்கம் கொடுக்கிறார். சுந்தரம் சொல்றது சரியாய்தான் இருக்குமடா சின்னாம்பி. இது குழறுபடியில்ல. எல்லாம் எதிர்கால திட்டத்தோடதானடா இப்பிடி ஆரம்பிச்சிருக்கிறாங்கள் என்று கந்தையர் சொல்லி முடிக்க முதலே இந்த விடயத்தை எடுத்துக்கொண்டு ஆழமாக ஆராயத் தொடங்கினார் சுந்தரத்தார்.

இந்த இலங்கைத் திருநாட்டில் தமிழ் மொழிக் கொலை செய்வது ஒன்றும் புதிதில்லைத்தான். என்றைக்கு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வர முயற்சி செய்தார்களோ, அன்றைக்கே தமிழை இப்படியும் கொல்லலாம் என்று திட்டங்களை வகுக்கத் தொடங்கி விட்டார்கள் சிங்களத் தலைமைகள். இதனை நீங்கள் போர் முடிவுக்கு வந்தவுடன் வடக்குக் கிழக்கில் வைக்கப்பட்ட அநேக இராணுவ விளம்பரங்களிலும், அரச விளம்பரங்களிலும் பார்த்திருப்பீர்கள், கொதித்திருப்பீர்கள். பலர் அந்தப் பிழைகளை சுட்டிக் காட்டினாலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது.

ஓம் அப்புச்சி..நானும் அண்டைக்கு யாழ்ப்பாணம் போகேக்கை பாத்தனான். எங்கட தமிழ் அரசனான எல்லாளனின்ர பேரைக் கூட பிழையாய்தான் எழுதி வச்சிருக்கினம். அதையும் தமிழர்கள பிரதிபலிக்கிறதா சொல்லிக் கொள்ற அமைச்சர் ஒருத்தர்தான் திறந்துவச்சவராம்.. நக்கல் சிரிப்போடு சுந்தரத்தாரின் பேச்சை இடைமறித்துத் தாக்கினான் சின்னாம்பி. அட மடையா அதில்லையடா விசயம், கதைய ஒழுங்காய்க் கேள்..சின்னாம்பியைக் கட்டுக்குள் கொண்டுவந்தார் கந்தையர். சுருட்டை நன்றாக உள்ளிழுத்துவிட்டு, சுந்தரத்தார் ஆரம்பித்தார் தன் பேருரையை.

நானும் இந்தப் பொது எதிரணி உருவான பிறகு அரசியல் அரங்கில் நடந்து வரும் விடயங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் அதில் இணைந்திருக்கின்ற யாருமே சிறுபான்மையினங்கள் தொடர்பில் கரிசனை கொண்டிருப்பவர்களாகத் தெரியவில்லை. இதில் விந்தை என்னவென்றால் இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனங்களின் ஒரு தொகுதியினரைப் பிரதிபலிக்கின்ற மனோகணேசன் போன்ற தரப்பினரும் இந்தப் பொது எதிரணியில் இணைந்திருப்பதுதான். பொது எதிரணி கைச்சாத்திட்டுக் கொண்ட உடன்படிக்கையில் இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனங்கள் குறித்தும், தமிழரின் பிரச்சினை குறித்தும் அக்கறையெடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. அத்துடன் முழுக்க முழுக்க இனவாதத்தைக் கக்குகின்ற கட்சிகளின் கூட்டாகவும் இந்தப் பொது எதிரணி மாறிவருகின்றது. எனவே இந்தக் கூட்டுக் கட்சிகள் எல்லாம் இணைந்து, இவ்வளவு நாளும் ராஜபக்ஷ குடும்பம் தனித்து செய்த அரசியல் திருவிளையாடல்களை சேர்ந்திருந்து செய்யப் போகின்றன. இவர்களிடம் சிறுபான்மையினர் தம் உரிமைகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் போலவே தெரிகின்றது.

ஓம்..ஓம்..இப்ப கூட்டாகி இருக்கிற முக்கிய கட்சிகளின் மூதாதையர்கள் தான் தனிச் சிங்கள சட்டத்தையும், வடக்குக் கிழக்கில் சிங்கள குடியேற்றத்தையும் கொண்டு வந்தவ சந்தர்ப்பம் பார்த்து டக்கென நினைவுபடுத்தினார் கந்தையர். ஓமடா..சும்மாவே எங்க டயாக்கள் சொல்லிச்சினம் முதல் கோணல் முற்றிலும் கோணல் எண்டு. அந்த முதல் கோணலைத்தான் வாசிக்கத் தெரியாமல் சின்னாம்பி திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறான் என்று சொன்னவாறே, ஆழ்ந்த சிந்தனையில் இருந்த சின்னாம்பியின் தொடையில் ஒருஅடிபோட்டார் சுந்தரத்தார்.

பத்தி எழுத்து

# விளம்பரங்கள்




## விலை உயர்ந்த பொருள்?

உலகின் மிகப்பெரிய தத்துவஞானி எனப் போற்றப்பட்ட ரஸ்ஸல் பெர்னாட் வெளிநாட்டுப் பயணம் முடித்து தாய்நாடு திரும்பினார். அங்கு விமான நிலைய அதிகாரிகள் அவரைச் சோதனையிட்டனர். 'உங்களிடம் இருக்கக் கூடிய விலைமதிப்பேறிய பொருட்கள் என்ன? அதையெல்லாம் வெளியே எடுத்துக் காட்டி விடுங்கள்.' என்று கண்டிப்பான குரலில் கூறினர் விமான நிலைய அதிகாரிகள். ரஸ்ஸல் அமைதியாக, 'என்னிடம் விலைஉயர்ந்த பொருள் ஒன்று மட்டும்தான் உள்ளது. அதை வெளியில் எடுக்கவோ, உங்களிடம் காட்டவோ முடியாது' என்றார். அதிகாரிகளுக்கு கோபம் வந்தது. 'நீங்கள் எடுத்துக் காண்பிக்காவிட்டால் நாங்கள் பறிமுதல் செய்ய நேரிடும். அப்பொழுது மிகவும் வருத்தப்படுவீர்கள்' என்று எச்சரித்தனர். மறுபடியும் ரஸ்ஸல் அதே புன்னகையுடன், 'என்னிடம் உள்ள விலையுயர்ந்த பொருள் என்னுடைய அறிவுதான். அதைத் தாங்கள் எப்படி பறிமுதல் செய்ய முடியும்?' என்று கேட்டார். அப்போது அங்கு வந்த சிலர், 'இவர் நம்நாட்டு தத்துவஞானி ரஸ்ஸல் பெர்னாட்' என்றனர். உடனே விமான நிலைய அதிகாரிகள், 'அய்யா, எங்களை மன்னித்து விடுங்கள். நீங்கள் போகலாம்' என்று அவரை வழியனுப்பி வைத்தனர்.

ஒரு அரசின் அலுவலகங்களைக் கொண்ட மிகப் பரந்த அளவில் உருவாக்கப்பட்ட கட்டடம் பெண்டகனாகத்தான் இருக்கும். பெண்டகன் என்பது ஐந்து பக்கங்களையுடைய ஓர் அமைப்பைக் குறிக்கும்.அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை அலுவலகங்களை கொண்ட வோஷிங்டனில் உள்ள கட்டடம் ஐந்து பக்கங்களுடைய அமைப்பு. அதற்குப் பெண்டகன் என்றே பெயரிட்டுள்ளனர்.




இந்தக் கட்டடத்துக்கு 1943 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதியன்று திறப்பு விழா நடைபெற்றது. இதன் கட்டுமானச் செலவு 63 மில்லியன் டொலர்கள்.
(3,45,83000 பவுன்கள்) வேலை நாள்களில் இந்தக் கட்டடத்தில்·29 ஆயிரம் மக்கள் பணிபுரிகின்றனர். இந்தக் கட்டடத்தின் டெலிபோன் இணைப்பு 44 ஆயிரம். இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதோ 1,60 ஆயிரம் மைல்களுக்கான. 2,57,500 மீற்றர் கேபிள்கள். பெண்டகனில் டெலிபோனைக் கவனிக்கும் ஊழியர்கள் மட்டும் 220 பேர். ஒரு நாலைக்கு உத்தேசமாக 2.80 ஆயிரம் அழைப்புகளை சமாளிக்கின்றனர்.




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

பஞ்சாட்சரம் கிரிஜா தம்பதியரின் ஏகபுதல்வன்

**லதூர்சன்**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்று 2014 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

இவர் மேலும் பல உயர்வுகள் பெற்று கல்வியில் சிறந்து விளங்க பாராட்டுவதுடன், இவருக்கு கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அன்பு அக்கா, பாட்டி, அம்மம்மா மற்றும் பெரியப்பா, பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார்.

**187/2, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.**

(54596) (45.6.3)

**யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை**

**பரிசில் நாள் 04.12.2014**

**2014 இல் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்**


லி.ரஞ்சனரம்யா 174 புள்ளிகள்


பா. றனோஜன் 172 புள்ளிகள்


பா.டிலக்சன் 167 புள்ளிகள்


யோ. மதுஷா 161 புள்ளிகள்


ந.தீபநேசன் 158 புள்ளிகள்


ப. பானுஜன் 158 புள்ளிகள்


ர. டனுசியா 156 புள்ளிகள்


ச. சங்கவி 156 புள்ளிகள்


ர. சுமிர்தன் 154 புள்ளிகள்


ஜீ.தரணிகா 154 புள்ளிகள்


கு. குணாளினி 154 புள்ளிகள்

கற்பித்த ஆசிரியர்கள்


திருமதி ஜா. சுதாகரன்


திருமதி க. சிறிதரன்

**மாணவர்களின் ஏனைய சாதனைகள்**


செல்வி. சி. கபீனா - தரம் 2
திருக்குறள் மனனப்போட்டி
கோட்ட மட்டம் 5ஆம் இடம்


செல்வி. சி. தர்ஷா - தரம் 2
சித்திரப் போட்டி
கோட்ட மட்டம் 4ஆம் இடம்


செல்வி. து. டர்சிகா - தரம் 4
விரைவு கணிதப் போட்டி
கோட்ட மட்டம் 4ஆம் இடம்


செல்வன் ஜீ.சஞ்சய் - தரம் 3
விரைவு கணிதப் போட்டி
கோட்ட மட்டம் 2ஆம் இடம்
வலய மட்டம் 2ஆம் இடம்
மாகாண மட்டம் 3ஆம் இடம்

விரைவு கணிதப் போட்டிக்கு பயிற்றுவித்த ஆசிரியை


திருமதி கோ. நித்தியபவான்

(54586)(10.6.3)

இன்றைய பரிசில் நாளில் சாதனைப் படைத்த மாணவர்களைப் பாராட்டுவதுடன் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.**

**விளம்பர அனுசரணை: கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா கலாசார ஒன்றியம் - கனடா கிளை.**

# ஆக்கம் / வணிகம்

# அமெரிக்காவை ஆட்டிப்படைக்கும் நிறவெறி

■ பராய் சிடியா

மைக்கேல் பிரௌன் என்ற கருப்பின இளைஞரைச் சுட்டுக்கொன்ற பொலிஸ் அதிகாரி டேரன் வில்சன் மீது, குற்றம் சுமத்தத் தேவையில்லை என்று அமெரிக்க நீதிமன்ற ஜூரிகள் செய்த முடிவால், அமெரிக்காவின் மிசௌரி மாகாணத்தைச் சேர்ந்த ஃபெர்குசன் பகுதியே கொந்தளிப்பில் இருக்கிறது. ஜூரிகளின் முடிவு ஏமாற்றமாகத்தான் இருக்கிறது; சட்டப்படியான ஆட்சி என்பதே நம்முடைய வழிமுறையாக இருக்கிறது. எனவே, இதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று ஏமாற்றம் தொனிக்கக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் அதிபர் பராக் ஒபாமா.

ஒபாமா சொன்னதைச் சற்றே பகுத்து ஆராய்வோம். அமெரிக்க அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது, நாட்டு மக்கள் தொகையில் ஐந்தில் மூன்று பங்கினர் கருப்பர்களே. ஆனால், வாக்குரிமை என்பது நிலம் சொந்தமாக வைத்திருந்த வெள்ளையர்களுக்கு மட்டுமே தரப்பட்டிருந்தது. அமெரிக்கா சட்டப்படி நடக்கும் நாடுதான்; ஆனால், அந்தச் சட்டம் வெள்ளை இனத்தவர்களுக்கு மட்டுமே சில சலுகைகளை அளித்து வந்திருக்கிறது.

**அடையாள அங்கங்கள்**

ஒரு கொள்ளை, வழிப்பறி, அடிதடி, தீ வைப்பு, கலவரம் அல்லது கொலை போன்றவற்றில் ஈடுபட்டவர் என்று பொலிஸார் சந்தேகிக்கும்போதெல்லாம், கருப்பு நிறம், தடித்த உதடுகள், முரட்டுத்தனமான தோற்றம், நல்ல உயரம், தேக்கு மரம் போன்ற தேகம், தலையில் தொப்பி, அழுக்கான – கசங்கிய உடை என்று அடையாளங்களைக் கூறுவார்கள். அது பெரும்பாலான கருப்பின ஆண்களுக்குப் பொருந்திவிடும். வெள்ளையர்கள் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடும்போது, தொலைக்காட்சிகளிலோ வானொலியிலோ இதே போல அங்க அடையாளங்கள் விவரிக் கப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட அறிவிப்புகளுக்குப் பிறகு, சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்தப் படும்போது சுட்டுக் கொல்லப்படுவதற்கான வாய்ப்பு கருப்பினத்தவர்களைப் பொறுத்தவரை 300%. கருப்பு என்றாலே ஆபத்து அல்லவா?

டேரன் வில்சனால் சுட்டுக் கொல்லப்பட்ட கருப்பினத்தைச் சேர்ந்த மைக்கேல் பிரௌன் நல்ல பையனா? சம்பவம் நடந்த நாள் முதல் இன்று வரை இது தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. ஒரு கடையில் ஏதோ சாமானை எடுத்துக்கொண்டு, கடைக் காரரைத் தாக்கிவிட்டுத் தப்பியோடினார் என்பதே அவர் மீதான புகார். அதற்காக மட்டும் அவரை விரட்டிச்சென்று சுட்டதாக பொலிஸ் அதிகாரி கூறவில்லை, மைக்கேல் பிரௌனைப் பார்த்த போது, பேயைப் பார்த்தது போல இருந்ததாம். நியாயத்தீர்ப்பு என்பது புனிதர்களுக்கு மட்டும் வழங்கப் படக்கூடாது பேய்களுக்கும் உண்டு!

**பொறுத்தது போதும்**

ஃபெர்குசன் சம்பவம் தொடர்பான ஜூரிகளின் கருத்தைத் தொலைக்காட்சிகள் நேரடியாகவே ஒளி பரப்பின. கருப்பினத்தவர்களின் கோபம் மீண்டுமொரு மக்கள் எழுச்சிக்குக் காரணமாகிவிட்டது. இந்த எழுச்சி நாடு முழுக்கப் பரவியது. நியூயார்க் நகரில் மக்கள் ஊர்வலமாகச் சென்றார்கள், பாலங்களில் போக்குவரத்தைத் தடுப்பதற்காகத் தடுப்புகளை ஏற்படுத்தினார்கள். பத்திரிகைகளும் தொலைக் காட்சிகளும் தான் சிறிய நிகழ்ச்சியைப் பெரிது படுத்தி விட்டன என்று அதிகாரிகள் குற்றம் சாட்டினார்கள்.

ஜூரிகளில் 9 பேர் வெள்ளையர்கள், 3 பேர் கருப்பினத்தவர்கள். சந்தேகப்படும் நபரின் முதுகை நோக்கிச் சுடலாம் என்று 1979–ல் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையை ஜூரிகளின் பார்வைக்காகக் கொடுத்தார்கள். அப்படிச் செய்யக் கூடாது என்று 30 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியான ஒரு தீர்ப்பின் நகலைத் தர வசதியாக மறந்துவிட்டார்கள். வழக்கமாக ஜூரிகள் ஒரே நாளில் சாட்சியங்களையும் பிற தடயங்களையும் பார்த்துவிட்டு முடிவெடுப் பார்கள். இந்த வழக்கில் 25 நாள்களுக்கு ஆய்வு நடந்தது. 60க்கும் மேற்பட்ட சாட்சிகளை ஜூரிகள் விசாரித்தனர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் நேரில் முன்னிலையாகி, சில விளக்கங்களை அளித்தார். குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி கூட 4 மணி நேரம் தன்னுடைய தரப்பை எடுத்துரைத்தார். வழக்கமாக, அரசு வழக்கறிஞர் குற்றம்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு என்ன என்று மட்டுமே குறிப்பிடுவார். இந்த வழக்கில் அப்படி எதையுமே கூறாமல் விட்டுவிட்டார். எனவே, ஜூரிகள் எதைத் தீர்மானிக்க வேண்டும் என்று இலக்கில்லாமல் விடப்பட்டது.

**5 நிமிடத்தில் முடிய வேண்டியது**

நீதிமன்ற நடவடிக்கைகளைத் தினமும் கவனித்துச் செய்தி தரும் ஜெனிஃபர் கானர்மேன் கூறுகிறார், இம் மாதிரியான வழக்குகளில் சான்றுகளும் தடயவியல் அறிக்கைகளும் ஜூரிகளின் பார்வைக்கு விடப்படும். குற்றம்சாட்டப்பட்டவர் குற்றவாளியா இல்லையா என்று மட்டும் ஜூரிகள் வாக்களிப்பார்கள். சில சமயம் 5 நிமிடங்களில் எல்லாம் முடிந்துவிடும், இதைப் போல 3 மாதங்களுக்கு இழுத்துக்கொண்டிருக்காது.

அரசுக்கு நான் செலுத்தும் வரிப் பணம் பொலிஸ் அதிகாரிகளின் கவனக் குறைவான செயல்களால், பாதிக்கப்பட்டவர் குடும்பங்களுக்கு நஷ்டஈடாகச் செல்வதை ஏற்க முடியாது. தவறு செய்த அதிகாரி சிறைத் தண்டனையும் இல்லாமல், அபராதமும் இல்லாமல், பணியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, முழு ஓய்வூதியம் பெறுவதையும் சகித்துக் கொள்ளவே முடியாது.

சட்டப்படியான ஆட்சி நடக்கும் நாடு நம்முடையது என்ற புகழ்ச்சிகளால் ஆகப்போவது ஏதுமில்லை. அதை உண்மையிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். பழைய சட்டமானாலும் புதிய சட்டமானாலும் முறையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். நிற அடிப்படையில் பாரபட்சமான தீர்ப்பை வழங்கக் கூடாது. கருப்பர்கள் உயிர் மட் டும் முக்கியம் என்று கூறவில்லை. அனைவருடைய உயிரும் சமம் தான், முக்கியம் தான். இதைக் கடைப்பிடிக்காமல் பாசாங்கு செய்வதால் ஜனநாயகம் தழைத்து ஓங்கிவிடாது.




## விமான நிலைய ஊழியர்களுக்கு இடர் முகாமைத்துவப் பயிற்சி

உலகின் முன்னணி கடிதம் மற்றும் சரக்கு கையாள்கை சேவைகளை வழங்கும் நிறுவனமான டச் போஸ்ட் டி.எச்.எல் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியன அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து 'விபத்துக்கு தயாராக இருத்தல்' எனும் தலைப்பில் நான்கு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை முன்னெடுத்திருந்தன.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் 34 ஊழியர்களுக்கு, விமான நிலையத்தில் திடீரென ஏற்படும் இயற்கை அனர்த்தம் ஒன்றின் போது, அவர்கள் எவ்வாறு தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் இந்த பயிற்சிப்பட்டறையின் போது விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த 2ஆம் திகதி முதல் நாளை வரை இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெறுகிறது.

இந்த பயிற்சிப்பட்டறையை முன்னெடுப்பதற்கான முழுமையான உதவிகளை இடர் முகாமைத்துவ அமைச்சும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சும் வழங்கியிருந்தன.

இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எம்.எம்.மொஹமட் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய மட்டத்தில் இந்த 'விபத்துக்கு தயாராக இருத்தல் திட்டமானது அனர்த்தம் ஒன்று தொடர்பில் முன்கூட்டியே தயாரான நிலையில் இருப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இலங்கை ஒரு தீவு என்பதால் இந்த 'விபத்துக்கு தயாராக இருத்தல்' திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும். தேசிய மட்டத்தில் இடர் ஒன்று நிகழும் சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளிலிருந்து உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு அதிகளவு விமான நிலையங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

'விபத்துக்கு தயாராக இருத்தல் பயிற்சிப்பட்டறைகளின் ஊடாக டி.எச்.எல் –யு.என்.டி.பி ஆகியவற்றின் அனுபவத்தை பெற்றுக் கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம், இதன் மூலம் எமது விமான நிலையங்களை எந்த விதமான இடர்களின் போதும் அவற்றை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் பேண முடியும்– என்றார். (த)



கிளிநொச்சியை சேந்த வியாபாரி ஒருவர் கொழும்புப் பகுதியில் ரயில் மோதி உயிரிழந்தார். இவருக்கான நட்டஈடு கொடுப்பனவு 2.3 மில்லியன் ரூபா யூனியன் அசுரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தால் அவரது மனைவியிடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் நிறுவனத்தின் வவுனியா பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் க.கோகுலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச உதவி அரச அதிபர் நாகேஸ்வரன் நட்டஈடுத் தொகையைக் கையளித்தார். (த)

# விளம்பரங்கள்




## அறிமுகமாகும் சம்சுங்-ரீ1

சம்சுங் நிறுவனம் ரீ1 என்ற புதிய ஸ்மார்ட் கைப்பேசி இந்த மாதம் அறிமுகம் செய்யவுள்ளது. இந்தக் கைப்பேசியை Tizen இயங்கு தளத்தைக் அடிப்படையாகக் கொண்டு செயற்படக் கூடிய தாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
மேலும் 100 டொலர்கள் பெறுமதியான இந்தக் கைப்பேசி 4 அங்குல அளவு, 800 X 480 Pixel Resolution உடைய தொடுதிரை, 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor, பிரதான நினைவகமாக 512MB RAM என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 3.2 மெகாபிக் சல்களை உடைய கமெரா, FM Radio, GPS, 3G, WiFi, Bluetooth தொழில்நுட்பங்களும் இணைந்துள்ளன.



## ஸ்மார்ட் கைப்பட்டி விரைவில்

ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கு பதிலாகவும், உடல் ஆரோக்கியத்தைப் பேண உதவும் வகையிலும் Razer Nabu ஸ்மார்ட் கைப்பட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கைப்பட்டி இந்த மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. Android 4.3 இயங்குதளம் அல்லது அதற்கு பின்னரான பதிப்புக்களில் செயற்படக்கூடிய இந்தச் சாதனத்தை iOS, மற்றும் Android மொபைல் சாதனங்களுடன் இணைத்து பயன்படுத்த முடியும். பச்சை, வெள்ளை, கறுப்பு, ஒரேஞ் ஆகிய நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சாதனத்தின் விலை 99.99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## அன்லொக் செய்ய புதிய அப்பிளிக்கேஷன்




அப்பிளின் மொபைல் சாதனங்களில் தரப்பட்டுள்ள TouchID தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றை லொக் செய்யவும், அன்லொக் செய்யவும் புதிய அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
FingerKey என்ற இந்தப் புதிய அப்பிளிக்கேஷன் 256-bit AES என்கிரிப்ஷனை (Encryption) அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
உங்கள் மொபைல் சாதனங்களிலுள்ள இரகசியத் தரவுகளை பாதுகாக்க உதவும் இந்த அப்பிளிக்கேஷனை 1.99 அமெரிக்க டொலர்கள் செலுத்தி அப்பிளின் ஐடியூன் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

27 ஆவது வருட கல்விச் சேவையில்
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
கல்வியாண்டு-2015
தரம் 1 முதல் O/L
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.12.2014 வெள்ளி 3.00 மணி
(சி/17959) (4.6.3) புதிய அனுமதிகளை இன்றுமுதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### தேவை

1 அலுவலக உதவியாளர் (பெண்)
சிங்களம் எழுத, பேச தெரிந்திருத்தல் வேண்டும்.

2 துரித சந்தைப்படுத்தல் விற்பனைப் பிரதிநிதி

ஆவணங்களுடன் நேரில் வரவும்.

*தங்குமிடம், உணவு இலவசம்.*

(C/17976)
சுஜித் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி
071 4542019

### படிக்க, உழைக்க விசா

வேலையுடன் கூடிய படிப்பு. மலேசியா, சிங்கப்பூர், மொறிஷியஸ் நாட்டில் வேலையுடன் கூடிய படிப்பு. மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கும் வாய்ப்பு.
தொடர்பு: 076 756 1346 (சி.18118) (45.3.6)

### தேவை

யாழ்நகரில் உள்ள பிரபல மொத்த, சில்லறை கருவாட்டு கடைக்கு கணக்குத் தெரிந்த காசாளர் உடன் தேவை.
தொடர்பு: 077 116 6090,
077 230 6390 (54698) (45.3.6)

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்
கத்தி
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30



எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்
077 326 6949

### மணமகள் தேவை

* 80இல் பிறந்த 4இல் செவ்வாய், 29 பாவமுடைய லண்டன் பிரஜாஉரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த அழகான மணமகள் தேவை.
* 81இல் பிறந்த 4இல் செவ்வாய் 16 பாவமுடைய அரச வங்கியில் முகாமையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச் சோலையடி, முடாவடி.
T.P. 077 607 0862 (54597) (45.3)

### விற்பனைக்குண்டு

வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, துவிச்சக்கரவண்டி, மோட்டார் வண்டி என்பன மிகவும் மலிவான விலையில் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 808 3425 (54595) (45.3)

### வீட்டுத் தளபாடங்கள் விற்பனை

புதிதாக வாங்கப்பட்ட வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 071 869 7697 (54595) (45.3)



**ICT Classes for School Students**

*6th December 2014 to 2nd January 2015*

- *Introduction to ICT*
- *Keyboarding*
- *MS Word*
- *MS Excel*
- *MS Powerpoint*
- *Internet & Techniques*

*New Gateway Tech Branches at*
- *Jaffna,*
- *Nelliady,*
- *Chavakachcheri,*
- *Kilinochchi*

Limited Space Registration Required



NGT NEW GATEWAY TECH GATEWAY
*No. 39, College Road, Neeraviady, Jaffna. 021 221 7771*

*#1, New Market Building, Chavakacheri. 021 227 0123* (#17937)(4.3.6) *#55, Point Pedro Road, Nelliady. 021 226 2395* *Karadippokku Junction, A9 Road, Kilinochchi. 021 228 0865*

## புதிய கல்வியாண்டு - 2015

### தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

| தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை | English Medium Classes Gr. 6 - O/L |
|---|---|

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்
**தரம் 1 முதல் தரம் 5 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் — **05.12.2014 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணி**

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர் - அரியாலை.

# உலகச் செய்திகள்



உலகிலேயே மிக உயரமான மிதக்கும் கிறிஸ்மஸ் மரம் பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 85 மீற்றர் உயரமும், 542 தொன் எடையும் கொண்ட இந்த மரம், 3.1 மில்லியன் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த மிதக்கும் கிறிஸ்மஸ் மரம் லகுவா என்று பரவலாக அழைக்கப்படும் ரோட்ரிகோ டி ஃப்ரெய்டாஸ் லகூன் என்ற ஏரியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. (வ)

## சி.பி.ஐ-யின் புதிய இயக்குநராக அனில் சின்ஹா

டில்லி, டிசெ.4

மத்திய புலனாய்வுத்துறையின் புதிய இயக்குநராக பீகாரைச் சேர்ந்த அனில் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

சி.பி.ஐ இயக்குநராக இருந்த ரஞ்சித் சின்ஹா நேற்று ஓய்வு பெற்றதையடுத்து புதிய இயக்குநரை தெரிவு செய்ய பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தத், எதிர்க்கட்சி சார்பில் மல்லி கார்ஜுனே கார்கே ஆகியோர் கலந்துகொண்டனர்.

43 அதிகாரிகளின் பெயர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இறுதியில் அனில் சின்ஹா தெரிவு செய்யப்பட்டார். பீகார் மாநிலத்தைச் சேர்ந்த அவர், 1979 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். அதிகாரியாக தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## போபால் விஷவாயு கசிவு அருங்காட்சியகம் திறப்பு

உலகின் மிக மோசமான தொழிற்சாலை விபத்துக்களில் ஒன்றாகக் கருதப்படும் போபால் விஷவாயு கசிவுச் சம்பவம் நிகழ்ந்த தன் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த அருங் காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களின் புகைப்படங்கள் அடங்கிய இந்த அருங்காட்சியகம் யூனியன் கார்பைட் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள புதிய குடியிருப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விபத்து நிகழ்ந்து 30 ஆண்டுகள் ஆகியும், இதில் தொடர்புடைய குற்றவாளிகள் இதுவரை தண்டிக்கப்படாததும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு இதுவரை வழங்கப்படாததும் தான் மோசமான அந்த விபத்தை விட மோசமான நிகழ்வாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## திருமண வீட்டில் உலக சாதனை 370 பேர் உடல் தானப் பரிசு



அகமதாபாத், டிசெ.4

குஜராத்தில் நடைபெற்ற திருமணம் ஒன்றில் திருமணப் பரிசாக இரத்தம் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர். இது கின்னஸ் சாதனையாகவும் பதிவாகியுள்ளது.

குஜராத்தில் மருத்துவர் பேசானியா என்பவர் தனது மகள் தேவயானியின் திருமண நிகழ்ச்சிக்கு ஏற்பாட்டு செய்திருந்தார். மணமகன் ஜெய் பாண்ட்யாவும் மருத்துவர். உறுப்பு தான விழிப்புணர்வுக்காக திருமணத்துக்கு வருவோர் அனைவரும் திருமணப் பரிசாக இரத்தம் மற்றும் உடல் உறுப்புகளைத் தானம் செய்தனர். மேலும், அவர்களிடம் வாழ்நாளில் இரத்தம் மற்றும் உறுப்பு தானம் செய்வது குறித்து உறுதி மொழி எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இது குறித்து மருத்துவர் பேசானியா கூறுகையில்,

"எனது மகனும் மருமகளும் திருமண நாளில் ரத்த தானம் செய்தனர். நாங்கள் திருமண விழாவில் மதிப்பு மிக்க பொருளை பரிசாக வாங்குவதில்லை என்று முடிவு செய்தோம். தங்கள் வாழ்நாளில் அவர்களிடம் இரத்தம் மற்றும் உறுப்பு தானம் செய்யுமாறு உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மண மக்களும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர் –என்றார். (வ)

## ஹாங்காங் ஆதரவாளர்கள் சரணடைவதாக அறிவிப்பு

ஹாங்காங், டிசெ.4

ஹாங்காங்கில் ஜனநாயக ஆதரவுப் போராட்டம் ஆரம்பிக்கக் காரணமான 'ஆக்குபை சென்ட்ரல்' ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்த தலைவர்கள் பொலிஸாரிடம் தாம் சரணடையப் போகிறார்கள் என புதன்கிழமை அறிவித்துள்ளனர்.

பென்னி தாய், சான் கின்–மான், சூ யூ–மிங் ஆகிய அந்த மூவரும், ஹாங்காங்கில் ஜனநாயக சீர்திருத்தத்தை வலியுறுத்தி கடந்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே ஒத்துழையாமை இயக்கத்தை முன்னின்று நடத்தினர்.

எனினும், மாணவர் குழுக்களின் தீவிரப் போராட்டத்தில் அவர்கள் பின்னால் இருந்து மட்டுமே செயற்பட்டு வந்தனர்.

இந்நிலையில், ஜனநாயகத்துக்கான போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு இட்டுச் செல்லும் வகையில், பொலிஸாரிடம் சரணடையவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (வ)



அறுவை சிகிச்சை குறித்து விளக்குகின்றனர் மருத்துவர்கள்

## பிறந்த குழந்தையின் வாயில் இராட்சதக் கட்டி

சென்னை, டிசெ.4

சென்னையில் பிறந்த குழந்தையொன்றின் வாயில் இருந்து 50 கிராம் கட்டியொன்றை அறுவைச் சிகிச்சை மூலம் மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

சென்னை சூளையைச் சேர்ந்த பிறந்த பெண் குழந்தையின் வாயில் பெரிய கட்டி இருந்துள்ளது. இதனால் மூச்சுத் திணறலுடன் பால் குடிக்க முடியாமல் குழந்தை தவித்துள்ளது.

அதனை அடுத்து எழும்பூர் குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் 5 மருத்துவர்கள் கொண்ட குழு சுமார் 2 மணிநேரம் போராடி நவீன அறுவைச் சிகிச்சை மூலம் அந்தக் கட்டியை வெற்றிகரமாக அகற்றி பின்னர் ஒரு வாரம் குழந்தையை கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

இது குறித்து அறு வைச் சிகிச்சை துறைத்தலைவர் செந்தில்நாதன் கூறுகையில், இந்தக் கட்டி 50 கிராம் எடை கொண்டது. கட்டியை முழுமையாக அகற்றிவிட்டாலும், குழந்தையின் நாக்கு மற்றும் தாடையில் பிளவு உள்ளது. அந்த பிளவுகளை அடுத்த கட்ட அறுவை சிகிச்சை மூலம் ஒட்டி விடுவோம் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## செல்பி மோகம்: அதிகரிக்கிறது முகமாற்று சிகிச்சை


நியூயோர்க், டிசெ.4

அமெரிக்காவில் செல்பி மோகத்தால் முகத்தில் அறுவை சிகிச்சை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

செல்போன்களின் மூலம் தங்களைத் தாங்களே புகைப்படம் எடுக்கும் செல்பி முறை உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்துள்ளது. செல்பி எடுத்துக் கொள்வதென்பது இப்போது நாகரிகமாகி வருகிறது. பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் உலகின் மிகப்பெரிய செல்பி எடுக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன் மயானக்காவலாளி ஒருவர் அவரது தாயைப் புதைத்த இடத்தைத் தோண்டி செல்பி எடுத்துள்ளார். ஒருவர் உலகின் மிகப் பெரிய கட்டடமான புர்ஜ் கலிபாவின் உச்சியில் நின்று செல்பி எடுத்துள்ளார்.

உலகம் முழுவதும் செல்பி மோகம் அதிகமாகக் காணப்படுகிறது. தம்மைத் தாமே புகைப்படம் எடுத்துக் கொண்டது போக, தற்போது கும்பலாக சேர்ந்து குரூப்பி என்ற பெயரிலும் மக்கள் புகைப்படம் எடுக்கத் தொடங்கியுள்ளனர். செல்பி மூலம் எடுக்கப்படும் போட்டோக்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு மகிழ்கின்றனர். (வ)

# உலகச் செய்திகள்



# கென்யாவில் 36 பேர் சுட்டுக்கொலை

கென்யாவில் கல் உடைக்கும் ஆலை ஒன்றில்பணிபுரிந்து வந்த கிறிஸ்தவ தொழிலாளர்கள் 36 பேர், தீவிரவாதிகளால் நேற்று முன்தினம் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கென்யாவின் மேன்டிரா கவுண்டியில் இருந்து 10 மைல் தொலைவில் குறிப்பிட்ட கல் உடைக்கும் ஆலை உள்ளது. அங்கு பணியாற்றிய கிறிஸ்தவ தொழிலாளர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தில் நேற்றுமுன்தினம் இரவு தூங்கிக்கொண்டிருந்தனர். அங்கு துப்பாக்கிகளுடன் புகுந்த மர்மமனிதர்கள்நள்ளிரவில்அங்கிருந்தவர்களை துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டு வீழ்த்தினர். தொழிலாளர்களில் முஸ்லிம்கள் அல்லாதவர்களைத் தனிமைப்படுத்திய தீவிரவாதிகள், அவர்களில்சிலரது தலைகளைத் துண்டித்தும், எஞ்சியவர்களின் தலைகளில் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் மொத்தம் 36 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனை மேன்டிரா கவுண்டியின் ஆளுநர் அலி ரோபா உறுதி செய்துள்ளார். கடுமையான உள்நாட்டுப்போர் நடைபெற்றுவரும் சோமாலியாவுக்கு அருகிலுள்ள மண்டேரா நகரில், அல்குவைதாவோடு தொடர்புடைய ஷெபாப் தீவிரவாதிகளால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (வ)

# கறுப்பர்களைப் பொலிஸார் நியாயமாக நடத்தவில்லை

## இளைஞர்கள் இப்படி உணர்கின்றனர் என்கிறார் ஒபாமா

வொஷிங்டன், டிசெ.4

தாங்கள் நியாயமான முறையில் நடத்தப்படவில்லை என்று அமெரிக்க கறுப்பின இளைஞர்கள் கருதுவதாக அந்த நாட்டு ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டின் மிஸரி மாகாணத்தைச் சேர்ந்த பெர்குஸனில், மைக்கேல் பிரௌன் (வயது 18) என்ற கறுப்பின இளைஞர், பொலிஸ் அதிகாரி ஒருவரால் கடந்த ஓகஸ்ட் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்தச் சம்பவம் தொடர்பாக அந்த நகரில் தீ வைப்பு, பெற்றோல் குண்டு வீச்சு, சூறையாடல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன.

அந்த நகர பொலிஸ் துறையில்



வெள்ளை இனத்தவரின் ஆதிக்கம் உள்ளதாகக் குற்றம்சாட்டப்பட்டது.

இந்த நிலையில், பொலிஸ் துறை மேம்பாட்டுக்காக 26.3 கோடி டொலர்கள் நிதியுதவியை அறிவித்து ஒபாமா திங்கட்கிழமை கூறியதாவது:

கலவரங்கள் மூலம் பெர்குஸனில் வெளிப்பட்ட இளைஞர்களின் கோபம், அந்தப் பகுதிக்கு மட்டும் உரித்தானது அல்ல. நாட்டின் பிற பகுதிகளிலும், பொலிஸ்துறையின் பல்வேறு பிரிவுகளாலும் தாங்கள் நியாயமான முறையில் நடத்தப்படவில்லை என்று கறுப்பின இளைஞர்கள் கருதுகின்றனர்.

அனைவருக்கும் சமத்துவம் என்பதுதான் அமெரிக்காவின் அடிப்படைக் கோட்பாடு இருந்தபோதிலும் கறுப்பின இளைஞர்கள் அவ்வாறு கருதும் நிலை இருந்தால் அது அவர்களது பிரச்சினை மட்டுமல்ல. இந்தத் தேசத்தின் பிரச்சினையும் ஆகும்" என்றார் – அவர். (வ)

# ஐ.எஸ். தலைவரின் மனைவி- மகன் கைது

பக்தாத், டிசெ.4

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தின் தலைவரின் மனைவி மற்றும் மகனை லெபனான் நாட்டு இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல்பாக்தாதி.

அவர் சமீபத்தில் அமெரிக்கா நடத்திய வான்வழித்தாக்குதலில் இறந்ததாகச்செய்திகள்வெளியாகியன.



ஆனால் கடந்த மாதம் காணொலி ஒன்றில் தோன்றிய அவர் இஸ்லாமிய அரசை விரிவாக்க வேண்டும் என்றும், சவூதி அரேபியா மீதான தாக்குதல்களை அதிகரிக்க வேண்டும் எனவும் ஜிகாதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த நிலையில் சிரியாவை கடக்க முயன்ற அல்பாக்தாதி யின் மனைவி மற்றும் மகனை லெபனான் இராணுவம் கைது செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து லெபனான் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்; "தங்களால் கைது செய்யப்பட்டவர் பக்தாதியின் மனைவியர்களில் ஒருவர் என்றும், ஆனால் தனது பெயர் மற்றும் தான் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை அவர் கூறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக லெபனானின் பிரபல நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், அவர் தனது மகனுடன் போலி கடவுச்சீட்டுகளுடன் நாட்டை கடக்கும்போது கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



# பிரான்ஸில் வெள்ளத்தால் 5 பேர் சாவு

பரிஸ், டிசெ.4

பிரான்ஸின் தென் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்த தொடர் மழை மற்றும் பலத்த புயலால் கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தெற்கு பிரான்ஸில் கடந்த சில தினங்களாக வீசும் கடும் புயலால் பலத்த மழைபெய்து வருகிறது. இந்தத்தொடர்மழையினாலும் பலத்த புயல் காற்றினாலும் தெற்கு பிரான்ஸில் வசித்து வரும் மக்கள் பெரும் இன்னல்களுக்குஆளாகித் தவிக்கின்றனர். இந்த இயற்கைப் பேரிடரால் இதுவரை தெற்கு பிரான்ஸில் 5 பேர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும், அங்கு வசிக்கும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் இடங்களை கைவிட்டு வெளியேற வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (வ)

# இந்தியாவுடன் பேச வாய்ப்பில்லை

## பாக். பாதுகாப்பு ஆலோசகர் கருத்து

இஸ்லாமாபாத், டிசெ.4

இந்தியாவுடன் பேச்சுக்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் தேசிய பாது காப்பு ஆலோசகர் சர்தாஜ் அஜிஸ். நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். பேட்டியின்போது அவர் மேலும் கூறியதாவது:

இருநாடுகளுக்கு இடையேயான பேச்சை இந்தியாதான் நிறுத்தி வைத்துள்ளது.

எனவே, பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது என்பது இந்தியாவுடைய பொறுப்பு. காஷ்மீர் பிரச்சினையை முழுமையாகப் பேசுவதற்குப் பதிலாக, தீவிரவாதத்துக்கு எதிராக தன்னை அடையாளப்படுத்துவதன் மூலம், இந்தியா சர்வதேச நாடுகளின் கவனத்தை திசை திருப்புகிறது.

எனவே சர்வதேச நாடுகள் காஷ்மீர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது– என்றார். (வ)

# மூழ்கியது தென் கொரியக் கப்பல்: 54 பேரைக் காணவில்லை


மொஸ்கோ, டிசெ.4

தென்கொரியாவைச் சேர்ந்த மீன்பிடிக் கப்பலொன்று நேற்று முன்தினம்ரஷ்யா அருகேபேரிங் கடல் பகுதியில் மூழ்கி விபத்துக்கு உள்ளானது. அதில் பயணம்செய்தவர்களில்54பேரைக் காணவில்லை.

அவர்களை மீட்கும் பணியில் தாமதம்ஏற்பட்டுள்ளதால்அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மீன்பிடிப் படகில், 35 இந்தோனேசியர்கள், 15 பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், 11 தென் கொரியர்கள், ஒரு ரஷ்ய மீன்பிடி ஆய்வாளர் உட்பட மொத்தம் 62 பேர் பயணம் செய்தனர்.

படகு விபத்துக்குள்ளான தகவல் அறிந்ததும் தென்கொரிய மீட்புப் பிரிவினர் 7 பேரையும் ஒருவரது சடலத்தையும்மீட்டனர். பருவ நிலை மோசமாக இருந்ததால் மற்றவர்களைக் கண்டு



பிடிப்பதில்சிரமம்ஏற்பட்டது.உயிர் காக்கும் படகு ஒன்று யாரும் இல்லாமல் தனியே மிதப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

படகில் 8 உயிர்காக்கும் படகு கள் மட்டுமே இருந்துள்ளன. அதனைப் பயன்படுத்தி 7 பேர் உயிர் பிழைத்துள்ளனர்.

தனியே மிதந்த உயிர்காக்கும் படகு, இறந்த ஒருவர் பயன்படுத்தி யது என்று ஊகிக்கப்படுகிறது. கப்பல் விபத்துக்குள்ளான போது, அலைகள் 13 அடி உயரம் எழுந்துள்ளன. தட்பவெப்ப நிலை 14 டிகிரி செல்சியஸாக இருந்துள்ளது.

காணாமல் போன அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. தென் கொரிய பிரதமர்சுங்ஹாங்வொன்அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் கூறும்போது, ரஷ்யாவுடன் இணைந்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்படும் என்றார். (வ)


# பல்சுவை

## உணவுக்கட்டுப்பாடு நன்மை பயக்கும்

இராக – பற்றுதல், துவேஷ – வெறுப்பு உணர்வுகள் எம்மிடையே உருவாவதற்கு முக்கிய காரணியாக உணவு இருப்பதுடன் அகங்கார – நான் என்னும் உணர்வு, மமகார – எனது என்னும் உணர்வும் எழுவதற்குக் காரணியாக அது இருக்கின்றது.

ஆதலால் எமது சிந்தை, புத்தி நல்ல நிலையில் தொழிற்படுவதற்கு் எமது உணவை மட்டுப்படுத்திக் கொள்வது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

(நன்றி)




## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தவறுகளைத் திருத்தி வாழ்க்கையில் முன்னேறுங்கள்

எமது மதத்திலும் சரி சமூகத்திலும் சரி இருக்கும் குறைபாடுகள் அனைத்தும் வெளிப்படையாகத் தெரியக் கூடியவை. எனவே இந்தக் குறைகளை நீக்குவதற்காக அறிவும் ஆற்றலும் படைத்த அறிவாளிகள் பலர் முயலுகிறார்கள். அவர்கள் மனத்தில் சத்தியமும் நியாய உணர்ச்சியும் தேசபக்தியும் குடிகொண்டுள்ளன. தமது மதத்திலும் தெய்வத்திலும் அவர்களுக்கு நிறைய அன்பிருந்தது. எமது சமூகத்திலிருக்கும் கொடுமைகளையும் எமது மத அனுஷ்டானங்களில் இருக்கும் தவறுகளையும் கண்டு அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக தாங்கள் தவறு என நினைத்த அனைத்தையும் திருத்திக்கொள்ள முற்பட்டார்கள். இந்த அரிய ஆத்மாக்கள் போற்றுதற்குரியவர்கள் ஆவார்கள். அவர்கள் இதன்மூலம் எமக்கு மிகுந்த நன்மை செய்திருக்கிறார்கள். இனி நாம் சிதறுண்டு கிடக்கும் எமது சக்தியனைத்தையும் ஒன்று சேர்த்து இந்தப் பணியில் செலுத்தி எமது தேசத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய தருணம் இதுவாகும்.வீட்டைச் சுத்தம் செய்தாகிவிட்டது. இனி அதில் குடிபுக வேண்டும். பாதை சரிப்படுத்தப்பட்டிருக்கிறது. இனி அதில் முன்னேறிச் செல்வோமாக. எமது தேசிய வாழ்க் கைக்கு ஆதாரமானதும் நாம் அனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடியதுமான கொள்கைகளை ஆராயமுன்னர் ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனி இயல்பு இருப்பது போல் ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு தனி இயல்பு இருக்கிறது. ஆகவே அதற்கேற்ப கொள்கைகளை விதித்து செய்யும் தவறுகளை திருத்தி வாழ ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

## நாளை

**கார்த்திகை-19**
**வெள்ளிக்கிழமை**
**05.12.2014**

திதி:சதுர்த்தசி
மா.06.30வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மு.இ.11.52 வரை
சுபநேரம்: 06.16-07.46 வரை
இராகுகாலம்: 10.46-12.16 வரை
குமாராலய தீபம்
திருக்கார்த்திகை விரதம்
சர்வாலய தீபம் (வீடுகளில்தீபம்)

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 3 | | | | | | |
| 9 | | 7 | 8 | | 1 | | 3 | |
| 1 | 4 | | 5 | | 3 | | | 7 |
| 3 | | 8 | | 5 | | 9 | 4 | 2 |
| | | | | | | | | |
| 5 | 7 | 6 | | 4 | | 1 | | 3 |
| 7 | | | 4 | | 5 | | 6 | 9 |
| | 3 | | 2 | | 9 | 5 | | 8 |
| | | | | | | 3 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 |
| 4 | 7 | 1 | 8 | 2 | 5 | 3 | 9 | 6 |
| 9 | 2 | 3 | 7 | 1 | 6 | 4 | 5 | 8 |
| 8 | 1 | 7 | 2 | 4 | 9 | 6 | 3 | 5 |
| 2 | 6 | 4 | 3 | 5 | 7 | 9 | 8 | 1 |
| 3 | 5 | 9 | 6 | 8 | 1 | 7 | 4 | 2 |
| 7 | 9 | 8 | 4 | 6 | 2 | 5 | 1 | 3 |
| 1 | 3 | 6 | 5 | 9 | 8 | 2 | 7 | 4 |
| 5 | 4 | 2 | 1 | 7 | 3 | 8 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மாற்றமடைந்து வரும் இளைஞர் சமுதாயம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஒவ்வொரு சமூகமும் மிகச் சிறிய ஒரு வட்டத்துக்குள் தமது விழுமியங்களை மட்டும் நடைமுறைப்படுத்துவதாகவும், அவற்றை ஏற்றுக்கொள்வதுதான் வாழ்க்கையின் அடிப்படை எனவும் கருதிக்கொண்டது. இதனால் ஏதோ ஒரு காலகட்டத்தில் அப்போதைய சூழ்நிலைக்கு அவசியம் எனக் கருதப்பட்ட விடயங்கள் தத்துவங்களாகவும், போதனைகளாகவும் மக்கள் மனதில் மீளாய்வுக்கு அல்லது மாற்றத்திற்கு இடமளிக்கப்பட முடியாத வகையில் பதிவு செய்யப்பட்டன. இதனால் அப்போதைய இளைஞர்களால் 'ஏற்றுக்கொள்ளல்' அவசியமானது எனக் கருதப்பட வேண்டியதாயிற்று. சில சந்தர்ப்பங்களில் ஒரு சில இளைஞர்கள் எதிர்ப்பைக் காட்ட முயலும் போதெல்லாம் பலர் ஒன்று திரண்டு அந்த எதிர்ப்பை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுபவர்களாக இருந்தார்கள். எனவே அக்கால இளைஞர்களுக்கு 'ஏற்றுக்கொள்ளல்' தன்னிச்சையாகவும் தவிர்க்க முடியாததாகவும் அமைந்தது. இதனால் எமக்குத் தனித்துவம் இருந்தும் கூட, எமது சொந்தக் கருத்தை தன்னிச்சையாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. ஏனெனில் எமது கருத்துக்கள் ஒருபொழுதும் எமக்குப் போதிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராக அமையக் கூடாது என்பதில் சமூகம் மிகவும் உன்னிப்பான கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. இன்னொரு வகையில் கூறுவதாயின், ஒவ்வொரு மதமும் அதனது தத்துவங்களையும் நடைமுறைகளையும் இறுதியானதாக்கிக் கொண்டன. புதிய ஒரு கிருஷ்ணரோ அல்லது இயேசுவோ அல்லது நபிகளோ அல்லது புத்தரோ உருவாகுவதற்கு வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுவிட்டது.



ஆனால், விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொடர்பாடல் என்பவற்றின் அபரிமிதமான வளர்ச்சி உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டுவந்துள்ளது. அது மட்டுமன்றி ஒரு விடயம் பற்றிய கருத்துக்களையும், விளக்கங்களையும் பல்வேறு வகையான கோணங்களில் ஆய்வு செய்வதற்கு இக்கால இளைஞர்களுக்கு எந்தவித தடைகளுமின்றி வாய்ப்பளிக்கப்படுகின்றது. (தொடரும்)




## தோல்விதான் வெற்றி

உனது செயற்பாடுகளைச்
சோதிக்கும் உரைகள்தான் தோல்வி
உனது வெற்றிகளைத் தடுத்து
நிற்கும் தடைக்கல் அல்ல தோல்வி
உனது முயற்சிகளை முடுக்கிவிடும்
முன்னுரைதான் தோல்வி
உனது முன்னேற்றங்களை முடக்கி
வைக்கும் முடிவுரையல்ல தோல்வி
உனது சோம்பல்களைச்
செப்பனிடும் விடியல்தான் தோல்வி
உனது உயர்வுகளை வழிமறிக்கும்
அஸ்தமனமல்ல தோல்வி
உனது நம்பிக்கைகளை நிமிர
வைக்கும் நங்கூரம்தான் தோல்வி
உனது சுயவுறுதியைக் கலைத்து
விடும் சூறாவளியல்ல தோல்வி
ஆம்; தொடக்கம ;தான் தோல்வி...!
தொடர்ந்தால்தான் வெற்றி!!

04 DEC 2014




# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



### 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

## விருச்சிகம்



***விருச்சிக ராசி நேயர்களே!***

விருச்சிக ராசிக் காரர்கள் நடுத்தர உயரமும் அகன்ற நெற்றியும் அமைதியான உருவ அமைப்புடன் தோன்றினாலும் தேளில் விசத்தைப் போன்று தன்னுடைய பேச்சால் மற்றவர் மனதை புண்படுத்தி விடுவார்கள். மாநிறமும் மேற்புருவங்கள் சற்று உயர்ந்தும் காணப்படும். நடை, உடை பாவனைகளில் ஒரு கம்பீரமான தோற்றம் இருக்கும். விருச்சிக ராசிகாரர்கள் நியாய அநியாயங்களை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்டவர்கள். தேளின் குணத்தைக் கொண்டவர் என்பதால் இவர்களை மாற்றுவது அரியதாகும். பிறருக்கு எதையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இவர்களை யாரும் எளிதில் ஏமாற்றி விட முடியாது. பிறர் தவறு செய்தால் வன்மையாகக் கண்டிக்கும் இவர்கள், தன்னுடைய குற்றம் குறைகளை மறந்து விடுவார்கள். துப்பறியும் தொழிலை திறமையாகச் செய்வார்கள். இவர்களிடத்தில் எளிதில் பேசி வெற்றி பெற்றுவிட முடியாது. முன்கோபமும், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும் இருப்பதால் இவர்களிடத்தில் இருந்து ஓர் அடி விலகியே இருப்பது நல்லது. முன்பின் யோசிக்காமல் தூக்கி எறிந்து பேசி விடுவார்கள். இவர்கள் பேசுவது கஷ்டமாக இருந்தாலும் அதில் உண்மை இருக்கும் என்பதை மறுக்க முடியாது. எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் தளராது, அயராது முயன்று பாடுபடுவார்கள். என்னதான் தோல்வியை சந்தித்தாலும் தன்னுடைய முயற்சிகளில் விட்டுக் கொடுக்காமல் வெற்றி பெறுவார்கள். மற்றவர்களின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது பிறர் போற்றும் வகையில் வெற்றிபெற்று முன்னேறுவார்கள்.

கடந்த இரண்டரை வருட காலமாக உமது இராசிக்கு 12 சனி இருந்தார். இது விரயச் சனியாகும். 02.11.2014 இல் ஜென்ம இராசிக்கு வருவதால் ஜென்மச் சனியாகும். அங்கு 26.01.2017 வரை சஞ்சரிப்பார். இனி விரயங்கள் குறையும். குரு பார்வையுடன் சனி சஞ்சாரம் இருப்பதால் வியாதிகள் தீரும். கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். புதிய வண்டி, வாகனச்சேர்க்கைஉண்டு. பெண்கள் தாயார் வீட்டின் உதவிகளைப் பெறுவர். மகன் (அ) மகள் வழியில் சுப செலவுகள் வரும்.

சனி பகவானின் 03.07.10 பார்வையினால் உமது இராசிக்கு 03.07.10 ஆம் வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவானின் பார்வை உமது இராசிக்கு 3 ஆம் வீட்டில் பதிவால் கடன் ஓரளவுக்குத் தீரும். ஸ்தான பேதம் உண்டாகும். வீட்டை திருத்தி அமைப்பீர்கள். கறுத்த மனிதரால் சகாயம் கிட்டும். போக்குவரத்துச் செலவுகள் கூடும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். உமது மகன் (அ) மகள் நல்ல உத்தியோகத்தில் அமர்வர். உத்தியோகத்தில் பதவி உயர்வு பெறுவர்.

சனி பகவானின் பார்வை உமது இராசிக்கு 7 ஆம் வீட்டில் பதிவதால் கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. கணவன் மனைவி இடையில் விட்டுக்கொடுத்து போவது நலம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். சிறுசிறு ஊடல் காரணமாக பிரிந்து தம்பதிகள் இணைந்து வாழ வாய்ப்புள்ளது. புத்திர பாக்கியம் இல்லையே என வருந்தியவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும்.

சனி பகவானின் பார்வை உமது இராசிக்கு 10 ஆவது வீட்டில் பதிவதால் தந்தை நடத்திய தொழிலை ஏற்று நடத்த நேரும்.

சனி பகவானின் பார்வையில் விசேடமானது 10 ஆம் பார்வையாகும். அரசு வழி கெடுபிடிகள் குறையும். பணியாளர்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நன்று. சிலருக்கு பணிச்சுமையுடன் கூடிய இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும்.

13.07.2015 வரை குருபகவான் உமது இராசிக்கு 9 இல் இருப்பதால் முற்றிலும் நற்பலன்களே நிகழும். சிலர் வெளிநாடுகள் செல்வர். தந்தை மூலம் உதவி கிட்டும்.

14.07.2015 இல் குரு 10 இல் வருவதால் பணியில் கவனம் தேவை. அன்றாடப் பணிகளை அன்றே முடித்து விடுவது நன்று. வேலையில் பாக்கிவைக்கும் அல்லலுக்கு ஆளாக வேண்டாம்.

சற்பக் கிரகங்களான இராகு 11 ஆம் இடத்தில் தற்போது இருப்பதால் எடுக்கும் காரியம் எல்லாம் வெற்றி கொடுக்கும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். கேது 5 ஆம் இடத்தில் இருப்பதால் குடும்பத்தில் இது வரை இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும்.

**உடல் நிலை:**

உடல் நிலையில் அடிக்கடி ஏதாவது பாதிப்புகள் தோன்றி மருத்துவச் செலவுகள் உண்டாகும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிகிச்சை மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலைகளும் உண்டாகலாம். நீண்ட தூரம் பயணங்களை தவிர்த்து விடுவது நல்லது. எதிலும் கவனம் தேவை.

**உத்தியோகத்தர்கள்:**

உத்தியோக ரீதியாக அடிக்கடி வெளியூர் பயணங்கள் அதிக அலைச்சலையும் பதற்றத்தையும் சந்திக்க நேரிடும். வேலைப்பளுகூடுவதால் எதனையும் முழுமையாக செய்து முடிக்க முடியாமல் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாவீர்கள். உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது.

**மாணவர்கள்:**

மாணவர்கள் கண்ணும் கருத்துமாக செயற்படவேண்டிய காலம் ஆகும். வீண் பொழுது போக்குகளை தவிர்த்து கல்வியில் மனதை ஈடுபடுத்தினால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். தேவையற்ற நண்பர்களின் சகவாசத்தை துண்டிப்பது மிகவும் நல்லது.

**அதிர்ஷ்டக் குறிப்புகள்:**

எண் 14,24,25,89,106, கிழமை – செவ்வாய், புதன், திசை – வடக்கு நிறம் – பச்சை, சிவப்பு, கல் – மரகதம், தெய்வம் – விஷ்ணு.




# உறவுகளின் எதிர்பார்ப்பு என்ன?

அன்பும், அரவணைப்பும் நிறைந்த வாழ்க்கைதான் நிறைவானது என்று பெரும்பாலான பெண்கள் கருதுகின்றனர். தன் வாழ்க்கைத் துணைவரிடம் இருந்து வெறும் உடல் ரீதியான தொடர்பை மட்டுமே அவர்கள் விரும்புவதில்லை. நேசம் மிகுந்த வார்த்தைகளைத்தான் பெண்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். இந்த விடயம் ஆண்களுக்குத் தெரியாமல் போகும் போதுதான் கருத்து மோதல்கள் ஏற்பட்டு விரிசல்கள் தோன்றுகின்றன. பெண்களின் மனதை புரிந்து கொண்டு உரிமையோடு நேசத்தை வெளிப்படுத்தினால் உறவுகள் வலுப்படும். பேச்சுதான் பெண்களின் விருப்பத்திற்குரிய செயல். திருமணத்திற்கு முன்பு வரை உறவுகளோடும், நண்பர்களோடும் சந்தோசமாய் பேசிக்கழித்த பொழுதுகள் அடிக்கடி பெண்களின் நினைவுகளில் நிழலாடும். இது போன்ற சமயங்களில் ஆறுதலாய் பேசினால் அது பெண்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும். உங்களின் காதலையும், அன்பையும் முதலில் பேச்சின் மூலம் வெளிப்படுத்துங்கள். நடந்து கொண்டே படிப்பது எத்தனை சுகமானதோ, அது போல இல்லறத் துணையுடன் நடந்து கொண்டே பேசுவது இனிமையானது. நீண்ட தூரம் நடந்தபடி பேசுவது என்பது இருவரது மனங்களையும் இலேசாக்க உதவும் இருவரும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள, அந்த நடை பேச்சு உதவும்..தனது வாழ்க்கைத் துணைவர் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அனைத்து பெண்களுக்குமே ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். பல விடயங்களை அவர்கள் மனதுக்குள் கற்பனை செய்து பார்த்திருப்பார்கள். இந்த எதிர் பார்ப்புகளை நிறைவு செய்தாலே உறவுகளில் விரிசல் விழ வாய்ப்பில்லை.



# வீட்டில் தனியாக இருக்கும் பெண்களே...?

பொதுவாக பெண்கள் வெளியே செல்லும்போது தங்களது குடும்ப விடயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

இது அறிமுகம் இல்லாத நபர்கள் மூலம் கவனிக்கப்படலாம். காலிங் பெல் அடித்தவுடன் வாசல் கதவை உடனே திறப்பது தவறு. வந்திருப்பவர் யார் என முழுமையாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன்பின்பே வீட்டுக்குள் அனுமதிப்பது நல்லது.

தனியாக இருக் கும் பெண்கள் தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ளலாம். இது அவர்களது பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும். அருகே உள்ள பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி எண்கலை வைத்துக் கொள்ள வேண்டும்

உதயன்

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வினாசித்தம்பி உதயச்சந்திரன்**

திதி: திரயோதசி

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
எங்கள் அன்புத் தெய்வத்தின்
நினைவலைகள் நெஞ்சைவிட்டு
அகலாது நினைவுகூருகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
74, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தோற்றம் 02.04.1940 மறைவு 29.11.2005

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **குமாரசாமி பாலசுப்பிரமணியம்**

தோற்றம் 11.01.1939 மறைவு 14.12.2013


திதி: திரயோதசி

அன்பினில் சிகரமாய்
அவனியில் உதித்து
இல்லறவாழ்வில் நறுமணம் பரப்பி
உறவுகள் போற்றிடும் உத்தம கணவராய்
பிறர் துயர் துடைக்கும் பத்ம தீபமாய்
விந்தைகள் புரிந்திடும் காரிய வீரனாய்
எல்லையில்லா அரிய அன்புள்ளம் கொண்ட தந்தையாய்
இங்கிதமாய் வாழ்ந்திட்ட வேளை எம்மையெல்லாம்
தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீர்கள்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய் எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலடி வீதி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (41598)(12.3)

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அப்பாத்துரை ஞானேஸ்வரன்**

பிறப்பு 25.11.1942

இறப்பு 26.11.2012

திதி: 04.12.2014

அன்பு தந்து அரவணைத்து ஆளாக்கிய தெய்வமே!
ஆண்டவன் அடி அழைத்து ஆண்டுகள் இரண்டு ஆனதுவே!
இம்மையில் உமை இழந்தோம் - மறுமையில்
உமைக்காண்போம் எனக் காத்திருக்கிறோம்.

இணுவில் மேற்கு,
இணுவில். (54545)(45.6.3)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் லயன்

**விஜயரட்ணம் கமலநாதன்**

அன்னை மடியில்
11.06.1950

ஆண்டவன் அடியில்
08.12.2011

திதி: திரயோதசி
04.12.2014

எம்மை விட்டுச் சென்று
தரைமன் கலட்டி விநாயகர்
பெருமான் பாதம் சென்றடைந்து
ஆயிரம் நாள்கள் கடந்தாலும்
அன்பு அப்பா என்றும் உங்கள் நினைவுடன்

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை.
(54543)(4.6.3)

அன்பு மனைவி- **நந்தினி,**
ஆசைமகன் -**ஹஜனன்,**
**மற்றும் உறவினர்கள்.**

# விளம்பரங்கள்

## கூட்டுறவுப் பெரியாரின் 50ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 50ஆவது நினைவு தினம் நாளை வெள் ளிக்கிழமை நினைவு கூரப் படவுள்ளது.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ் வுக்கு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வில் வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் டபிள்யூ லலித் ஏ.பீரிஸ், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் பெரியாரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிக்கப்படவுள்ளதுடன் க.வி.விக்னேஸ்வரன் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார். அத்துடன் 'மாறி வரும் சமூக சூழ்நிலையில் அதிக நெருக்கடிக்கு உட்படுபவர்கள் வாலிபர்களா? வயோதிபர்களா?' என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றமும், சிறந்த சங்கங்களுக்கான கௌரவிப்பும் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. விழாவில் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது. (வ-10)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியரான
**நெ.காயத்திரி** அவர்களின்
அன்புத் தந்தை
**அம்பலவாணர் நெல்லிநாதலிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் (54603) (45.3.6)
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
**அருட்சகோதரி சகாயநாயகி பஸ்தியாம்பிள்ளை**
அவர்களின் அன்புச் சகோதரன்
**பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**
அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள் (54604) (45.3.6)
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்

## 29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**E.K.சண்முகநாதன்**

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்.
நைஜீரிய நிதியமைச்சின்
ஆலோசகர்)

தோற்றம் 14.12.1924

மறைவு 04.12.1985

அன்பினை ஊட்டி
அறிவினால் எம்மை வளர்த்து
பண்பு எனும் பாசத்தினால்
எம்மை வழிப்படுத்திய
எமதருமை அப்பாவே!
ஆண்டுகள் உருண்டோடினாலும்
மறக்குமோ உங்கள் நினைவுகள்

137.பலாலி வீதி,
திருநெல்வேலி. (54565) (45.3

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 01 1948



விண்ணில் 26 11 2012

**அமரர். ஸ்ரீமான் கந்தையா தர்மலிங்கம்**

தந்தையாய் எமை அரவணைத்து அரசனாய் எமை வழிநடத்தி
தோழனாய் எம் துயர் நீக்கி துணையாய் எம்முடன் இருந்து
குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்க்கையின் தத்துவத்தை
எமக்களித்த அன்பு தெய்வமே ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆண்டுகள் இரண்டு போனாலும் அப்பா என்றழைத்து மகிழ
அருகில் இல்லையே நீங்கள் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, மகன்மார், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

20C- 2/2 Fernado Gardens, Dehiwala.
Tel: 0772 543 126 | 0112 734 874

## திருத்தம்

நேற்றைய உதயனில் புதன்பொய்கை பகுதியில் வலிகாமம் கல்வி வலயத்தில் சிறந்த ஆசிரியர்கள், அதிபர்கள் கௌரவிப்பு நிகழ்வில் இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வு என்பதுக்குப் பதிலாக இணுவில் இந்துக் கல்லூரி என்று தவறுதலாக பிரசுரமாகி உள்ளது.

## விவசாய பீடத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு சமூகப்பணி

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.பல்கலைக்கழகத்தில் விவசாய பீடம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆவது ஆண்டு ஆரம்பமாவதை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சமூகப்பணிகளை முன்னெடுக்க யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

வெள்ளிவிழா ஆண்டு எனப் பிரகடனப் படுத்தப்பட்டு சூழல் பாதுகாப்புக்கான விழிப் புணர்வு, வறிய மாணவர்களின் கல்விக்கு உதவி என பல்வேறு நலத் திட்டங்களை இன்று முதல் முன்னெடுக்கவுள்ளதால் விவசாய பீடத்தில் பட்டம் பெற்று வெளியேறிய சகல பட்டதாரிகளையும் இந்தச் செயற்பாட்டில் ஒன்றிணையுமாறு விவசாய பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (வ-7)

## கண்ணீர் அஞ்சலி

யா/நுணாவில் மேற்கு,
அ.த.க.பாடசாலை அதிபர்
திருமதி **தயாநிதி ஜீவகுமார்**
அவர்களின் அன்புத் தந்தை
**சின்னத்தம்பி கந்தன்**
அவர்கள் கடந்த 30.11.2014 இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கந்தனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பாடசாலைகள் அதிபர்கள் சங்கம்.** (சி.17077) (45.3.6)

## செய்திகள்

# அமைச்சர் டலஸ் இன்று கிளிநொச்சிக்கு வருகை

கிளிநொச்சி, டிசெ.4
இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இன்று கிளிநொச்சிக்கு பயணம் செய்யவுள்ளார்.
அமைச்சின் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட மாதிரிக் கிராம மக்களின் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை ஆராயவே இவர் வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.
மு.ப. 11.30 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும் செயலமர்வில் கலந்துகொள்ளும் அமைச்சர், மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் மக்கள் சந்திப்பையும் மேற்கொள்ளவுள்ளார்.
தேசிய மனிதவள அபவிருத்தி சபையினால் மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)


நோயாளர் நலன்புரிச் சங்கம்
ஆதார வைத்தியசாலை – தெல்லிப்பழை

**சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரல்**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி விண்ணப்பம் எமது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிசங்கத்தால் கோரப்படுகின்றது. கேள்வி கோரலின் ஆரம்ப கேள்வித்தொகை மாதாந்தம் ஐம்பதாயிரம் ரூபா (50000/-) ஆகும்.
கேள்விக்கான விண்ணப்பப்படிவங்களை வைத்தியசாலையில் வேலைநாட்களில் ரூபா 200 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி : 18-12-2014.
பத்திரங்கள் திறக்கப்படும் திகதி : 19-12-2014
வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணி.

லயன் சி. ஹரிகரன்
செயலாளர்
077 9005856
071 8565540

(54607)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2014ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் **156** புள்ளிகளை பெற்று சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி செல்வி **தேவநாயகம் டன்சிகா** அவர்களை மனமுவந்து பாராட்டுவதோடு இவருக்கு கற்பித்தஆசிரியை திருமதி தெய்வீகராணி ஜெயராசா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம்
முல்லைத்தீவு
(54612)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயம்** 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் அதிபர் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

| | |
|---|---|
| சி. தனஞ்ஜை - 175 | த - சிந்துஜா - 154 |
| பே. சோபிதன் - 166 | பா - சாகித்தியன் - 153 |

அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திருவையாறு:
கிளிநொச்சி
- பெற்றோர்கள் -

CM K





# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் தமது 75வது பிறந்தநாள் விழாக்காணும் இந்த அற்புதமான தருணத்தில், கனடா திருமறைக் கலாமன்றம், தங்களது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் நன்றியையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகிறது.

2014ம் ஆண்டில், அருட்கலாநிதி மரியசேவியர் அவர்கள் ஸ்தாபித்த திருமறைக் கலாமன்றம், தனது 50வது ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ் வேளை, எங்கள் மதிப்பிற்குரிய அதிபர், ஆசான், வித்துவான், கலைத்தூது, கலாநிதி நீ. மரியசேவியர் அவர்களது வாழ்வு, மேலும் பலமடங்கு சிறந்து விளங்கவும், அதிபரின் உடல் உள நலன்கள் மென்மேலும் வளம் பெறவும், ஆசானின் எண்ணக்கருவூலங்களும் எதிர்காலத் திட்டங்களும், விரைவாக நிறைவேறவும், கனடா திருமறைக் கலாமன்றம் தங்களது ஆத்மார்த்தமான வாழ்த்துக்களை அள்ளி வழங்கி வாழ்த்துகின்றது.

எங்கள் மதிப்பிற்குரிய தங்கமகன், தமிழ்க் கலைக்கு புதிய அத்தியாயம் எழுதிய பிதாமகன், கலை மூலம் இறைபணி செய்யப் புறப்பட்டு, வெற்றியுடன் பொன்விழா ஆண்டில் கால் பதிக்கும் அரிய எங்கள் பொக்கிஷத் தமிழ் அறிஞர், அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாருக்கு எங்கள் மனம்நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

வாழ்க பல்லாண்டு, வாழ்க வளமுடன்!!

என்றும் அன்புடன்,

கனடா திருமறைக் கலாமன்றம்
ரொறன்ரோ, கனடா.

**The Centre for Performing Arts - Canada**

**திருமறைக் கலாமன்றம் - கனடா**

உதயன்

# செய்திகள்



## மாணவருக்கு உபகரணங்கள்

வலி.வடக்கு, டிசெ.4

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

புலம்பெயர் அன்பர் சண்முகநாதன் சுகிர்தா தம்பதிகளின் புதல்வன் எஸ்.தருணின் பிறந்த நாளில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தி னூடாக ஒரு தொகுதி பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயஅறநெறிப்பாடசாலைமண்டபத்தில் வைத்து உபகர ணங்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

கழகத்தின் தலைவர் செ.கீர்த்தனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டார்.

அத்துடன் நிகழ்வில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகத்தா சபைத் தலைவர் க.உதயசூரியர், செயலாளர் ந.விவேகானந்தராஜா, வலி தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உபதலைவர் எஸ்.றொபின்ஷன், பொருளாளர் அ.ஜெபநேசன், பிரதேச இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்சுகிர்தா ஆகி யோர் கலந்து கொண்டு மாண வர்களுக்கான கற்றல் உபகர ணங்களை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பெற் றோர்கள் மாண வர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ–86)

## மரண அறிவித்தல்



### திருமதி பாலசரஸ்வதி தர்மலிங்கம்

வடமராட்சி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசரஸ்வதி தர்மலிங்கம் 02.12.2014 செவ்வாய்க்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், செல்வராணி, சுகிர்தராணி, சுவர்ணசீலன், ஜெயக்குமார், சித்திரா, ஜெயக்காந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் சண்முகராஜா, செல்வராணி, சங்கீதா, சந்திரகுமார், தக்சாயினி ஆகியோரின் பாசமிகு மாமியும், சஞ்ஜீவன், உமாஜினி, ராஜீவன், சிவாஜினி, கவிதா, சுஜீவன், சுதர்சன், சிவகரன், ரமணன், அபிலக்ஷன், சத்விகா, அனுஷ், ஹரிசயந், விதுஷாந், யதுசன், மிதுசன், சிவசுதன், ஆனந்தசேரன், றணித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிஷேக், சகிதன், அக்ஷிகா, அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இரும்பு மதவடி,
ஞானியார்வளவு, வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(சி.18002)(45.6.3)

## வெள்ளத்தில் நீந்துகிறது கந்தரோடை தாழ் பகுதி

அளவெட்டி, டிசெ.3

கடந்த இரண்டு நாள்கள் இரவு பகலாகப் பெய்த கன மழை காரணமாக அளவெட்டி கந்தரோடைப் பகுதிகளின் தாழ் நிலங்கள் வெள்ளத்தால் நிரம்பி யுள்ளது. அந்தப்பகுதியில் குடி யிருக்கும் மக்கள் தமது அன் றாடக் கடமைகளை வெள் ளத்தின் ஊடாகவே வெளியே சென்று செய்யவேண் டியுள்ளது.

இதேவேளையில் அவர்களின் கால்நடைகள் கட்டிப் பராமரிக்க முடியாத நிலையும் காணப் படுகிறது. அளவெட்டி மத்தி, கணேஸ்வரம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி தெற்குப் பகுதி என்பனவும் கந்தரோடை மடத்துவெளி குடிமனைப் பகுதி களும் வெள் ளம் சூழ்ந்து காணப்படுகிறது.

அளவெட்டிப் பகுதியில் பிரதான நீர் வழிந்தோடும் வாய்க்கால் நீர் நிரம்பி வீதி மட்டத்துடன் காணப்பட்டது. வாய்க்கால்களில் ஏற்கனவே போடப்பட்டிருந்த குப்பை கூழங்களால் நீர் வழிந்தோடும் துவாரங்கள் அடைத்திருந்தமையும் இவ் வாறு வெள்ளம் தேங்குவதற்கு ஒருகாரணம். இதனால் நேற்றுக் காலையில் அந்தப்பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடி வாய்க்காலில் இறங்கி குப்பை கூளங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தமையும் காணக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக அளவெட்டிப் பகுதி கால்நடை வளர்ப்போர் கடும் மழை காரணமாக பலத்த சிரமங்களை எதிர்நோக்குவ தாகவும் கால்நடை மேய்க்கும் இடங்களில்வெள்ளம்தேங்கியுள்ளதால் அவற்றிற்கானஉணவுகளைப்பெறுவது மிகவும்கடினமாகஉள்ளதுடன் அவைகளின் பட்டிகளும் வெள் ளத்தால் சூழ்ந்து காணப் படுகிறது என்றும் கால்நடைவளர் போர் தெரிவித்தனர். (வ–36)

## ஐயப்ப யாத்திரிகர்களுக்கு விசேட விசா ஒழுங்குகள்

கொழும்பு. டிசெ.4

இலங்கையில் இருந்து கேரளாவில் உள்ள சபரிமலை ஆலயத்துக்குச் செல்லவுள்ள ஐயப்ப யாத்திரிகளுக்கு விசேட விசா ஒழுங்குகள் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்காக குழுவாக விண்ணப்பிக்கும் 'ஐயப்ப பக்தர்கள் இந்தியத்தூதரகத்தில் இலவச விசா பெற்றுக் கொள்ள முடியும். ஐயப்ப பக்தர்கள் தங்களது குருசுவாமியூடாக விண்ணப்பங்களை இந்து சமய கலாசார திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு குழுவில் 25 ஐயப்ப பக்தர்கள் இருப்பதுடன் அவர்களுடைய முழுப் பெயர்,முகவரி,அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், கையொப்பம் உட்பட்ட விவரங்கள் அடங்கி விண் ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,ஆகிய 5மாவட்டங்களைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் மாவட்டச்செயலகம் ஊடாக திணைக்களத் துக்கு கிடைக்கப் பெற்றபின்னர்யாழ்ப்பாண இந்தியத் தூதரகத்துக்கு குழுவிசாவுக்கான பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்படும்.

கண்டி,மாத்தளை,பதுளை,நுவரெலியா, மொனராகலை, ஆகிய 5 மாவட்டங்களைச்சேர்ந் தவர்கள் தத்தமது மாவட்டச் செயலகம் ஊடாக விண்ணப் பங்களை திணைக்களத்துக்குஅனுப்பிவைப்பதன்ஊடாகஇவர்களது விசாவுக்கான பரிந் துரையை கண்டியிலுள்ள இந்தி உதவித்தூதர கத்துக்கு அனுப்பி வைக் கப்படும்.

இவற்றைத்தவிர்த்து ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த வர்கள் கொழும்பில் உள்ள இந்து சமய திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (வ–14)

## கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.4

பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் 49 ஆவது வருடாந்த கலைவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் இராம நாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை சமாதான நீதவான் எஸ்.பி. காசி நாதன்தலைமையில்இடம்பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவனும் அவரது பாரியாரும்கலந்து கொள் வர். (வ)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, டிசெ 4

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச்சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதி யான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப்பேரவை நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'சைவநெறி' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.

இந்தச் சொற்பொழிவை இளைப்பாறிய பேராதனை பல் கலைக் கழகப் பேராசிரியர் பூ.சோதி நாதன் நிகழ்த்து வார். (வ–173)

## தெளிவூட்டும் கூட்டம்

அதிபர், ஆசிரியர் சேவைப் பிரமாண புதிய சுற்றறிக்கை தொடர்பில் ஆசிரியர்களுக்கு துறைசார் நிபுணர்களால் தெளிவூட்டும் கூட்டம் யாழ்.மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சம்பள அளவுத்திட்டம், அண்மையில் வெளியிடப்பட்ட ஆசிரியர் சேவைக் குறிப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் துறைசார் நிபுணர்களால் தெளிவுபடுத்தப்படவுள்ளன.

அதிபர், ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர்சங்கம்கேட்டுள்ளது.(வ–4–17)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், டிசெ. 4

தகவல் தொழில்நுட்ப வாரத்தை முன்னிட்டு யாழ்.தகவல் தொழில் நுட்ப வியாபார செயற் பாட்டு முகா மைத்துவ ஏற்றுமதி மன்றத்தின் ஆரம்பநிகழ்வாக தொழில் முனைவோருக்கான பயிற்சிப் பட்டறைநாளைவெள்ளிக்கிழமை காலை 8.45மணிக்கு யாழ் ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ள தாக கைத் தொழில் மற்றும் வணிக அமைச்சின் ஊடக செயலாளர்தெரிவித்துள்ளார். (வ–ரி)

## சமயதீட்சை வழங்கல்

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண் ண லிங்கேஸ்வரர் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு நடை பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர்அறிவித்துள்ளனர். (ஒ)

## தெல்லிப்பழை மருத்துவமனையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

அளவெட்டி டிசெ.4

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரண மாக தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனைக்கு சிகிச் சைக்காக வரும் நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மருத்துவ மனை வட்டாரம் கூறு கின்றது.

குறிப்பாக தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக ஒருவித காய்ச்சலும், இருமலும் அதிகரித்தது. இதனால் பீடிக்கப்பட்டவர்களே அதிகளவில் சிகிச்சை பெற வருகின்றனர். வெளி நோயாளர்கள் பகுதி சிகிச்சை விடுதிகள், குறிப் பாக சிறுவர் விடுதி, ஆண்கள், பெண்கள் மருத்துவ விடுதிக ளிலும் பெருமளவு நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

காய்ச்சல், இருமல் காரணமாக வருவோர் அதிகரித்துள்ளமையால் வெளி நோயாளர் பிரிவில் நெருக்கடி அதிகரித்துள்ளது. அதேபோல் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதி கரித்துள்ளதால் விடுதியிலும் நெருக்கடி காணப்படுகின்றது. நோயாளருக்காகப் போடப் பட்ட கட்டில்கள் போதாமையால் நோயாளர்கள் நிலத் திலும் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் விடுதியில் கடமைபுரியும்பணியாளர்களும் பலத்த கஷ்டங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ–36)

## ஊழலில் முன்னேறும் இலங்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4

ரான்ஸ்பரன்ஸி சர்வதேச அமைப்பினால் ஊழல் தொடர்பான தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 91 ஆவது இடத்தைப் பிடித்திருந்த இலங்கை இந்த ஆண்டு 6 இடங்கள் முன்னேறி 85 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இது இலங்கையில் தொடர்ந்தும் ஊழல் அதிகரித்து வருவதையே காட்டுவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

177 நாடுகள் இந்தக் கணிப்பீட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் இலங்கை 38 புள்ளிகளைப் பெற்று 85 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கை யுடன்,இந்தியா,பிலிப்பைன்ஸ், தாய்லாந்து உள்ளிட்ட 8 நாடுகள் 38 புள்ளிகளைப் பெற்று 85 ஆவது இடத்திலுள்ளன.

92 புள்ளிகளைப் பெற்று ஊழல் குறைந்த நாடாக டென்மார்க் பதிவாகியுள்ளதுடன்,ஊழல் தொடர் பான சுட்டெண் பட்டியலில் வடகொரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் முதலிடத்தில் திகழ்கின்றன.

50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், இலங்கையில்அரசதுறையின் ஊழல்கள் குறித்து பெரிய பிரச்சினை நிலவுவதாக, அந்த அமைப்பின் இலங்கை விவகாரங்களுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.ரணுக்கே குறிப்பிட்டுள்ளார்(த-5)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி தெய்வநாயகி கருணாகரன்

பெருமாள் கோயிலடி பின்வீதியைப் பிறப்பிடமாகவும் இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி கருணாகரன் நேற்று (03.12.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜாசிங்கம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கருணாகரனின் அன்பு மனைவியும், பாஸ்கரன், காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் சிவாஜி, மாலா, லக்சி, வசீகரன் ஆகியோ ரின் அன்புத் தாயும், றஜீகரன், பகீர்ராஜ், செல்வி, கலைச்செல்வி, றாஜினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2014) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பெருமாள் கோயிலடி பின்வீதிலுள்ள அவரது இல்லத்தில் 12.00 -1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (54610) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## சிதம்பரப்பிள்ளை பாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், (காசி விநாயகர் ஆலயம்), சுழிபுரம், பறாளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பாலகிருஸ்ணன் (02.03.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தனிப் புலிசிங்க முதலியார், இரத்தினம் தம்பதியரின் மருமகனும், நகுலாம்பாளின் அன்பு கணவரும், வித்தியா, மகிணன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனகனின் மாமனும், சாரதா தேவி, பாலசரஸ்வதி, கதிரமலைநாதன், சித்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உலகநாதன், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பறாளாய் வீதி,
சுழிபுரம். (C/18053) (19.6)

தகவல்: குடும்பத்தினர்.
021205 1754

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(சின்னத்துரை)



மாதகலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (சின்னத்துரை) 01.12.2014 இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் புதல்வனும், சுப்பிரமணியம் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி, சண்முகசுந்தரம், இலட்சுமிப்பிள்ளை, காந்திமதி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணலீலா, சாந்தகுமார், தர்மகுலசிங்கம், மகேஸ்வரன், ஞானசக்தி, ஞானபாலன், தவக்குமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராசா, பத்மராணி, மதிவதனி, செல்வராஜா, மோதிலா, விசாகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2014) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும், அத்துடன் அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாதம்பை,
மாதகல். (54609) (10.6)

தகவல்:
பெறாமகன் க.கோபாலசிங்கம்
மருமகன்-செல்வராசா.

# மரண அறிவித்தல்



## திருமதி சுப்பிரமணியம் கனகவதி

கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகவதி சுப்பிரமணியம் 03.12.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் மனோன்மணி, காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் மச்சாளும் பரராஜசிங்கம், தங்கராசா, சிறீதரன், பாஸ்கரன், சிறீரஞ்சன், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் ரஜனி காலஞ்சென்ற சுதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஜனி, சந்திரகாந்தி, சந்திரா, அசோகமாலா, சுதர்சினி ஆகியோரின் மாமியாரும் அகல்யன் , வேணிலா, அபிசனா, அபிசாந், டீஸ், சுகேஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (04.12.2014) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
13/06 கச்சேரி கிழக்கு ஒழுங்கை ,சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்



## திருமதி ரேவதிஅம்மா கிருஷ்ணபிள்ளை

கரணவாய் மேற்கு, மண்டான் ஏற்றத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேவதி அம்மா கிருஷ்ணபிள்ளை நேற்று (03.12.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணபிள்ளை யின் அன்பு மனைவியும், இராஜன் செல்வகுமார் (சுவிஸ்), சுபாஜினி (சுவிஸ்), சிவகுமார், பாலகுமார், சுகந்தினி ஆகியோரின் அன்பு தாயும், வித்தியா (சுவிஸ்), குலசிங்கம் (சுவிஸ்), கிருபாதேவி, றஜனி, யோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மகுலதேவி, திலகவதிஅம்மா ஆகியோரின் அன்பு சகோதரியும், நவரத் தினம் (பத்தமேனி, அச்சுவேலி) சுந்தையா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், மதுசனா, லக்சனா, பிரியங்கா, மிகாயா, நேத்தன், அனோயன், பிரசோன், சாருஜா, அஸ்வினி, தேனுஜா, மனோஜன், பிரவினா, கஜானா, கிசானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2014) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோளங்கன் பூவரசம் திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரேவதி அம்மா ஸ்ரோர்ஸ்,
மண்டான் ஏற்றம், கரணவாய் மேற்கு. (54594) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

## யேசுதாசன் ஜோசப் சாந்தராஜன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 859/13 ஐ வதிவிடமாகவும் கொண்ட யேசுதாசன் யோசப் சாந்தரர்சன் நேற்று (03.12.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், சரோன் பேனிற்றாவின் (ஆசிரியை சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி) அன்புக் கண வரும், மேரின் புனுசியா (உயர்தர மாணவி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) டினோசன் (மாணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு தந்தையும், பேர்னாட் ரவீந்திரன் (நோர்வே), மொறின் சாந்தினி, மேரி லுசற், மரினா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.12.2014) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்று, யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

859/13, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (54617) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

தோற்றம்
05 . 11 . 1924



மறைவு
02 . 12 . 2014

## முருகேசு முதலித்தம்பி

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு முதலித்தம்பி (02.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, ஆறுமுகம், சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசமணி மற்றும் இராசரத்தினம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் திரவியம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மைத்துனரும், கமலேஸ்வரி, தயாநிதி, அருணகிரிநாதர் (டென் மார்க்) கண்ணப்பநாதர் (நோர்வே), காலஞ்சென்ற கிருபாலினி, முருகானந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, குமாரசாமி, செல்வரஞ்சினி, மஞ்சு, சிவகாமி ஆகியோரின் மாமனும், மயூரன் ஆர்த்திகா (பிரான்ஸ்), நவநீதகுமரன் தர்சிகா (B.A) அமிர்தாஸ் கார்த்திகா (கனடா), அன்பரசி, பார்த்தீபன் (கொழும்பு), அபிராம் (பேராதனைப் பல் கலைக்கழக பொறியியல்பீட 3ஆம் வருட மாணவன்), தசாங்கினி, திணேஸ், கீர்த்தன், அஜன், அபிஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், சுபன்ஜாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுவினி மேற்கு,
இணுவில், (C/18055) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 300 2180

செய்திகள்

# தேர்தல் வேளையில் பயனாளிகள் தெரிவு

## விதிமுறைகளையும் மீறி நடக்கிறது வடக்கில்

யாழ்ப்பாணம், டிசெ. 04

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ்புதியபயனாளிகளைத்தெரிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் வாழ்வின் எழுச்சித் திணைக்கள அதிகாரிகளினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்று தேர்தல்கள் திணைக்களத்தினால்சுற்றறிக்கை வெளியிடப்பட்டமையையும் மீறி இந்தச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில்சமுர்த்திப் பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சமுர்த்தி மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சமுர்த்தித் திணைக்களம் (வாழ்வின் எழுச்சித் திணைக்களம்) வழங்கியுள்ள விசேட படிவங்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதனூடாக ஏற்கனவே சமுர்த்திக் கொடுப்பனவு பெறுவர்களுக்கான மீளாய்வும், புதிதாகச் சமுர்த்தி பெற்றுக்கொள்ளவுள்ளவர்களை இணைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் யாவும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து கடந்த மாதம் 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் ஆணையாளரினால் கடந்த மாதம் 22 ஆம் திகதி விசேட சுற்றறிக்கை விடுக்கப்பட்டிருந்தது. பி.ஆர்.ஈ /2015/43 என்ற இலக்கம் கொண்ட குறித்த சுற்றறிக்கையின் 5 ஆவது பந்தியின் 2 ஆவது உப பிரிவில்,

'இந்தக் கால எல்லைக்குள் எந்தவொரு இடத்திலும் அரசகாணியை பகிர்ந்தளித்தல், அரச காணி உறுதிகளின் அல் லது வீடுகளின் உரிமைக்கை மாற்றல்உறுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் நடவடிக்கைகள் அல்லது பயிர்ச் செய்கைக்கான மானிய உதவிகள், உரவகைகள், விவசாய உபகரணங்கள்,விளையாட்டுப் பொருள்கள்,சுயதொழிலுக்கான கருவிகள், சைக்கிள்கள், சூரிய மின்விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கானகட்டடப்பொருள்கள் போன்றவற்றைப் பகிர்ந்த ளிப்பதற்கான கருத் திட்டங்கள் மற்றும் வீட்டுக் கடன் விநியோகம் அல்லது நட்டஈட்டுத் தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்சித் திட்டங்களும் இடைநிறுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு வழங்கப்படுவதாக அரச அலுவலர்களினால் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு அவற்றுக்கான பட்டியல்கள் தயாரிக்கும் நடவடிக்கைகளும் இந்தக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்படக்கூடாது. ஏனெனில் அத்தகைய பணிகளின் ஊடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைப்பதோடு, இத்தகைய கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஜனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாகவும் முறைப் பாடுகள் கிடைக்கின்றன. மேலும் வீட்டுக் கடன் வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல், கட்டடப் பொருள்களை வழங்குவதற்கான பொருள்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படவேண்டும்.

எனினும் ஒத்திவைக்கப்பட முடியாத அவசர கருத்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள் கூட எந்தவோர் ஜனாதிபதி வேட்பாளருக்கும்விசேட அனுகூலத்தை ஏற்படுத்தாத விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான அலுவ லர்கள் மாத்திரமே அந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய தேர்தல் விதிமுறைகளை மீறியே இந்தச் செயற்திட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## உத்தியோகபூர்வ இல்லத்துக்கு கூடச் செல்ல மாட்டேன்



இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குக் கூடச் செல்ல மாட்டேன் என்று, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்ட மொன் றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குக் கூடச் செல்ல மாட்டேன். அது மட்டுமல்ல பதவியேற்று 100 நாள்களுக்குள் ஜனாதிபதிப் பதவி ஒழிக்கப் பட்டு அனைத்துக் கட்சிகள் பங்கு கொள்ளும் அரசொன்று உருவாக்கப்படும், என்று கூறினார் மைத்திரிபால சிறிசேன. (த)

## தேர்தல் பரப்புரைகளில் பங்குபற்ற வேண்டாம்

### இலங்கை வரும் பிரிட்டன் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 4

தேர்தல் பரப்புரைகளின்போது வன்முறைகள் நடைபெறும். எனவே அதில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் பிரஜைகளை அந்த நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

எந்தவொரு அரசியல் கூட்டங்கள், பேரணிகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் அரசியல் பேரணிகளிலும், தேர்தல் பரப்புரைகளிலும், காலத்துக்குக் காலம் வன்முறைகள் இடம்பெறுவதுண்டு. அத்துடன் அங்கு தீவிரவாத அச்சுறுத்தலும் உள்ளது. புலம்பெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டவர்கள் கூடும் இடங்களில் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என்று பிரிட்டன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் வடக்குக்குப் பயணம் மேற்கொள்வதற்கு வெளிநாட்டுக் கடவுச்சீட்டைக் கொண்டிருப்போருக்கு விதிக்கப்பட்டுள்ள இராணுவக் கட்டுப்பாடு குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம், எந்தக் குற்றச்சாட்டோ, நீதி விசாரணையோ இன்றி ஒருவரை நீண்டகாலத்துக்கு தடுத்து வைக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளது என்பதையும் பிரிட்டன் அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது. (த–5)

## வாக்களிப்புக்கு மரப் பெட்டிகள்

*பிளாஸ்ரிக் பெட்டிகள் இல்லை*



யாழ்ப்பாணம், டிசெ. 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது மரத்தில் செய்யப்பட்ட வாக்குப் பெட்டிகளே பயன்படுத்தப்படவுள்ளன. கடந்த முறைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் பெட்டிகள் பயன்படுத்தப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத் தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகளைக் கழுவித் தயார் செய்யும் நடவடிக்கைகளில் தேர்தல்கள் திணைக்களப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை– கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது அறிமுகப்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் பெட்டிகள் இந்த முறைத் தேர்தலின்போது பயன்படுத்தப்படமாட்டா என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த–5)

## சுயமாகச் செயற்படக் கூடிய ஆட்சிமுறையை சர்வதேச சமூகம் ஏற்று பரிந்துரைக்கவேண்டும்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 4

ஐ.நா சபையின் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளின் முடிவில், இலங்கையில் நடைபெற்ற குற்றங்களானது இனவெறியின் பாற்பட்ட – இன ஒடுக்கு முறையின் ஓர் வடிவமாக நடந்த ஒன்று என்றுகண்டறியப்படும்பட்சத்தில் 13 ஆவது திருத்தம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியாது என்ற முடிவுக்கு சர்வதேசம் வரும்.

எனவே, சுயமாக செயற்படக் கூடிய ஓர் ஆட்சிமுறையைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டு பரிந்துரைக்கும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கலாநிதிசுர்வேஸ்வரன்தெரிவித்தார்.

தென்மராட்சியில்பெண்கள் கிராமிய அபிருத்திச் சங்க உறுப்பினர்கள் மத்தியில் சுய வேலை வாய்ப்புக்கான நிதியைக் கையளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் கூறியதாவது:–

தமிழர்களாகிய நாம் இந்த மண்ணின் ஆதிக்குடிகள். ஆனால் சிங்கள பௌத்த மேலா திக்கம் அதனைப் புறந்தள்ளி எம்மை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது. பௌத்த சமயம் 2 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னர் தான் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைவேந்தன் இராவணன் ஓர் சிவ பக்தனாக இருந்தமை வெளிப்படையானது. எனவே அதற்கு முன்னர் இலங்கையில் சைவக் கடவுள்கள் தான் மக்களால் வணங்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். பௌத்தம் வந்த பின்னர் தான் சிங்கள மொழியென்பது படிப்படியாக வளர்ந்து வந்திருக் கின்றது. ஆகவே சிங்களம் இந் நாட்டில் காலத்தால் மிகவும்பிந்தியது.

#### உரிமைப் பறிப்பு

இதனுடைய விளைவாகத்தான் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் தமிழ் மக்கள் அடக்கியொடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். மொழியுரிமை பறிக்கப்பட்டது. நிலவுரிமையைப் பறித்தார்கள். வெலிஓயா (மணலாறு) திட்டம் தொடங்கி தமிழ் மக்களின் நிலங்கள் இன்று வரை தொடர்ச்சியாகப் பறிக்கப்படுகின்றன.

ஐ.நா சபை எங்களது பிரச்சினையை தீர்க்க வழி அமைக்க வேண்டும். இதற்காக எங்களுடைய குரல் தொடர்ந்து ஒலிக்க வேண்டும். – என்றார். (த–5)

04 DEC 2014

# ஆசிய பணக்காரர்களாக மஹிந்தவும் நாமலும்

## இதுதான் ஆசியாவின் அதிசயம் என்கிறார் சரத் பொன்சேகா

யாழ்ப்பாணம், டிசெ. 04

ஆசியாவிலேயே பணக்காரர்கள் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், 14 ஆவது இடத்தில் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் இருக்கின்றனர். இதுதான் ஆசியாவின் அதிசயம்.

இவ்வாறு ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



**அலரி மாளிகை சாப்பாட்டுக்கு 250 லட்சம்**

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, அலரி மாளிகைக்கான மாதாந்த உணவுச் செலவு 25 மில்லியன் ரூபா. அதைவிட பழ வகைகளுக்காக மாதம் தோறும் 5 லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

ஊழல்மிக்க ராஜபக்ஷ அரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பை விட்டுச் செல்வதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு 250 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

எங்களைத் தேசத் துரோகிகள் என்றும்- 100 நாள்களுக்குள் நாட்டைப் புலிகளிடம் கொடுக்கப் போவதாகவும் அரசு பரப்புரை செய்கிறது. ஆனால் தேசத் துரோகிகள் எங்கள் மத்தியில் இல்லை. துரோகிகளை அரசில் வைத்திருப்பது ராஜபக்ஷ ஆட்சிதான்.

பெருமளவு பொதுமக்களைக் கொன்று குவித்த கருணாவை அமைச்சராக வைத்திருக்கிறார். புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாதனுக்கு முக்கிய பிரமுகர்களுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன- என்று அவர் குறிப்பிட்டார். (த-5)





ஐந்தில் எங்கள் எதிர்காலம்... உள்ளது ரண் கெகுளு புத்தகத்தில

**5 ஆம் தர புலமைப்பரிசில் சிறார்களுக்காக இலங்கை வங்கியின் புலமைப்பரிசில்கள் 2000**

**இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமை பரிசில் - 2014 மாதிரி விண்ணப்பப் படிவம்.**

☐ ரண் கெகுளு கணக்கு புலமைபரிசில்

☐ ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமைப்பரிசில்

பிள்ளையின் முழுப் பெயர் ..............................

கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் ..............................

பாடசாலை..............................

பரீட்சை இல ..............................

2014 புலமைப் பரிசில் பரிசிட்சையில் பெற்ற புள்ளிகள் ......

மாவட்டத்தில் தரநிலை ..............................

மாவட்டம் ..............................

RKG அல்லது RKFC கணக்கிலக்கம் ..............................

கணக்கு உள்ள கிளை ..............................

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் மற்றும் முகவரி.....

தொலைபேசி இலக்கம்(இருப்பின்) ..................

தாய் / தந்தை / பாதுகாவலரின் கையொப்பம் ..................

திகதி ..............................



விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி 2014 டிசம்பர் 31

- தகைமைகள்

ரண் கெகுளு புலமைப் பரிசிலுக்கு

- இலங்கை வங்கியின் ரண் கெகுளு சிறுவர் கணக்கொன்றை வைத்திருத்தல்
- 2014 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
- பரீட்சை நடைபெற்ற தினமான (2014 ஆகஸ்ட் 17) அன்று கணக்கில் குறைந்த பட்சம் ரு 2500 இருந்திருத்தல் வேண்டும்
- பரீட்சையில் 178 புள்ளிகளை அல்லது அதற்கு மேல்பெற்றிருத்தல் அல்லது மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு அமைய மாவட்டத்தில் முதல் 10 மாணவர்களுக்கிடையே இருத்தல்.

ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமை பரிசிலுக்கு

- இலங்கை வங்கியின் வெளிநாட்டு நாணய ரண் கெகுளு கணக்கொன்றை வைத்திருத்தல்
- 2014 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
- பரீட்சை நடைபெற்ற தினத்திற்கு (2014 ஆகஸ்ட் 17) 6 மாதத்திற்கு முன் கணக்கில் குறைந்த பட்சம் அமெ.டொ 250 அல்லது அதற்கு சமனான வெளிநாட்டு பண பெறுமதியினை கொண்டிருத்தல்.

★ ரூபா இருபத்தி ஐந்தாயிரம் படி புலமைப் பரிசில் 100 இலங்கையில் அதிக புள்ளிகள் பெற்ற ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) வைத்திருப்போருக்கு வழங்கப்படும்

★ ரண் கெகுளு புலமை பரிசில் மற்றும் RKFC புலமை பரிசில் ஆகிய இரண்டிற்கும் தகுதி பெறுபவர்களுக்கு புலமைபரிசில் இரண்டும் வழங்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தகமைகள் கொண்டுள்ள இலங்கை வங்கியின் **ரண் கெகுளு மற்றும்' ரண் கெகுளு** வெளிநாட்டு நாணய சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் பிள்ளைகளின் விண்ணப்ப படிவத்தை பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**உதவிப் பொது முகாமையாளர்(சந்தைப்படுத்தல்)**
**16வது மாடி சந்தைப்படுத்தல் பிரிவு இலங்கை**
**வங்கி பிரதான காரியாலயம்**
**இலங்கை வங்கி சதுக்கம் கொழும்பு 01**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
**BOC** ரண் கெகுளு புலமைபரிசில் 2014 என அல்லது
**RKFC** புலமைபரிசிலுக்காக விண்ணப்பிரகளாயின்
**RKFC** புலமைபரிசில் 2014 என குறிப்பிடவும்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது **விண்ணப்படிவம் இணையதளத்தில் அல்லது எந்தவொரு இலங்கைவங்கி கிளையில் பெற்றுக்கொள்ளலாம்**

www.boc.lk | தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சதுக்கம்" இலக்கம் 1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01. | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


## பாரூக்கின் கட்சி தாவலுக்கு மன்னிப்புக் கோருகின்றேன்

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கை நாடாளுமன்றம் அனுப்புவதற்கு எனது வார்த்தைகளை நம்பி வாக்களித்த வன்னி மாவட்ட மக்களிடம் நான் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகிறேன். இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் பொது மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மற்றும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஆதரவாளர்களின் கருத்துக்கள்ள அறியும் விசேட பொதுக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் இடம்பெற்றது. வடமாகாண ஆளுநரின் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய ஆணையாளர் கே.விஜிந்தனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்படி அமைச்சர் மன்னிப்புக் கோரினார்.

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னுடன் சேர்த்து ஹுனைஸ் பாரூக்கையும் நானே வேட்பாளராக களமிறக்கி அவருக்கும் வாக்களிக்க வேண்டும் என அன்று நான் கேட்ட போது எந்தவிதமான மறுப்புக்களையும் தெரிவிக்காமல் நீங்கள் எங்கள் மூவருக்கும் வாக்களித்தீர்கள். நீங்கள் வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் கட்சிக்கும் எனக்கும் சொல்லாமல் இரவோடு இரவாக எதிரணியோடு இணைந்து கொண்டுள்ளார். என்னுடைய வேண்டுகோளை ஏற்று அவருக்கு வாக்களித்த மக்களிடம் அவர் மேற்கொண்ட பிழையான முடிவுக்காக மன்னிப்புக் கோருகிறேன். இன்று நாங்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் எமது கட்சியின் ஆதரவாளர்களிடையே ஆலோசனை களைக் கேட்டு எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமைக்குள் இறுதி முடிவை எடுக்க வேண்டும்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ந-10)

# பேயாக வந்தேனும் மஹிந்தவை பழிதீர்ப்பேன்

## கிராம்பே ஆனந்த தேரர் ஆவேசம்



கொழும்பு, டிசெ.4
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க முடியாது போனால், அடுத்த ஜென்மத்தில் பேயாக வந்தேனும் பழிவாங்குவேன் என்று கூறியுள்ளார் ராமன்ய பீடத்தின் அனுநாயக்க தேரர் கிராம்பே ஆனந்த தேரர்.

ப 1 விரிவு

"மஹிந்தவைத் தோற்கடிக்கும்வரை நாம் போராட்டத்தைக் கைவிடோம். இந்த ஜென்மத்தின் தோற்கடிக்க முடியாவிட்டால் அடுத்த ஜென்மத்தில் பேயாக வந்தேனும் பழிவாங்குவேன்" – என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இது ஒரு ஆச்சரியமான விடயம். அண்ணன்கள், தம்பிகள், மகன்கள், மருமகன்கள் மற்றும் வயிற்றில் இருப்பவர்களுக்குக் கூட அமைச்சுப் பதவிகள் வழங்கப்படு கின்றன. நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்ற இப்படியான அரசொன்று இதுவரை இருந்ததில்லை" – என்றும் அவர் குறிப் பிட்டார்.

"மைத்திரிபாலவின் ஜாதகம் நன்றாக உள்ளது. மஹிந்தவின் ஜாதகம் நன்றாக இல்லை. ராஜபக்ஷக்கள் தோல்வியடையத் தொடங்கி விட்டனர் " – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் பொலநறுவையில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற–5)



# மண்மேடு சரிந்து தாய், மகள் சாவு

## பொகவந்தலாவையில் மீண்டும் பரிதாபம்

கொழும்பு, டிசெ.4
பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவை லொய் னோர்ன் தோட்டத்தில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் உறக்கத்தில் இருந்த தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். இந்தக் கோரச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்துள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் முருகையா விஜயகுமாரி (வயது – 45), முருகையா துஷாரா (வயது – 19) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் பொகவந்தலவை வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சேர்க் கப்பட்டன. துஷாரியின் தந்தை கொழும்பில் வேலை செய்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# தேசிய அரசியலில் மாற்றம்

கொழும்பு, டிசெ.4
தேசிய அரசியலில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதற்கான அடித்தளம் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார். விரைவில் ஊவா மாகாண சபையிலும் மாற்றம் ஒன்று ஏற்படலாம். இந்த வார இறுதியில்தான் அதை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ற)

# மஹிந்த மீதான வழக்கு: இராணுவ சிப்பாய் விடாப்பிடி

## மீளப்பெற வற்புறுத்தியபோதும் மசியவில்லையாம்

கொழும்பு, டிசெ.4
கடந்த காலப் போரில் ஊனமுற்ற இராணுவ வீரர் ஒருவர் மஹிந்தவுக்கு எதிராகத்தான் தாக்கல் செய்திருந்த வழக்கை மீளப்பெறுவதற்கு மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போரில் ஊனமுற்ற இராணுவத்தினருக்கு அவர்கள் ஓய்வுபெறும் வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தவழக்கில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் இராணுவ தலைமை கட்டளை தளபதி என்ற காரணத்தாலுமே ஜனாதிபதிக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை மீளப்பெற வற்புறுத்திய போதும் மனுதாரர் மறுத்துவிட்டார் என்று தெரியவருகின்றது. இதனால் இந்த வழக்கு இழுபறி நிலையில் உள்ளது.

இதேவேளை – போரில் பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுமென்று அரசு அறிவித்த போதும் அப்படி எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிய வருகின்றது. இராணுவத்தின் சாதனையை காட்டி வாக்குகளை பெற்ற ஜனாதிபதி, தமக்கு அநீதி இழைப்பதாக போரில் பாதிக்கப்பட்ட இராணுவத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர். (ற)

> **போரில் ஊனமுற்ற இராணுவத்தினருக்கு அவர்கள் ஓய்வு பெறும் வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.**

# எதிர்க்கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லையாம்

## உடன்படிக்கையிலும் தெளிவில்லை சாடுகின்றது அரசு

கொழும்பு, டிசெ.4
பொது எதிரணிக்குள் கருத்தொருமைப்பாடு இல்லை. அவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில்கூட தெளிவற்றத்தன்மையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்தது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"நிறைவேற்று ஜனாதிபதி முறைமை 100 நாள்களுக்குள் நீக்கப்படும் என்று பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். ஆனால், 24 மணிநேரத்துக்குள் நீக்கப்பட வேண்டும் என்று திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு இல்லை 6 வருடங்களுக்கும் மைத்திரிபால சிறிசேனதான் ஜனாதிபதி என்று அத்துரலிய ரத்ன தேரர் கூறுகின்றார். நிலைமை இப்படி இருக்கையில், பொதுவேட்பாளர் எதை செய்யப்போகின்றார்?" – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

"இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரதான கட்சிகள் மற்றும் அமைப்புகள் கைச்சாத்திட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. பொது எதிரணியில் இருக்கும் கட்சிகளுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. சில கட்சிகள் பெயருக்கு மாத்திரமே இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுக்கு மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர். ஏனையக் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி சபையிலாவது மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனரா? அரச சார்பற்ற அமைப்புகளும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. அந்த அமைப்புகளின் நோக்கம் என்னவென்பது மக்களுக்கு நன்கு தெரியும்." – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"ஜாதிக ஹெல உறுமயவுடன் தனி உடன்படிக்கையொன்றில் மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட உள்ளார் எனக் கூறப்படுகின்றது. எனவே, பொது எதிரணிக்குள் கருத்து ஒருமைப்பாடு இல்லை. இப்படித்தான் அவர்களின் தேர்தல் பரப்புரை இருக்கின்றது" – என்றும் அவர் மேலும் அங்கு தெரிவித்தார். (ற)

# ஈழத் திட்டம் மூலம் மஹிந்தவை அகற்ற முயற்சி

கொழும்பு, டிசெ.4
சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள புதிய ஈழத் திட்ட நடைமுறை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை. பதவியில் இருந்து அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார இவ்வாறு கூறினார். "13ஆவது அரசமைப்பில் சில யோசனைகள் குறித்த ஜனாதிபதி அவதானம் செலுத்தாது வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தினார். அதன் காரணமாகவே அவர் பல சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளார்" – என்றும் வசந்த பண்டார அங்கு குறிப்பிட்டார். (ற)

# தேசிய பாதுகாப்புக்கே அதிக முக்கியத்துவம் - மைத்திரி

கொழும்பு, டிசெ.4
ஜனாதிபதியாக தான் பதவியேற்றால் நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவினால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்தக் கருத்தை குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய தனக்கு ஆதரவளிக்கவுள்ளமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

"8 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பிறகு எமது பரப்புரை நடவடிக்கைகள் யாவும் சிறப்பான வகையில் முன்னெடுக்கப்படும்.

மக்களின் நலனை கருத்தில் கொண்டு புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் நாம் கைச்சாத்திட்டுள்ளோம்.

பலர் எமது கூட்டணி குறித்து விமர்சிக்கிறார்கள். இவ்வாறான விமர்சனங்கள் வருவதொன்றும் புதிய விடயமல்ல. எது நடப்பினும் எமது மக்கள் சேவை தொடரும்" – என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் ஜனாதிபதியான ஆட்சிப் பீடம் ஏறினால் தேசிய பாதுகாப்புக் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

"முப்படைத் தளபதிகளின் ஆடைகளுக்கு கௌரவமளிப்பவன் நான். இவ்வாறானவர்கள் உணவு தயாரிப்பதையோ, உணவு பரிமாறுவதையோ நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த விடயம் குறித்து எதிர்காலத்தில் மிக அவதானத்துடன் செயற்படுவேன் –" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தொடர்ச்சிகள்

## தங்கம்

அப்பநான்சொன்னன்நகை ஒண்டும் வேணாம். இரவு அங்க நிக்க வேணாம், வெளில வாங்கோ நான் வந்து ஏத்திறன் எண்டு. அதுக்கு அவங்கள் வெளில விடமாட்டம் எண்டிட்டனமாம்" – என்று கூறினார்.

கொழும்புக்கு செல்லவென அழைக்கப்பட்டவர்கள் ஆண்கள், பெண்கள் என மூன்றுக்கும் மேற்பட்ட இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர் என்று அவர் களின் உறவினர்கள் கூறினர். நகைகள் வாங்குவதற்கு என தமது குடும்ப உறுப்பினர்களை அனுப்பிவிட்டு, என்ன செய்வது என்று தெரியாது திண்டாடுவதா கவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு இரவு தங்க வைப்பதாயின் இராணுவ முகாம்களுக்குள் தங்க வைக்க வேண்டிய தேவை இல்லை என்றும், பாடசாலைகளிலோ பொது இடங்களிலோ தங்க வைத்திருக்கலாம் என்றும் விசனம் தெரிவித்த அவர்கள், 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்கின்ற நிலையில் தாம் தற்போது உள்ளோம் என்றும் கூறினர்.

தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு 'டோக்கன்கள்' கொடுக்கப்பட்டு நள்ளிரவுக்குப் பின்னர் கொழும் புக்கு அனுப்பப்படுவர் என்று கூறப் பட்டது என்று தெரிவிக்கப்பட்ட போதும், இன்று அதிகாலை வரை யில் இராணுவ முகாம்களுக்குள் பொது மக்கள் இருந்தனர் என்றும் உறவினர்களால் கூறப்பட்டது.

அதேவேளை, போரில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளில் ஒரு தொகுதி இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்படவுள்ளது. அதற்கென வடக்கிலிருந்து ஆயிரத்து 960 பேர் ரயிலில் கொழும்புக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை, போரின் இறுதியில் இராணுவத்தினர் கைப்பற்றியிருந்தனர். அவற்றைக் கடந்த 5 வருட காலமாக இராணுவத்தினரே வைத்திருந்தனர். கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி, 419 பேருக்கு தங்க நகைகளை வழங்கியிருந்தார்.

எஞ்சிய ஆயிரத்து 960 பேருக்கு இன்று, அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி அவற்றைக் கையளிக்கவுள்ளார். மன்னாரைச் சேர்ந்த 223 பேர், வவுனியாவைச் சேர்ந்த 319 பேர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 45 பேர், கிளிநொச்சியைச் சேர்ந்த ஆயிரத்து 187 பேருக்கு தங்க நகைகள் வழங்கப்படவுள்ளன. இவ்வளவு பெரும் தொகையான மக்களை இராணுவத்தினர் ரயில் மூலம் கொழும்புக்கு ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர். இவர்கள் இன்று காலை கிளிநொச்சி மற்றும் வவுனியா ரயில் நிலையங்களிலிருந்து ஏற்றிச் செல்லப்படவுள்ளனர்.

"புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிய தமிழீழ வைப்பகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட தங்க ஆபரணங்களை உரியவர்களிடம் இராணுவம் ஒப்படைத்து வருகின்றது. பொதியில் பெயர் விவரம் குறிக்கப்பட்டிருந்ததால் அடையாளம் காண்பது இலகுவாக இருந்தது. எனினும், சிலவற்றை அடையாளம் காண்பதற்கு சிரமம் ஏற்பட்டது. இதற்காக நாம் மக்களிடம் விசாரணைகளை நடத்தினோம். இவற்றில் அடையாளம் காணப்பட்டவர்களுக்கே இன்று தங்கம் ஒப்படைக்கப்படவுள்ளது"– என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

உரிமை கோரப்படாத ஆபரணங்களை திறைசேரியிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–5,426)

## மஹிந்தவின்

காலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இரண்டு நபர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 29 ம் திகதி தனது வீட்டின் முன் பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரை உருவப் படமொன்றை வைக்க முயன்ற நபர்களுக்கு தான் எதிர்ப்பு தெரிவித்திருந்ததாக துசித வீரசிங்க தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் தனது வீட்டுக்கு வந்த திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் இந்திக்க அனுருத்த உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த 15 ஆதரவாளர்கள் தன்னை மிரட்டியதாக துசித வீரசிங்க தெரிவித்தார்.

இது தங்களது அரசு என்றும், தாங்கள் விரும்பும் இடங்களில் ஜனாதிபதியின் கட் அவுட்களை வைக்க முடியுமென்றும் திவுலப்பிட்டிய பிரதேச சபயின் தலைவர் தன்னிடம் மிரட்டியதாக துசித வீரசிங்க கூறினார்.

இதற்கு யாருக்கும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாதென்று மேலும் எச்சரித்த அவரும் அவருடன் வந்தவர்களும், வீட்டில் இருந்து வெளியே வந்த தனது இரு சகோதரர்களை தாக்கியதாகவும் கூறினார் துசித வீரசிங்க.

இது சம்பந்தமாக பொலிஸாருக்கு புகார்களை சமர்ப் பித்துள்ள போதிலும் சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு பதிவு செய்யப்பட்ட ஒன்பதாவது தேர்தல் வன்முறை சம்பவம் இதுவென தேர்தல் கண்காணிப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டு வரும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.(ற)

## இந்திய

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களே தம்மை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். தாம் பல நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம். அதனால் தமது குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. எனவே தம்மை விடுவிக்க வேண்டும் என்று அந்த மீனவர்கள் தெரிவித்துள்ளதோடு உணவு எவற்றையும் உட்கொள்ள மறுத்துவிட்டனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதர்.

"அவர்களை நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டேன். அது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மீன்பிடி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்திடம் இருந்து பதில் வரவில்லை"– என்று தெரிவித்தார். (ற–4)

## அரசு கவலையில்

ராக்குவதாகத் தெரி வித்து அரசமைப்பை மீறி பிர சாரம் மேற்கொள்கின்றார். அது மட்டுமன்றி எதிர்த்தரப்பினரையும் நன்றாக ஏமாற்றுகின்றார். அதேபோல், ஒரு பிரதமரை விலக்குவதோ அல்லது அவரது பதவியில் இன்னுமொருவரை அமர்த்துவதோ ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது. இதனை நாட்டின் சபாநாயகரே தெரிவு செய்வார். இந்தவகையில் பார்த்தால் எதிரணியினர் சுற்றிச் சுற்றி ராஜபக்ஷக்களிடமே வந்து சேர வேண்டும்.

**கவலையான விடயம்**

ஜாதிக ஹெல உறுமய பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவை, ஆதரிப்பது என்று எடுத்துள்ள முடிவானது கவலையளிக்கிறது. அவர்கள் எம்மிடம் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து நாம் ஆலோசித்தோம், இப்போதும் பரிசீலனை செய்து கொண்டேதான் இருக்கிறோம்.

அப்படிப் பார்த்தால் அவர்கள் இந்த முடிவை எடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. மிகவும் பலமான கட்சியான ஹெல உறுமயவின் முடிவு அரசிற்கு கவலையே – என்றார். (ற–5)

## ஒன்பது பேர்

ளன என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு முன்னதாக, எதிர்வரும் 7 ஆம் திகதி மதியம் 12 மணி வரையில் கட்டுப் பணம் செலுத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் கடந்த திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் கட்டுப் பணத் தைச் செலுத்தியுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கான கட்டுப் பணத்தை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்தவும், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி பால சிறி சேனவுக்கான கட்டுப் பணத்தை, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய தாஸ ராஜபக்ஷவும் செலுத்தி யுள்ளனர்.

இவர்களை விட வேறு 6 அரசியல் கட்சிகளும் இது வரையில் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன. சுயேட்சை குழுவின் சார்பில் போட்டியிடுவதற்கு ஒருவர் மாத்திரமே இதுவரை கட்டுப் பணம் செலுத்தியுள்ளார். (ற–5)

## தேர்தலை

இதுதவிர சிங்கள, தமிழ் அரசாங்க மற்றும் அரசாங்கத்தின் அனுமதியுடன் இயங்கும் தனியார் பாடசாலைகள், எதிர்வரும் வெள்ளிக்கிழமை மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி வள்ளியம்மை கதிர்காமு

அன்னைமடியில் 16.02.1937



ஆண்டவன் அடியில் 14.12.2013

திதி – 04-12-2014

வினாடிக்கு வினாடி உங்களை நினைக்க வைத்து
விண்ணுலகம் சென்று சேர்ந்து
ஆண்டொன்று பறந்தோடி போனதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா
உங்கள் உறவுக்கு ஈடாகுமா?
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து காட்டி
ஆலமரமாய் அனைவருக்கும் ஆறுதலளித்து
ஆண்டவன் அடியில் இளைப்பாறும் தாயே
ஆண்டொன்றல்ல ஆயிரமானாலும்
அழியாத ஓவியமாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்

16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தேவசுதா (நிதியா)
வடிவேற்கரசு

திதி: கார்த்திகை
திரியோதசி பூர்வபக்கம்
(04.12.2014)

தோற்றம்
02.02.1987

மறைவு
01.12.1998

கல்யாண வயதம்மா – நீயிருந்தால் இப்போது
கண்ணீர் சிந்த விட்டு. கனதூரம் சென்றதெங்கே!
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

சித்தம்பாதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

அம்மா.
வடிவேற்கரசு செல்வராணி
(வைத்தீஸ்வரன்)

[52030]

12 ஆம் ஆண்டு நினைவலைகள்

சுப்பிரமணியம் கந்தசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/சாவகச்சேரி
இந்து ஆரம்ப பாடசாலை)

தோற்றம் 14.12.1935
மறைவு 17.11.2002

திதி: திரயோதசி (04.12.2014)

ஆண்டுகள் பன்னிரண்டு ஆனபோதும் ஐயா!
உங்கள் நினைவுகள் என்றென்றும் நீங்காது
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் நீங்கள் இருந்து
எமக்காய் என்றும் ஒளி வீசினீர்கள்
பாசத்தின் உறைவிடமாய் ஊர்போற்றும் உத்தமராய் வாழ்ந்து
எங்களது உயர்வுகளுக்கு எல்லாம்
உங்கள் ஆசீர்வாதம் என்றென்றும் வேண்டும் ஐயா!



குடும்பத்தினர்.
4ஆம் குறுக்குத்தெரு, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(54987/45/63)

# டோனி, புவனேஷ் பின்னடைவு



ஐ.சி.சி ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசையில் இந்திய அணித் தலைவர் டோனி 8 ஆவது இடத்திலிருந்து 9 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

8 ஆவது இடத்தில் இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் டில்ஷான் இருக்கிறார். டி வில்லியர்ஸ் முதலிடத்திலும், விராட் கோஹ்லி தொடர்ந்து 2 ஆவது இடத்திலும் இருக்கிறார்கள்.

பந்துவீச்சாளர்கள் தர வரிசையில் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறார்.

இந்தியாவின் புவனேஸ்வர்குமார் ஓர் இடத்தை இழந்து 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். ரவீந்திர ஜடேஜா 9 ஆவது இடத்தில் உள்ளார்.

அணிகள் தர வரிசையைப் பொறுத்தவரையில் இந்திய அணி தொடர்ந்து 2 ஆவது இடத்திலேயே உள்ளது. முதலிடத்தில் ஆஸ்திரேலியா இருக்கிறது.(த)

# மெஸ்ஸியா, ரொனால்டோவா சிறந்த உதைபந்தாட்ட வீரர் ?

சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பு (பிபா) சார்பில் சிறந்த உதைபந்து வீரருக்கான விருது ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தாண்டு உதைபந்து வீரர் விருதுக்கான இறுதிப் பட்டியலில் ரொனால்டோ, மெஸ்ஸி, நுயர் இடம் பிடித்தனர். இந்த ஆண்டுக்கான 23 வீரர்கள் அடங்கிய உத்தேச பட்டியல் கடந்த ஒக்ரோபரில் பிபாவினால் வெளியிடப்பட்டது. இதிலிருந்து இறுதியாக 3 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி, ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி, போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஜேர் மனி கோல் காப்பாளர் மனுவல் நுயர் இடம் பிடித்துள் ளனர்.

இதில், ரொனால்டோ மூன்றாவது முறையாக விருது வெல்லும் முயற்சியில் உள்ளார். அதேநேரம், மெஸ்ஸி ஐந்தாவது முறையாகத் தட்டிசெல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நுயரைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற அணியில் இடம் பிடித்திருந்தார். தவிர, சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுறை விருதும் வென்றார். இதேவேளை, சிறந்த வீராங்கனை விருதுக்கான உத்தேசப் பட்டியலில் ஜேர்மனியின் நடினா, பிரேசிலின் மார்ட்டா, அமெரிக்காவின் அபே இடம்பிடித்துள்ளனர்.

இதேபோல, சிறந்த பயிற்சியாளர்களுக்கான உத்தேசப் பட்டியலில், கடந்த ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி அணியின் ஜோக்கிம் லொவ், கார்லோ (இத்தாலி), டியோகோ சிமோன் (ஆர்ஜென்ரீனா) இடம்பெற்றுள்ளனர். (த)

# இரவோடு இரவாக நேற்று அகற்றப்பட்டார் ராமநாதன்



யாழ்ப்பாணம், டிச 4

மருதனார்மடம் ராமநாதன் கல்லூரியில் நிறுவப்பட்டிருந்த ராமநாதன் சிலை நேற்று இரவோடு இரவாக வெளிக் கேற்றினைப் பூட்டிவிட்டு பைக்கோ இயந்திரம் மூலமாக அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

அரசியல்பின்புலம்காரணமாகவே அது இரவோடிரவாக அகற்றப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

குறித்த பாடசாலையின் அதிபர் கமலராணி கிருஸ்ணபிள்ளை, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் முன்னிலையில் அந்தச் சிலை நேற்றிரவு அகற்றப்பட்டுள்ளது.

குறித்த சிலையை முன்னரும் அகற்றமுற்பட்டபோதுபாடசாலையில் ஒரு தரப்பினரால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால் அது கைவிடப்பட்டது.

இந்நிலையில் அது நேற்றிரவு அகற்றப்பட்டுள்ளது. யாரும் உள்ளே செல்ல முடியாதவாறு பாடசாலையின் வெளிக் கேற்றினைப் பூட்டிவிட்டே ராமநாதனின் சிலை பைக்கோ இயந்திரம் மூலமாக அகற்றப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் அரச அமைச்சர் ஒருவர் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் வலிகாம வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராஜாவிடம் தொடர்பு கொண்ட போது அவர் தெரிவித்ததாவது:

குறித்த சிலை ஏற்கனவே கால் பகுதியில் உடைந்திருந்தது. அந்தச் சிலை ராமநாதனின் அமைப்பில்–தோற்றத்தில் காணப்படவில்லை. எனவே அதனை அகற்றி அதற்குப் பதிலாக புதியதொரு ராமநாதனின் சிலையை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கென புதிய சிலையும் செய்யப்பட்டுள்ளது. வேறு நோக்கம் எதுவுமில்லை.

அந்தச் சிலையை அகற்றுவதற்கு ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டது. ஆனால் மழை காரணமாக அகற்றுவதில் தாமதம் நிலவியது. இந்நிலையிலேயே நேற்று அது அகற்றப்பட்டது. நேற்று முன்தினம் அதனை அகற்றும் பணி தொடங்கப்பட்டது. நேற்றிரவு அதனை அகற்றினர். பாடசாலையில் காவலாளி இல்லை என்பதனால் வெளிக்கேற்றினைப் பூட்டிவிட்டிருந்தோம்–என்றார்.

சிலை அகற்றுவதில் அரசியல் பின்புலம் இருப்பது தொடர்பில் கேட்டபோது: அரசியல் பின்புலம் இருப்பதாகத் தெரியவில்லை. வேறு சிலை வைத்தால்தானே பிரச்சினை. பதிலாக ராமநாதனின் சிலை தானே வைக்கவுள்ளோம். அதில் அரசியல் பின்புலம் இல்லை–என்றார். (த-4-86)

# புலிகளால் கொல்லப்பட்டோரின் எச்சம் ஏதும் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 04

விடுதலைப் புலிகள் அமைப்பினால் படுகொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுபவர்கள் புதைக்கப்பட்ட பிரதேசங்களில் நேற்றைய தினமும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பகுதியிலுள்ள மண் மாத்திரமே தடயப் பொருளாகச் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் வேறு எந்தவொரு எச்சமும் மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நெடுங்கேணி–சமணங்குளம் எல்லைப் பகுதியிலேயே நேற்றைய தினம் தடயவியல் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்கிசைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதியாக இருந்த ஜெயரட்ணம் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 80 பேரைத் தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டுக் கொலை செய்து அவரது சடலங்களை எரித்தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விடயங்களை, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் நான்கு பேர் தெரிவித்ததாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவர்களால் குறிப்பிடப்படும் தகவல்களின் பிரகாரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் காட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடுப்பு முகாம் இயங்கியதாகச் சொல்லப்படுகின்றது. அல்பா – 2, அல்பா – 5 என்ற இரு தடுப்பு முகாம்கள் செயற்பட்டதாகவும் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 80 பேரே சுட்டுக் கொலை செய்யப்பட்டதுடன் அவர்களது சடலங்கள் டீசல் ஊற்றிச் சீனி போட்டு எரிக்கப்பட்ட தாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெரிய இத்திமடு என்ற பிரதேசத்தில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்தப்பட்டது. கொழும்பிலிருந்து வருகை தந்த இரசாயனவியல் நிபுணர்கள், தடயவியல் நிபுணர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட 9 அமைப்புகளைச் சேர்ந்தவர்களால் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது, தகவல்கள் வழங்கியதாகச் சொல்லப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரையும் சம்பவ இடத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இதன்போது குறித்த அடர் காட்டுப் பகுதியில் ஓர் இடத்தை துப்பரவு செய்து அங்குதான் எரித்ததாகக் குறிப்பிட்டுத் தேடுதல் நடத்தினர்.

இதன் போது அந்த மண்ணில் தற்போதும் டீசல் கலந்திருப்பதாகத் தெரிவித்து அதனைத் தடயப் பொருளாக எடுத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இது தொடர்பிலான பூரண விளக் கத்தை வழங் கப் பொலிஸார் மறுத்துள் ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் நெடுங்கேணி, சமணங்குளத்தில் தேடுதல் நடத்தினர். காட்டைத் துப்புரவு செய்து எரித்ததாகச் சொல்லப்படும் பகுதியிலுள்ள மண்ணை மேலதிக சோதனைக்காக எடுத்தனர். அதனை விட எந்தத் தடயத்தையும் அவர்களால் மீட்க முடியவில்லை.

இன்று, முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் தேடுதல் நடவடிக்கை தொடரவுள்ளது. குறித்த பிரதேசத்திலேயே விடுதலைப் புலிகளின் தடுப்பு முகாம் இருந்தாக, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையிலுள்ள முன்னாள் போராளி குறிப்பிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-5)

# ஆயிரக்கணக்கானோர் கண்ணீருடன் விடை பிலிப்ஸ் ஹியூக்ஸின் உடல் நேற்று அடக்கம்


அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோர்


அஞ்சலி செலுத்தும் ஆஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க்


இறுதி ஊர்வலத்தின் போது...


பந்தை வீசிய வீரர் சீன் அபாட்


இறுதி ஊர்வலத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள்


அஞ்சலி நிகழ்வின் போது:....


அஞ்சலி செலுத்தும் காட்சி...


பிலிப்ஸ் ஹியூக்ஸின் தந்தை


பிலிப்ஸ் ஹியூக்ஸின் தாய் மற்றும் சகோதரி

பவுன்சர் பந்தால் தலையின் பின்புறத்தில் காயமடைந்து உயிரிழந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப்ஸ் ஹியூக்ஸின் உடல் நேற்று ஆஸ்திரேலியாவில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வாரம் சிட்னியில் நடந்த உள்நாட்டுப் போட்டி ஒன்றில் நடந்த இந்த சம்பவத்தில் உயிரிழந்த பிலிப்ஸ் ஹியூக்ஸின் உடல் நேற்று அவரது சொந்த ஊரான மக்ஸ்வில்லில் அடக்கம் செய்யப்பட்டது.

தேசிய தொலைக்காட்சி அலை வரிசைகளில் நேரடி ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சியை நாடெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் கண்டு அஞ்சலி செலுத்தினர்.

சுமார் 80 நிமிடம் நடந்த இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொண்ட ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் ஹியூக்ஸின் நினைவாக கண்ணீர் அஞ்சலிசெலுத்தினார்.

சுமார் 1,000 பேர் இந்த நிகழ்வில் நேரடியாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் மைக்கல் கிளார்க், மேற்கிந்தியக் கிரிக்கெட் வீரர் பிரயன் லாரா, நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் சர் ரிச்சர்ட் ஹாட்லி, இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி, இந்திய அணி நிர்வாகி ரவி சாஸ்திரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிலிப்ஸ் ஹியூக்ஸின் தலையில் காயம் விளைவித்த பந்தை வீசிய வீரர் சீன் அபாட்டும் இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டார்.

இடதுகை வீரரான பிலிப்ஸ் ஹியூக்ஸ் இந்தக் கடைசி ஆட்டத்தில் காயமடையும்போது எடுத்திருந்த 63 ஓட்டங்கள், சமூக ஊடகங்களில் பெருமளவில் பேசப்பட்டது. பலர் தங்கள் வீடுகளின் முன்னர் கிரிக்கெட் மட்டைகளை வைத்து அஞ்சலி செலுத்தியிருந்தனர். (த)

## பாகிஸ்தான் ஒருநாள் அணியில் யூனிஸ்கான்



நியூஸிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கு பாகிஸ்தான் அணியில் சிரேஷ்ட வீரர் யூனிஸ்கான் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு 20/ 20 கிரிக்கெட் போட்டிகளை கொண்ட தொடர் இன்று டுபாயில் ஆரம்பமாகின்றது.

அதேவேளை இரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகளை கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் யூனிஸ் கான் இடம்பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் யூனிஸ்கான் 717 ஓட்டங்கள் குவித்தார். இதுவே அவரைத் தெரிவு செய்தமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

யூனிஸ்கானைத் தொடர்ந்து நசீர் ஜம்ஷெட், உமர் குல், ஹரிஸ் சோஹைல், பிலாவால் பாத்தி ஆகியோரும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

20/20 போட்டிக்கு சயீட் அப்ரிடி அணித் தலைவராகவும், ஒருநாள் போட்டிக்கு மிஸ்பா உல் ஹக் அணித் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(த)

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஷெப் பிளாட்டர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப்பேசினார்.



# செய்திகள்

## மூன்றாவது போட்டி இங்கிலாந்து வசம்

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் மூன்றாவது போட்டி நேற்று இடம்பெற்றது. இந்தப் போட்டி மழை காரணமாக 35 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கபட்டு இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப் பெடுத்தாடியது. இலங்கை அணியின் ஆரம்பமே தடுமாற்றமாக இருந்தது. குஷல் பெரேரா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழப்பு செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து டில்சான் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இலங்கை அணி 31 ஓட்டங்களுக்கு 3 இலக் குகளைஇழந்திருந்திருந்த வேளை. தொடர்ந்து களமிறங்கிய சங்ககாரவுடன் இணைந்துகொண்ட மத்தியூஸ் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர் 150 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை மத்தி யூஸ் 37 ஓட்டங் களைப் பெற்று ஆட்டமிழந் தார். திரிமன்னே சிறப் பாக ஆடினார், சங்ககார 63 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வந்த ஜீவன் மெண்டிஸ் 12 ஓட்டங்களையும் பெரேரா 8 ஓட்டங்களையும் பெற்றனர். பிரசாட் 22 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்தார் திரிமன்னே ஆட்ட மிழக்காமல் 62 ஓட்டங்களைப் பெற்றார்.

மழை காரணமாக 236 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஆரம்ப வீரர் களாக களமிறங்கிய அலெஸ்டர்குக்கும் மொயின் அலியும் அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர். இங்கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை வேக மாக அதி கரித்துச் செல்ல அணி 84 ஓட்டங்களைப் பெற்றி ருந்த வேளை இங்கிலாந்து அணி தனது முதலாவது இலக்கை இழந்தது. 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த குக் ஆட்டமிழந்து வெளியேறினார். 58 ஓட்டங்களுடனும் ஹேலிஸ் 27 ஓட்டங் களுடனும் ஆட்டமிழப்பு செய்யப்பட்டனர். பின்னர் இங்கிலாந்து அணியின் ஆட்டத்தில் தடுமாற்றம் ஏற்பட்டாலும் இறுதியாக ஜோடி சேர்ந்து கொண்ட றூட்டும் பட்லரும் அதிரடியாக ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழக்காது றூட் 48 ஓட்டங்க ளையும், பட்லர் 58 ஓட்டங்களையும் பெற்று இங்கிலாந்து அணியின் வெற் றிக்கு வழி வகுத்த னர். இந்த தொட ரின் மூலம் 2–1 கணக்கில் இலங்கை முன்னிலையில் உள்ளதும் குறிப்பிடத் தக்கது. (த)



25 வருட கால கல்விச் சேவையில் தனித்துவமான ஆசிரியர்களின் தரமான சேவையுடன்
விக்கினேஸ்வரா கல்வி நிலையம்
இல 109, பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில்
கல்வியாண்டு -2015
ஆரம்பம் - 06.12.2014
சனிக்கிழமை மாலை 3.30 மணி

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1
எடிசன் அக்கடமி
INTENT + EFFORT + GRACE = SUCCESS
யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | சுன்னாகம்
புதிய கல்வி ஆண்டு 2015
தரம் 6 மற்றும்
தரம் 6 முதல் O/L வரையான
English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்
ஆரம்பம்
06.12.2014, சனிக்கிழமை
யாழ் எடிசன் காலை 8.00 மணி
கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி
நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி
கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி
சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி
எங்களின் சாதனைகள்
• 1999 முதல் 15 வருடங்களாக அதிகூடிய 9A
• இன்றுவரை 140 பேர் 9A
• 3 தடவை தேசிய ரீதியில் முன்னிலை
• 7 தடவை மாவட்டத்தில் முதலிடம்
• 6 தடவை International Olympiad சாதனை
Contact 077 77 37 926 075 94 14 979
பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் ! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

40 வருட நிறைவை நோக்கி
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு - 2015
கல்வியுலகில் அன்றும் இன்றும் என்றுமே முதல் தர முன்னணி நிறுவனம்
தரம் - 06 - O/L வரை
ஆரம்பம்- 07.12.2015 (9.30மணி)
* கடமைகண்ணியம்கட்டுப்பாட்டுடன் ஒவ்வொரு பாடத் துக்கும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
* மாதாந்தம் பரீட்சை நடைபெறும்.
இன்று தொடக்கம் புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

40 வது வருட நிறைவையொட்டி மாபெரும் புலமைப் பரிசு
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு - 2015
இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் 80 புள்ளி களுக்கு மேல் பெற்ற முதல் 30 மாணவர்களுக்கு தரம் 6ற்கான கட்டணம் இலவசம்.
ஆரம்பம்- 07.12.2015 (12 மணி)
தரம் 09 இல் மாகாண மட்ட பரீட்சை எழுதிய 50 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 20 மாணவர்களுக்கு கட்டணம் இலவசம்.
இன்று தொடக்கம் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
கல்வியாண்டு 2015
தரம் 03 முதல் 11 வரை சகல பாடங்களும்
எமது "super Grade" ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது
ஆரம்பம்: 06.12.2014 சனி மாலை 3.00 மணி

விற்பனைக்கு
வன்னித் தேக்கு மரத்தினால் அரியப்பட்ட 4X3, 5X3, 5X4 வேண்டிய அளவுகளில் தேவையான அளவுக்கு தீராந்திகளும் பலகை களும் குறைந்த விலையில் பெறமுடியும்.
தொடர்புகளுக்கு- 0777286069



காணவில்லை
2 வயது, 2 அடி உயரமுள்ள ஜேர்மன் லயன் செப்பேட் அல்ஸ்சேசன் நாயை 01ஆம் திகதி இரவு முதல் காணவில்லை. அறியத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்
V.செல்வம்-
0773611282, 0770877723, 0212223817

அகரம் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டு 2015
தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும்
மல்லாகத்தில் மாலை 5.15 மணிக்கும் (தமிழ்மொழிமூல வகுப்புக்கள்)
கொக்குவிலில் மாலை 4.45 மணிக்கும் (தமிழ், ஆங்கிலமொழிமூல வகுப்புக்கள்)
கார்த்திகை தீப நன்னாளில் ( 05.12.2014 )
ஆரம்பமாகின்றன.
2013 O/L பெறுபேறுகளின் அடிப்படையில்
9A, 8A } 07மாணவர்கள்
மாவட்டநிலையிலும் மாணவி ஒருவர் முதலிடத்தினைப் பெற்றுள்ளார்.
"அகரம் எம்தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 06.12.2014 சனிக்கிழமை
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00
இப்பிரிவில் இணைவோருக்கு மட்டும்
அனுமதி, பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மட்டும் இலவசம்
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

ICT
G.C.E. (O/L), G.C.E (A/L)
யாழ். நகர் பிரபல பெண்கள் பாடசாலை ஆசிரியரின் பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் தற்போது
யாழ். நகரிலும் சாவகச்சேரியிலும்
தரம் 10, 11 மற்றும் க.பொ.த. (உ/த) தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்
கடந்த 8 வருட கற்பித்தல் அனுபவத்தில்
ஆசிரியர்: S.Gowsigan
தொடர்புகளுக்கு: 0773784053
Email : gowsivembadi@gmail.com
Note:
ஆசிரியரின் வகுப்புக்கள் தற்போது கொழும் பிலும் நடைபெறுகின்றன.
(54493)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் நெல்லிநாதலிங்கம்

(பொன்னம்பலம்)



கும்பப்பளை கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அ.நெல்லிநாதலிங்கம் (பொன்னம்பலம்) நேற்று (3.12.2014) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- திருஞானபூங்கோதை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா (ஆசிரியர்), கனகசபை, இரத்தினம் மற்றும் திருவிளங்கம் (லண்டன்), தில்லைநாதலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நன்னித்தம்பி, தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தயாபரி (கனடா), காயத்திரி (ஆசிரியை, யா/ கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா) வின் அன்பு மைத்துனரும், புஸ்பராஜா (கனடா) வின் அன்பு மாமனாரும், ஜஸ்மிகா, ஜெனோத் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (3.12.2014) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஈமக்கிரியைகள் இருபாலை இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். நெ. காயத்திரி (மகள்)
தொ.பே. 0776623571

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.